



# தினப்புயல்

PIN news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –409



## பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் சர்சைக்குரிய விடயம்

## சமகால அரசியல் பார்வை

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்

# தொல்லியல் வடிவில் அரச பயங்கரவாதம் மதக்கலவரம் வெடிக்கும் அபாயத்தில் இலங்கை




# கிழக்கில் மகாவலி ஊடாக நில அபகரிப்பு : பிள்ளையானுக்கு எதிராக சாணக்கியன், வியாழேந்திரன் போர்க்கொடி!




# பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார்

## சர்சைக்குரிய விடயம் – சமகால அரசியல் பார்வை



**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்திஆனந்தன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்**

**கேள்வி : இன்றைய சமகால அரசியல் பார்வையிலே பல்வேறுதரப்பட்ட பிரச்சனைகள் இந்த நாட்டில் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டமாக இருந்தாலும் சரி, ஜெனீவா சம்பந்தப்பட்ட பேச்சுக்கள் அல்லது உள்ளூ ராட்சிமன்ற தேர்தல் சம்பந்தப்பட்ட விடயங்கள் இவ்வாறெல்லாம் மாறி மாறி தமிழினத்தை அதுமட்டுமன்றி பௌத்த மயமாக்கல் புத்தர் சிலைகளை நிறுவுதல் போன்ற செயற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டு இருக்கின்றன. இந்த கட்டத்தில் உண்மையில் யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் உங்களது செயற்பாடுகள் அதி தீவிரமாக இந்த வன்னி மண்ணில் செயற்படுத்திய ஒருவர். அந்த வகையில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

பதில் : உண்மையில் இந்த தேர்தல் அரசாங்கம் திட்டமிட்டபடி இந்த தேர்தலை நடாத்தியிருக்க வேண்டும். ஆனால் பொருளாதார நெருக்கடியை காரணம் காட்டி தேர்தல் நடத்துவதற்கு நிதி இல்லை என கூறியதில் இருந்து இன்று உள்ளூ ராட்சி மன்ற தேர்தல் நீதிமன்றம் வரை சென்று இரண்டு தடவை ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. நான் நினைக்கின்றேன் உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடாத்துவதற்கு இன்றிருக்கின்ற ஜனாதிபதி அல்லது பிரதமர் அல்லது ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பலமாக ஆதரவு வழங்கிக்கொண்டிருக்கின்ற பொதுஜன பெரமுன கட்சியை பொறுத்தவரையில் இன்றிருக்கின்ற நிலைமையில் அரசாங்கம் உள்ளூராட்சிமன்ற தேர்தல் ஒன்றிற்கு போனால் அது எப்படியான ஒரு பிரதிபலிப்பை தங்களுக்கு வழங்கும் என்பதில் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவும் மிகத் தெளிவாக இருக்கின்றார்கள். இதை விட இலங்கையின் புலனாய்வுத்துறை அதை சார்ந்த கட்சிகள் ஏற்கனவே இந்த நாட்டிலிருந்து ஊழல் மோசடி போன்ற பல்வேறுபட்ட குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் தெற்கில் இருக்கின்ற சிங்கள மக்கள் பொதுஜன பெரமுன மீதும் ஜனாதிபதி மீதும் கடுமையான ஒரு கோபத்தில் இருக்கின்றார்கள்.

எனவே இந்த தேர்தலில் அரசாங்கம் உள்ளூ ராட்சிமன்ற தேர்தலை வைக்காது அதற்காக சொல்லப்படுகின்ற காரணம் நிதி இல்லை என்பதே. ஆனால் நிதி இல்லை என்பது பிரச்சனையில்லை தேர்தல் ஒன்றிற்கு போனால் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவும் மோசமான தோல்வியை சந்திக்க வேண்டி வரும். எனவே அதிலிருந்து தங்களை தக்கவைப்பதற்காக உள்ளூராட்சிமன்ற தேர்தலை இந்த ஆண்டுக்குள் நடாத்தாமல் அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் ஒன்றிற்கு செல்வதற்கான முயற்சியைத் தான் இன்றிருக்கின்ற அரசாங்கமானது ஜனாதிபதி தேர்தலை நோக்கித் தான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களினுடைய சகல நடவடிக்கைகளும் நகர்ந்துகொண்டிருக்கின்றது. ஆகவே ஏற்கனவே திட்டமிட்டபடி மக்களுக்கான ஜனநாயக உரிமையை இந்த அரசாங்கம் வழங்கியிருக்க வேண்டும். தேர்தலை நடாத்துவதற்கான சகல முயற்சிகளையும் செய்திருக்க வேண்டும். அதை செய்யாமல் ஜனாதிபதி தேர்தல் ஒன்றிற்கான சகல முயற்சிகளையும் தான் இன்று அவர்கள் செய்துகொண்டிருக்கின்றார்கள்.

**கேள்வி : குறிப்பாக பார்த்தால் ஐக்கிய தேசிய கட்சியும் கூட உள்ளூ ராட்சிமன்ற வேட்புமனுவிலே தாக்கல் செய்திருக்கின்றார்கள். நீங்கள் கூறியதன்படி பார்த்தால் திறைசேரியில் பணம் இல்லையென ஆரம்பத்தில் கூறப்பட்டது. ஆனால் தற்பொழுது 29.2 பில்லியன் ரூபாய் IMF இனால் வழங்கப்பட்டிருப்பதாக உத்தரவாதம் கொடுக்கப்பட்டு அதன் முதல் கட்டமாக 333 பில்லியன் ரூபாய் பணம் தற்பொழுது கொடுத்திருக்கின்றார்கள். எனவே அப்படியெனில் ஐக்கிய தேசிய கட்சியும் கூட அதில் வேட்புமனு தாக்கல் செய்திருந்தது. ஏன் உள்ளூராட்சிமன்ற தேர்தலை வைத்து ஜனநாயகத்தை இந்த நாட்டில் தொடர்ந்தும் நிலைநாட்ட முடியாது?**

பதில் : உண்மையில் நீங்கள் குறிப்பிட்டது போல் சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசாங்கத்திற்கு 29.2 பில்லியன் ரூபாய் நிதியிலே முதலாம் கட்டமாக அந்த நிதியை கொடுப்பதற்கான அனுமதியை வழங்கியிருக்கின்றது. அதே நேரம் சர்வதேச நாணய நிதியம் இந்த நிதியை கொடுப்பதற்கு முன் இலங்கை அரசாங்கத்திற்கு பல நிபந்தனைகளை விதித்திருக்கின்றது. அந்த நிபந்தனைகளில் ஒரு குறிப்பிட்டளவு அரசாங்கம் அந்த நிபந்தனைகளை நிறைவேற்றியிருக்கின்றது இன்னும் பல விடயங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கின்றது. எனவே சர்வதேச நாணய நிதியம் கொடுக்கின்ற நிதியை அவர்களினுடைய நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் அவர்கள் அந்த நிதியை பயன்படுத்த வேண்டும்.

நீங்கள் குறிப்பிட்டது போல் இன்று இருக்கின்ற எதிர்க்கட்சி கூட தொடர்ச்சியாக உள்ளூ ராட்சிமன்ற தேர்தலை நடத்த வேண்டும் அல்லது அரசாங்கத்தினுடைய ஊழல் மோசடிக்கு எதிராக குரல் கொடுத்துக்கொண்டிருந்தாலும் கூட ஆனாலும் இன்று கிட்டத்தட்ட 4 வருட காலமாக மாகாண சபைக்கான தேர்தல் இன்னும் நடைபெறாமல் இருக்கின்றது. எனவே இன்று உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்த வேண்டும் என சஜித் பிரேமதாஸவும் ஜே.வி.பி சார்ந்தவர்களும் அதில் செலுத்துகின்ற கவனம் அளவிற்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற அளவிற்கான தீவிரமான போக்கு அவர்களிடம் இல்லை.

இரண்டாவது விடயம் தமிழ் மக்களினுடைய தேசிய இனப்பிரச்சனை தொடர்பாக எதிர்கட்சி தரப்பில் இருக்கின்றவர்கள் அனுரகுமார திஸ ாநாயக்கவாக இருக்கலாம். சஜித் பிரேமதாஸ வாக இருக்கலாம் அவர்கள் சார்ந்த கட்சிகளாக இருக்கலாம் குறைந்தபட்சம் இன்று தமிழ் தேசிய பரப்பில் இருக்கின்ற தமிழ் தேசிய கூட்டமைப்பாக இருக்கக்கூடிய நாங்கள் தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கத்தையும் இந்தியா கூட கேட்கின்றது அரசியல் யாப்பில் இருக்கின்ற 13 ஆம் திருத்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என தொடர்ந்தும் இந்தியாவிடமும் இலங்கை அரசாங்கத்திடமும் வலியுறுத்தினாலும் ஆனால் இன்று பிரதான எதிர்கட்சியாக இருக்கின்ற சஜித் பிரேமதாஸவோ அல்லது அனுரகுமார திஸாநாயக்கவோ தமிழ் மக்களின் தீர்வு தொடர்பாகவும் அவர்களிடம் தெளிவான ஒரு திட்டம் இல்லை. அதே போன்று நீங்கள் கூறியது போல இந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலில் கவனம் செலுத்துமளவிற்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பாகவும் அவர்களிடம் ஒரு சரியான திட்டம் இல்லாமல் இருக்கின்றது.

**கேள்வி : 13 ஆம் திருத்த சட்டம் தொடர்பாக 13 இல் எதுவுமே இல்லை என்ற ஒரு கோரணை இருக்கின்றதல்லவா அதாவது அதிகாரங்களிலே இரண்டு அதிகாரங்கள் உள்ளன அதில் ஒன்று காணி பொலிஸ் அதிகாரம் இரண்டும் இல்லாத ஒரு மாகாண சபையை எடுப்பதில் அல்லது அதை நடத்துவதில் அதாவது உள்ளூராட்சிமன்றமும் செயலிழந்து விட்டது மாகாணசபையும் செயலிழந்துவிட்டது ஆனால் இந்தியா வலியுறுத்துவதாக கூறப்பட்டது 13 ஆம் திருத்த சட்டத்தை அமுல்படுத்துங்கள் என்று. எனவே 13 ஆம் திருத்த சட்டத்தில் இந்த இரண்டு அதிகாரங்களையும் திருத்தி அமைப்பதற்காக பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையை அங்கு கொண்டு கொண்டுவரப்பட்டு அதை நிறைவேற்றியதன் பின் 13 ஆம் திருத்த சட்டம் தொடர்பான மாகாணசபைக்குள் அதிகாரங்களை எடுப்பதற்காக மாகாணசபைத் தேர்தலை வைக்கலாம் அல்லவா?**

பதில் : உண்மையில் அரசியல் யாப்பில் இருக்கக்கூடிய இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்ட அதன் முழுமையான அதிகாரம் இன்று பல 13 ஆம் திருத்த சட்டத்தில் இருக்கின்ற பல அதிகாரங்களில் இரண்டு பிரதான கட்சிகளும் 34 வருட காலத்திற்குள் பல அதிகாரங்களை மீள பெற்றிருக்கின்றார்கள். ஆனால் நாங்கள் கேட்பது இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகின்ற பொழுது இருந்த முழுமையான அதிகாரங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். அதில் பொலிஸிற்கு உள்ள அதிகாரங்கள் இருக்கின்றது காணி தொடர்பான அதிகாரங்களும் இருக்கின்றன. எனவே அரசியல் யாப்பில் இருக்க வேண்டும் என்பது முதலாவது கட்டம் அதை நடைமுறைப்படுத்துவதாக தான் நாங்கள் அடுத்த கட்டத்தை சிந்திக்கலாம். ஆனால் இன்று 13 ஆம் திருத்த சட்டத்தையே இல்லாமல் ஒழிப்பதற்கான சகல முயற்சிகளும் நடந்துகொண்டிருக்கின்றது.

இந்தியாவில் இருக்கக்கூடிய இலங்கைக்கான தூதுவர் அவரிலிருந்து ஜே.வி.பி யில் இருந்து தெற்கில் இருக்கின்ற பௌத்த துறவிகளில் இருந்து 13 ஆம் திருத்த சட்டத்தையே இல்லாமல் ஆக்கும் சந்தர்ப்பத்தில் குறைந்தபட்சம் அரசியல் யாப்பில் இருக்கின்ற அதிகாரங்களை மாகாண சபைக்கு உட்பட்டதை நாங்கள் கையில் எடுத்துக்கொண்டு தான் அடுத்தகட்டத்தை பற்றி சிந்திக்கலாம். அப்படி இல்லையெனில் காலப்போக்கில் கூட வடக்கு கிழக்கிணைந்த மாகாண அரசாங்கத்தை தான் நாங்கள் அன்றைய காலகட்டத்தில் கொடுத்திருந்தோம். ஆனால் இன்று வடக்கு வேறு கிழக்கு வேறாக பிரிக்கப்பட்டு மாகாண சபையில் இருந்த அதிகாரங்கள் அதிலிருந்து இன்று பிடுங்கி எடுக்கப்பட்டு குறைந்தபட்சம் இன்று முக்கியமான சுகாதாரம் கல்வி தொடர்பாக இந்த மாகாணத்தில் இருக்கின்ற சில அதிகாரங்கள் தேசிய பாடசாலைகளாக மாற்றம் பெற தொடங்கவே அல்லது வைத்தியசாலைகளின் அதிகாரங்களை எடுக்க தொடங்குவது என்பதெல்லாம் எங்களுக்கான ஒரு நிரந்தர அரசியல் தீர்வை கிடைக்கின்ற வரை நாங்கள் காத்திருந்தால் பல விடயங்கள் மாகாண சபைக்கு உட்பட்ட பல அதிகாரங்கள் அதே போன்று பௌத்த மயமாக்கல் சிங்கள குடியேற்றங்கள் நில அபகரிப்புக்கள் என பலவற்றை நாம் இழக்க வேண்டி வரும். எனவே குறைந்தபட்சம் அரசியல் அமைப்பில் இருக்கின்ற அதிகாரங்களை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது தான் தமிழ் தேசிய பரப்பில் இருக்கின்ற எங்களைப் போன்ற கட்சிகள் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்ற விடயம்.

**கேள்வி : மாகாணசபை என்ற ஒன்று வடக்கு கிழக்கு மாகாணசபை இருந்த காலத்திலே பல விடங்களை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு யாப்பின் அடிப்படையில் கூட அவர்களால் சில சட்டங்களை நிறைவேற்றமுடியாது போனதாக கூறினார்கள். 12 அல்லது 14 சட்டங்களை நாங்கள் அதில் அமுல்படுத்திய பொழுதும் அதை நிறைவேற்றமுடியாத நிலைமை தான் இருக்கின்றது. எனவே ஒரு திருக்கத்தை ஏற்படுத்தாக மாகாணசபை எதற்கு?**

பதில் : முதலாவது நாங்கள் இருக்கின்ற அதிகாரங்களை கையில் எடுத்துக்கொண்டு மேலதிகமாக எங்களுக்கு தேவையான அதிகாரங்களை எடுப்பதற்கான முயற்சிகளை செய்ய வேண்டும். ஆனால் நாங்கள் கையில் இருப்பதனையே நாளாந்தம் மாறி மாறி வரும் அரசாங்கம் அதை ஈர்த்துப்போக செய்கின்றது. இன்று பார்த்தால் மாகாண சபை தேர்தல் நான்கு வருடங்களுக்கு முன் வைக்க வேண்டியதொன்று ஆனால் இன்று வரை அந்த தேர்தலை வைப்பதற்கு அரசாங்கம் தயாரில்லை.

ஏனென்றால் இன்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் கூட சுதந்திர தினத்திற்கு முன்பாக சுயேட்சையில் தான் வருவார் என கூறினார் அதே போன்று மாகாணசபை முறைமைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக கூறினார். ஆனால் அதன் பின்னர் தெற்கில் இருக்கின்ற பௌத்த துறவிகள் இந்த மாகாண சபையையோ 13 ஆம் திருத்த சட்டத்தையோ நடைமுறைப்படுத்த தொடங்கினால் நாங்கள் எல்லாவற்றையும் கிழித்தெறிவோம் என கூறி அவர்கள் கிளர்ந்தெழுந்ததன் பின் அது இன்று கைவிடப்பட்டிருக்கின்றது. எனவே நாங்கள் கையில் இருப்பதை குறைந்தபட்சம் எடுத்துக்கொண்டு தான் அடுத்தகட்டம் நகர்ந்து போக வேண்டும் என்பது தான் எங்களது நோக்கம்.



**நேர்காணல் : இரணியன்**

தொடரும்...

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## மதவாத அரசியலை தவிர்த்து பயணம் செய்ய முடியாது

இன்றைய அரசியல் சூழ்நிலையில் இலங்கைத் திருநாட்டை பொறுத்தவரையில் பௌத்த மேலாதிக்கத்தை வடக்கிலும் கிழக்கிலும் நிலை நிறுத்துவதற்கு போருக்கு பின்னர் அரசாங்கம் எடுத்துக்கொண்ட மற்றுமொரு விடயம் தான் தொல்பொருள் ஆராய்ச்சி என்பதாகும். மதவாத பிரச்சனைகள் இல்லாத நாடு இல்லை என்றே கூறமுடியும். இப் பிரச்சனை தூண்டப்படுகின்ற பொழுது தான் அதனுடைய வெளிப்பாடு பார தூரமாக அமைகின்றது. இலங்கையின் வடகிழக்கின் 98 இடங்களை தொல்பொருள் ஆராய்ச்சிக்காக இனங்காட்டியுள்ள சிங்கள பேரினவாத அரசு கட்டாய மதத்திணிப்பு ஒன்றை ஏற்படுத்த முனைகின்றது. மறுபக்கத்தில் கிறிஸ்தவ மத பரப்பலை இலங்கைத் தீவில் ஏற்படுத்த முயற்சித்து இந்தியாவிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் இருந்து வந்தவர்கள் திருப்பி அனுப்பப்பட்டார்கள். 40 க்கும் மேற்பட்ட இலங்கையில் நடத்தவிருந்த ஜெபக் கூட்டங்கள் தடுத்து நிறுத்தப்பட்டது. மட்டக்களப்பில் குறித்த தேவாலயத்தில் ஆராதனைகள் நடத்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இலங்கையில் சிவசேனை என்ற அமைப்பு இவ்வாறான மதப்பரம்பலை இலங்கை சட்டத்தின்படி தடுத்து நிறுத்தியதாக அறிவித்தது. வியாபார நோக்கிலும் கல்வி சம்பந்தமாகவும் உல்லாச பேரணிகளாகவும் ராஜதந்திரிகளாகவும் இந்த நாட்டுக்குள் வரமுடியும் என்பது சட்டம். ஆனால் இவ்வாறு உள் நுழைந்தவர்கள் இரகசியமான முறையில் மத ஆராதனைகளையும் மக்களுக்கான இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியினையும் வழங்குவது வழமையானது ஒன்று.

ஆனால் சிவசேனை என்ற ஒரு அமைப்பு இதனை தடுத்து நிறுத்தியதற்கு சமய ஒன்றிய அமைப்பு இதற்கு கண்டனம் தெரிவித்திருக்கின்றன. மதச் சுதந்திரம் என்பது இந்த நாட்டில் இருக்கின்றது யுத்தம் நிறைவடைந்து 13 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் தற்பொழுது இந்த நாட்டில் போதைப்பொருள் பாவிப்பதற்கும் ஏனைய துஸ்பிரயோகங்களிற்கும் மக்கள் அடிமையாகி செல்கின்றார்கள். எனவே மத மாற்றத்திற்காக அல்ல ஒருவரது மன மாற்றத்திற்காகவே அவர்கள் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியினை போதிக்க வருகின்றார்கள். எல்லாவற்றிற்கும் எதிர்ப்புக்களை வெளியிட்டால் மத நல்லிணக்கம் என்ற ஒரு விடயத்தை கொண்டு செல்ல முடியாது என்று இந்த அமைப்பு குறிப்பிட்டிருக்கின்றது. ஆனால் இற்றைக்கு 2 வருடங்களிற்கு முன்பு திருக்கேதீஸ்வர வளைவு நிர்மானிக்கப்பட்ட பொழுது அதனை மன்னார் பாதிரிமார் முன்னிலையில் அடித்து நொருக்கினர். இதனை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மத ஒன்றியத் தலைவர்கள், புத்தி ஜீவிகள் எவரும் மன்னார் கத்தோலிக்கர்கள் செய்தது தவறு என்பதனை சுட்டிக்காட்டி ஆர்ப்பாட்டங்களில் இறங்கவில்லை. காரணம் குறித்த அரசியல்வாதிகள் தமது பாராளுமன்ற கதிரைகளை தக்க வைப்பதற்காக குரல் எழுப்பாது அதனை மூடி மறைத்தார்கள். இதனை ஓரவஞ்சக செயற்பாடு என சிவசேனை அமைப்பு அறிவித்தது. தற்பொழுது வெடுக்குநாறி மலை சிவலிங்கம் இனம் தெரியாதவர்களால் தூக்கி வீசப்பட்டதை அடுத்து குறித்த மத ஒன்றியம் பாதிரியார்கள் சகிதம் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடாத்தி எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றார்கள். இதனை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இந்துக்களின் வணக்க ஸ்தலங்கள் அழிக்கப்படுகின்ற பொழுது நாம் அதனை பார்த்தும் பாராமலும் சென்று விட முடியாது. இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதிக்கும் விடயங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றது இதில் குறிப்பாக இந்துக்களும் பௌத்தர்களும் அக்காலகட்டத்தில் ஒன்றாகவே இருந்தார்கள். இவர்கள் வெள்ளையர்களுக்கு எதிராகவே போராடினார்கள். தற்பொழுது தொல்பொருள் ஆராய்ச்சி என இனங்காட்டப்படுகின்ற இடங்களில் இந்து தமிழ் பௌத்த எச்சங்களும் இருக்கின்றன. அதற்காக சிங்களவர்கள் ஆட்சி புரிந்தார்கள் என்பது அர்த்தமல்ல. உலகளாவிய ரீதியில் இருக்கின்ற இந்த மதவாத பிரச்சனை என்பது தீர்க்கப்படாதது ஒன்று அது வாழையடி வாழையாக நடைபெற்று வருகின்றது. இதனை மாற்றியமைப்பது என்பது கடினமான விடயம் தான். அப்படியாக இருந்தால் இதுவொரு பல்லின மக்களை கொண்ட நாடாக இல்லாத வகையில் இவ்வாறான கட்டுப்பாடுகளை ஒருசில முஸ்லிம் நாடுகளைப் போன்று கொண்டுவரமுடியும். அல்லது வட கொரியாவை போன்று ஆக்க முடியும். குறிப்பாக மதவாத தலைவர்கள் அரசியலில் இருந்து விலகாத வரையிலும் மதவாத அரசியலை தவிர்க்க முடியாது என்பதே இன்றைய யதார்த்தம்.

# கல்லறைப் பூக்கள்



பல்துறை எழுத்தாளர்
புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்

சுத்தமாக இருந்தா ஒரு வியாதியும் வராது இல்லையா அப்பம்மா?"

" 'ஓம்' 'நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம்' என்பது மூத்தோர் மொழி. அந்த மொழி நிலைக்க வேணுமுணா சுத்தமாக இருக்கணும். சுத்தம் சுகம் தரும். சுத்தமும் சுகமும் மனித வாழ்க்கையின் இரு கண்கள் மாதிரி"

"இன்னொரு கதை சொல்லு"

"என்ன கதை சொல்லுறது? நீதானே எல்லாம் தெரிஞ்ச கிழடன் மாதிரி விஞ்சானம், தத்துவம் அது இதுணு கதைக்கிற. முயலும் ஆமையும் கதை சொல்லற்ருமா?"

"அந்த காலத்துப் பிள்ளைகள் வேறு இந்த காலத்துப் பிள்ளைகள் வேறு. புத்தகங்கள், டீ.வி. சனல்கள், பேப்பர்கள், மெஹஸின்கள் இவற்றில் ஆமையும் முயலும் கதையைப் பார்த்துப் பார்த்து அலுத்துப் போச்சி."

"என்ன கதை சொல்லுவம்?"

'இம்...இம்...இம்...' - யோசித்துவிட்டு, "மலேரியா நோய் பற்றி சொல்லட்டுமா?"

"நுளம்பினால் பரவும் ஒரு வகையான காச்சல். சரி... சரி... சொல்லு"

"1934 லா இருக்கும் இலங்கையில் வெள்ளக்காரன் ஆட்சிக் காலத்தில் பெரிய மழை பெய்து வெள்ளப்பெருக்கு உண்டாகியது. மலைநாட்டில் சுத்த மற்ற லயங்கள், அடைப்பட்ட கழிவு வாய்க்கால்கள் இவற்றில் தேங்கிய நீரினால், நுளம்புகள் பரவத்தொடங்கியது. அடுத்த மாண்டில் நாடு பூராவும் பரவியது. லட்சக்கணக்கான பேர் செத்து, லட்சக்கணக்கான பேர் வருத்தமுற்றாங்க. பல ஆயிரக்கணக்கான சின்னஞ்சிறுசுகள் மண்ணோட மண்ணாச்சிகள். எல்லா வூட்டிலையும் காச்சலும் மரண சத்தங்களும். செத்தவங்கள தாக்க முடியாத நிலை. குழி தோண்ட ஆளில்லை. செத்த வீட்டில் ஆக்களில்லை. எல்லாம் காச்சலில் படுத்த படுக்கை. சாப்பாடு பஞ்சம் ஒரு பக்கம். மருந்து குளிசை இல்லை. சாவு பட்டினியிலா, மலேரியாவிலா? என்று தெரியவில்லை. டொக்கரெல்லாம் பயந்து போனாங்க. இப்படியாக அல்லோலகல்லோலம் பட்ட மக்களுக்கு அந்த காலத்து இடதுசாரி அரசியல் காரங்களும் ஆமிக்காரங்களும் வீடு வீடாக சென்று உதவி செய்து, பட்டினியையும் மலேரியாவையும் இல்லாமாக்கினாங்க. ஒரு வருசம் இழுபட்ட மலேரியா கைவைத்தியத்தில் எல்லாம் சுகமா போச்சு. இப்ப வரயும் அந்த நோயில்லை." எனக் கதையைக் கூறிவிட்டு எழும்புவதற்கு எத்தனித்தாள். அதற்குள் குறிக்கிட்ட சாத்.

"அது என்ன கைவைத்தியம?" - கேட்டான்.

"இயற்கை மூலிகையால் செய்யிற மருந்து"

"அதுதானே ஆயுள்வேதம்"

"ஓம்மட என்னமோ வேதம்? சித்த மருந்து என்று எல்லாம் இப்ப அழைக்கிறாங்க. சுத்தமா இருந்து இந்த ஜீவராசிகளையும் ஏக்கையையும் மனிஷன் அம்பு வைச்சா கட்டாயம் ஒரு கெட்டதும் நடக்கது. இப்ப காலம் மாறிப் போச்சு"

"அது என்ன அப்பம்மா இடதுசாரி அரசியல்காரன்?

"எனக்கு எங்கடா தெரிய போகுது. அப்ப ஆக்கள் கதைச்சுக் கொண்டாங்க காதில் கேட்டத செல்றன். அவுங்க எங்கட வூட்டுகும் வந்து மருந்தும் சாமனும் தந்தாங்க. அவுங்க எங்கள மாதிரி ஏழை எளியவங்கள் மாதிரி பாக்க இருந்தாங்க. நாங் கூட ஒருத்தருக்குச் சோறு கொடுத்தனான்"

"இப்ப அப்படி ஆக்கள் இல்லையா?"

"இருப்பாங்க குறைவு. தேடிப் பார்த்த இருப்பாங்க. தேடிப் பாரு. உன்னோட கதைச்சு எனக்கு நித்திரை வருது. வா வூட்டுக்குள்ள போவம்"

"நாளைக்கும் கதை சொல்லுவாயா அப்பம்மா?" - எழுந்து இரண்டு கைகளையும் உயர்த்தி சோம்பல் முறித்தான்.

"நாளைக்கு நாளைப் பார்ப்பம். வடமராட்சிப் பக்கம் ஒரே ஷெல் சத்தமா இருக்கு நா நாளைக்குப் போயிருவன் இளசுகள்தான் பாவம்." - முணுமுணுத்துக்கொண்டு எழுந்தாள்.

அப்பம்மா சொன்ன, கதைகளின் ஞாபகத்திலிருந்து விடுபட்ட, சாத்தின் விஞ்ஞானப் புத்தகம் ஈரமாக இருந்தது. படிப்பில் அவனால், கவனத்தைச் செலுத்த முடியவில்லை. அம்மா சாப்பாட்டுக்கு அழைப்பது போல பிரம்மை.

தேநீர் அருந்திய திருப்தியில் மைதானத்தின் அருகில் காடை போல குளிர்த்துக்கொண்டிருந்த கமலியயைக் கண்டதும் சாத் அவளருகில் சென்று, "தங்கச்சி மண்ணில விளையாடக் கூடாது வருத்தம் வரும். வா போவம் கைகால் கழுவிட்டு பக்கத்து கோயிலில் சாமி கும்பிட்டு வருவம். நாளைக்குப் பள்ளிக்கூடத்திற்குப் போகணும். கொஞ்ச புத்தகங்கள் 'பெக்கில்' கிடக்கு அடுக்குவம்."

07

மரண வீட்டில் ஒவ்வொருவர் வாயும் ஒவ்வொரு விதமாக கதைத்தது. குற்றுயிராய்க் கிடந்த பிணத்தைக் எதேச்சியாக கண்டு சொன்ன குற்றத்திற்காக வேட்டைக்காரன் முருகேசை காவல்துறை விசாரணைக்கு அழைத்துச் சென்று விட்டது. பெண்கள் கூட்டம் அலைமோதி, மாலதியைக் கோள் குண்டனியாக பேசியது. கனகரைப் பொறுத்தவரையில் அவள் அவருக்கு இலைமறை காய் போலவே தெரிந்தாள். அநாதையாக வாழ்ந்திருந்தாலும் ஏய்ப்பில் வைப்பு செய்தே வைத்திருந்தாள். அவள் ஓய்வு நேரங்களில் ஆதுலர்சாலைக்கு உதவிகள் புரிந்து பொழுதைக் கழித்தாள். அவளின் வீட்டு வாசலில் சனத்திரள் அலைமோதியது. சுற்றி இருந்து அழுபவர்கள் யாரையும் அந்த மரண வீட்டில் காணவில்லை. தூரத்தே நாவல் மரத்தின் கீழ், தென்னோலைகளாலும் கடதாசிப் பூக்களாலும் வாழைத்தண்டுக்களாலும் அலங்கரிக்கப்பட்ட பாடை ஒன்று கண்களுக்குக் குளிர்ச்சியாக காட்சியளித்தது. பிணம் வந்த பாடில்லை. மக்கள் பார்த்து பார்த்து களைத்துப் போனார்கள். கனகரும் நிலக்கடலை விற்கும் ஐயாவும் முற்றத்தின் ஒரு கரையில், கதிரையில் அமர்ந்தனர். இவர்களைக் கண்ணுற்ற ஒரு நபர் "அட கச்சான் தாத்தா..." - எண்ணியவாறு, அவர்கள் அருகில் வந்து வெற்றிலை தட்டத்தை நீடினார்.

ஐயாவும், "தம்பி தங்கராசு நீ, என்னை மறக்கவில்லை - பரவாயில்லை - தா கொஞ்சம் வெத்திலை போடுவம், இப்படி பக்கத்தில் இரு கொஞ்சம் கதைப்பம்." - வெற்றிலை தட்டத்தை வாங்க, மதுபோதையில் தட்டித்தடுமாறி கதிரையில் அமர முனையும் போது காகம் இருக்கப் பனம் பழம் விழுந்தது போல இறப்பர் கதிரையின் கால் ஒன்று 'பொத்' என்று உடைந்து விழும் சப்தம் கேட்டதும். சனக்கூட்டம் ஒரு கணம் வெறுப்புடன் திரும்பிப்பார்த்தது. தங்கராசு இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல், இன்னுமொரு கதிரையை வலக்கையால் இழுத்து, இடக்கையால் வாயிலிருந்து வடியும் வெற்றிலை எச்சிலை மெதுவாக துடைத்து அமர்ந்தார்.

"என்ன தங்கராசு எத்தனை மணிக்கு 'பொடி' வருகிதாம்?"

"மரண விசாரண இன்னமும் முடியவில்லையாம் முடிஞ்சோனா வந்திரும்"

"என்னடா வாழ வேண்டியவளுடைய உசிரே போனப் பிறகு மரண விசாரணயும் மண்ணாங்கட்டி விரசாரணயும்."

"ஏன் ஐயா அவசரமா எங்கயும் போகணுமா?"

"நான் எங்கட பேறது. பள்ளிக்கூடம் விடேக்க போனால், இரண்டு கச்சான் சர கூட விக்கலாம். விடியக்காத்தாலவே கள்ளுத்தவறணைக்குப் போயிற்றுத்தான் விடிய சந்தைக்கும் வருவாய். செத்த வீட்டடிலையும் அப்படியா?"

"சும்மா முஸ்பாத்தித்தான். என்ர மகள் எப்ப விழுப்புண் அடைஞ்சு இந்த மண்ணவிட்டு போச்சிச்யோ. அப்பயிருந்து எனக்கு ஒரே கவலைதான்"

"தங்கராசு இந்த உலகத்திலும் எங்கட மண்ணிலையும் கவலைக்குக் குடிக்கிறதா? இருந்தா? எல்லாரும் இரவு பகலில் வெறியில்தான் திரிய வேண்டும். ஒவ்வொருவரும் தமக்கு தாமே ஆக்கிக் கொள்கிற நீதி இது"

"எப்படி இருந்த குடும்பம் இண்டைக்குப் பரப்பரையே இல்லாம போச்சு?. இந்த குடுப்பதைப் பத்தி இவன் எங்கட ஊர் பொடியன் ஒருத்தன், 'செழிப்பைத்தேடும் பறவைகள்' - பேப்பரில் ஒரு சிறுகதையே எழுதியிருந்தான். அந்த கதையை என்ர கமிசு பொக்கட்டில் கொண்டே திரியிறன். தாறன் வாசிக்கப் போறீங்களா?"

இல்லடா எனக்குக் கண்ணும் தெரியாது? கேள்விப்பட்டிருக்கன்"

"இஞ்ச தாங்க தங்கராசு அண்ணன் கொஞ்சம் வாசிச்சுப் பாப்போம்" - கனகர் குறுக்கிட்டு கேட்டார். தங்கராசும் ஐயாவும் உரையாடலை தொடர்ந்தனர்.


ஒற்றைக் கடதாசித் துண்டைக் கனகரின் கரங்கள் தாங்கிய வண்ணம் தனது விழிகளை அந்த சிறுகதையின் மீது மேய விட்டார்.

செழிப்பைத் தேடும் பறவைகள்

ஐயா என்ர மகன விடுங்கடா உங்களுக்கு மனசாட்சியே இல்லையாடா? உங்கள நம்பி வந்ததுக்கு இதுவும் வேணும் இன்னும் வேணும் எங்களுக்கு அடே... விடுங்கடா.. விடுங்கடா...

தலைவிரி கோலத்துடன் சனத்திரள் மத்தியில் கத்த முடியாமல் கத்தினாள், இராசலட்சுமி.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாங்குளம் கிராமம் மிகவும் அமைதியான இடம். வரிசை வரிசையாக பனைமரங்களைக் கொண்டது. அங்கு வாழுகின்ற மக்கள் வழிபாடு செய்வதற்கு ஊரின் மத்தியில் மாவடி விநாயக ஆலயம் கோயிலுக்கு முன்னும் பின்னும் வயல்வெளி. வயல்வெளியோ பச்சைக் கம்பளத்தை விரித்துப் போட்டதினைப் போல மேடு பள்ளம் இல்லாமல் மட்டமாக காட்சியளித்தது. நெற்கதிர்களில் சிட்டுக்குருவி கூடு கட்டி முட்டையிட்டு அடை காக்கும்.




தொடரும்...

# கிழக்கில் மகாவலி ஊடாக நில அபகரிப்பு பிள்ளையானுக்கு எதிராக சாணக்கியன், வியாழேந்திரன் போர்கொடி!

கடந்த வாரம் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் மக்கள் பிரச்சனைகளை கொண்டு வரும் நோக்கில் மகாவலி ஊடாக நில அபகரிப்பு ஏற்படுவதற்கு தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரும் கிழக்கு மாகாண அபிவிருத்தி குழு தலைவர் சிவனேசன்துரை சந்திரகாந்தன் நடைபெற்ற அபிவிருத்தி கூட்டம் தமக்கு அறிவிக்காது இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனையும் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்களையும் மட்டக்களப்பு கச்சேரி வளாகத்திற்குள் உள்நுழையவிடாது பொலிஸாரின் உதவியோடு அவ் வளாகத்தின் கதவை அடைத்தனர். அதன் காரணமாக ஆத்திரமடைந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கதவை உடைத்து ஊடகவியலாளர்கள் சகிதம் உள் நுழைந்து பிள்ளையான் தரப்போடு வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அபிவிருத்தி குழு தலைவர் சிவனேசன்துரை சந்திரகாந்தன் அவர்கள் இக்கூட்டத்தை நடத்துவது தொடர்பாகவும் தமக்கு தெரியாத பல விடயங்களை இங்கு தீர்மானங்களாக எடுப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்தி திட்டம் என்ற போர்வையில் காணிகள் அபகரிப்பதற்கு எதிராக எதிர்ப்பு தெரிவித்து மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தை 2023 மார்ச் 30 அன்று முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டகாரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. அதையடுத்து பெண் ஒருவர் பொலிஸாரால் தாக்கப்பட்டார். அபிவிருத்தி குழு கூட்டத்தில் மக்கள் தமது பிரச்சனைகளை கேட்டறிவதற்கு அனுமதி வழங்காத இடத்திலேயே இப் பிரச்சனைகள் தீவிரமடைந்தது. இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அபிவிருத்தி குழு கூட்டம் ஆரம்பமான நிலையில் மாவட்ட செயலகத்திற்கு ஊர்வலமாக வந்த பொதுமக்கள் மாவட்ட செயலகத்திற்குள் அத்துமீறி நுழைய முற்பட்ட போது பொலிஸார் தாக்குதல் நடத்தி மாவட்ட செயலகத்தின் கதவை இழுத்து மூடினர்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் ஆதங்கமாக வாகனேரி பகுதியில் சூரியமிகுந்தல திட்டத்தை அமைப்பதற்காக விவசாய காணிகளை எடுக்க முனைந்ததாகவும் அதனை கண்டித்து வாகரை பகுதியில் இல்மனைட் அகழ்வை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னெடுக்கப்படும் செயற்பாட்டை நிறுத்த கோரியும் வாகரை பகுதியில் காணிகள் அபகரிப்பு தொடர்பிலும் போராட்டத்தை முன்னெடுத்தனன். மறைமுகமாக கூட்டங்களை நடத்தி மகாவலி திட்டத்தின் ஊடாக சிங்கள பேரினவாதிகளுக்கு நிலத்தையும் வளத்தையும் வாரி கொடுக்கின்றார் என்ற குற்றச்சாட்டுக்களே சிவனேசன்துரை சந்திரகாந்தன் மீது கூறப்பட்டது. பிரதேச செயலகத்தை உடைத்துக்கொண்டு உள்நுழைந்த இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனிடம் இது தொடர்பில் வினவிய பொழுது அபிவிருத்தி என்ற போர்வையிலே இன்று ஒருசில கம்பனிகளோ அல்லது செல்வாக்கு படைத்தவர்களோ காணிகளை அபகரிப்பதை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கமுடியாது. கடந்த காலங்களிலே இவ்வாறான முன்னெடுப்புக்கள் முன்னெடுக்கப்பட்ட பொழுது நாங்கள் அதை தடுத்திருக்கின்றோம்.

எனவே இந்த காணி அபகரிப்பு தொடர்பாக நான் 10 பிரதேச செயலக பிரிவுகளுக்கும் தகவல் அறியும் சட்டத்திற்கு சகல தகவல்களையும் பெற்றுக்கொடுத்திருக்கின்றேன். **2000/01/01** இல் இருந்து **2023/01/01** வரையான காலப்பகுதிவரை அத்துமீறி காணிகளை பிடித்தவர்கள். சட்டத்திற்கு புறம்பாக செயற்பட்டவர்கள் தொடர்பாக சகல தகவல்களையும் தருமாறு நான் கேட்டிருந்தேன். இன்னும் அது சம்பந்தமாக தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை இதே நேரத்தில் மாவட்ட அபிவிருத்தி குழுவிற்கு விபரங்களை தருவதற்கு கால அவகாசங்களை கேட்டிருக்கின்றார்கள். மாவட்ட செயலகத்தின் பிரதான நுழைவாயில் பூட்டப்பட்டிருந்தது மக்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் வெளியில் நின்றார்கள். வாகரை பகுதியில் இருந்து சிறு குழந்தைகளுடனும் மக்கள் வந்திருந்தார்கள். அரசாங்க அதிபரை சந்தித்து கதைக்க வேண்டும் என்று. இல்மனைட் திட்டத்தை நடைமுறைப்படுத்தக்கூடாது என்றும் அது விவசாய காணிகளை அபகரிக்கின்ற செயல் வடிவமாக இருக்கின்றது என்றும் மக்கள் எமக்கு தெரிவித்திருந்தனர். எனவே மக்களுக்கு பாதகமான விடயங்கள் வருகின்ற பொழுது அதற்கு ஒருபோதும் அனுமதிக்க கூடாது என்பது எமது நிலைப்பாடு. தகவல் அறியும் உரிமை சட்டத்தில் இருந்து சுபீகரிக்கப்பட்ட இவ்வாறான காணிகள் தொடர்பாக தகவல்களை திரட்டிக்கொண்டு தற்பொழுது அது தொடர்பாக அவர்களிடம் கேட்ட பொழுது இல்லை என மறுக்கின்றார்கள். காணி என்பது மிக முக்கியமானதொன்று அந்த தியாகத்திற்காக தான் 30 வருட கால போராட்டம் இடம்பெற்றது. எது எவ்வாறாயினும் எமது இனத்தின் இருப்பை பாதுகாப்பது என்பது முக்கியம். சட்ட விரோதமான செயல் வடிவங்களை இந்த அபிவிருத்தி குழு கூட்டத்தில் நீங்கள் செய்கின்றீர்கள் இது தொடர்பில் மக்கள் எம்மிடம் கேட்கின்றார்கள் அதற்கு பதில் கூற வேண்டிய கடமை எமக்கு இருக்கின்றது மக்கள் பிரதிநிதி என்ற அடிப்படையில் அந்த கூட்டம் ஒரு ஆக்கபூர்மான கூட்டமாக அமையாத காரணத்தினால் நான் அதில் எனது கருத்தை கூறிவிட்டு வெளியேறினேன் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனிடம் கேட்ட பொழுது மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்குள் அத்துமீறி நுழைய வேண்டிய சந்தர்ப்ப சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. காரணம் மக்கள் வெளியிலே போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் அவர்களது குரலாக நாம் செயற்படுகின்றோம் மக்களின் காணிகளை மகாவலியின் ஊடாக தாரை வார்க்கின்ற விடயத்தை அறிந்து நாம் பேசாமல் இருக்க முடியாது. பாதிக்கப்பட்ட மக்களை உள்ளே செல்வதற்கு அனுமதிக்கவில்லை. அவர்களைத் தான் அனுமதிக்கவில்லை என்றாலும் மக்கள் பிரதிநிதிகளாகிய எங்களையாவது அனுமதித்திருக்கலாம். பிரதான நுழை வாயிலை பூட்டியதன் காரணமாகவே மக்களை வெளியிலே நிற்குமாறு கூறிவிட்டு ஊடகவியலாளர் சகிதம் உள்ளே நுழைந்தோம் அங்கு அவர்கள் தன்னிச்சையான முடிவுகளை எடுக்கின்றார்கள் என்ற விடயத்தை நான் கூறியிருந்தேன். எனக்கும் அபிவிருத்தி குழு தலைவர் சிவனேசன்துரை சந்திரகாந்தனனுக்கும் வாத பிரதிவாதங்கள் ஏற்பட்டது அவருடைய கட்சி செயலாளர் பூபாலசிங்கம் பிரசாந்தன் தலையிட்டு பேச முற்பட்டார். இவ் அபிவிருத்தி குழு கூட்டத்தில் பேச உமக்கு அனுமதி இல்லையென்று கூறினேன். பின்னர் வந்து ஆசனத்தில் இருந்து கருத்து கூறுமாறு பிள்ளையான் பணிந்தார். நான் கூறினேன் மக்களது பிரச்சனைகளை நாம் கூறுவதற்கு முதலாவது அனுமதி தரவேண்டும் அவ்வாறு இருந்தால் மட்டுமே நான் ஆசனத்தில் இருந்து பேசுவேன் என்றேன் அதற்கமைவாக நான் மக்கள் பிரச்சனைகளையும் நில ஆக்கிரமிப்பு தொடர்பாகவும் சந்திரகாந்தன் என்ற பெயரில் இருந்த காணி சந்திரகாந்தியாக மாற்றம் பெற்றது தொடர்பிலும் கேள்வி எழுப்பியிருந்தேன். அதற்கு பதலளிக்காத அபிவிருத்தி குழு தலைவர் வேறு தேவையற்ற முறையில் நையாண்டி செய்து கொண்டிருந்தார். குறித்த ஒரு ஊடகவியலாளர் என்னிடம் 30 ஆயிரம் ரூபாய் சம்பளம் பெறுவதாக பொய்யான குற்றச்சாட்டை சாட்டினர் அதை நான் வன்மையாக கண்டிக்கின்றேன். எது எவ்வாறாயினும் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் நான் கலவரத்தை ஏற்படுத்துவதற்காக அங்கு செல்லவில்லை எம்மை வெளியில் பூட்டி காக்க வைத்து மக்கள் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்ல முடியாத காரணத்தினால் தான் நுழைவாயிலை உடைத்து உள்ளே சென்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஊடகவியலாளர் புண்ணிய மூர்த்தி சசிதரன் இது தொடர்பில் தெரிவிக்கையில் மட்டக்களப்பு கச்சேரி வளாகத்தை சுற்றி மக்கள் ஒரு ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். விவசாய காணிகளை சுபீகரிப்பதற்கு எதிராக இப் போராட்டம் நடந்தது அதே நேரம் கச்சேரி வளாகத்தில் அபிவிருத்தி கூட்டமும் இடம்பெற்றுக்கொண்டிருந்தது அங்கிருக்கும் மக்கள் மட்டக்களப்பு அரசாங்க அதிபரை வெளியில் வருமாறு பணித்து எமது பிரச்சனைகள் தொடர்பில் தீர்ப்பு காணவேண்டும் எனவும் மகஜர் சகிதம் இருந்த வேளையில் பொலிஸார் அவர்களை அனுமதிக்கவில்லை. அதன் பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும் வியாழேந்திரனும் 4 ஊடகவியலாளர்களும் மட்டும் உள்நுழைய அனுமதிக்கப்பட்டனர். செய்தி சேகரிப்பினை செய்யும் இவர்களது வாத பிரதிவாதங்களையும் படம் பிடித்துக்கொண்டிருந்த சமயத்தில் குறிப்பாக என்னைக் காட்டி நீங்கள் இப் பிரச்சனைகளை பூதாகரமாக காட்டி மேலும் பிரச்சனைகளை வளர்க்கின்றீர்கள். இதற்கு எவ்வளவு பணம் வாங்கினீர்கள் சாணக்கியன் அவர்கள் உங்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் பணம் தருவதாகவும் கூறினார்கள் என்று கிண்டலாக அபிவிருத்தி கூட்டத்தலைவர் சிவனேசன்துரை சந்திரகாந்தன் எம்மை கேட்டது மட்டுமன்றி அச்சுறுத்தும் வகையிலும் அவரது செயற்பாடுகள் அமைந்தன. இதற்கு முன்னரும் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி கொலை செய்த



பல சம்பவங்களும் பதிவாயியுள்ள நிலையில் அவர்களது காணி அபகரிப்பு அரசாங்க அதிபருடன் இணைந்து செயற்படும் சில விடயங்கள் தொடர்பில் நாம் உண்மைகளை வெளிக்கொண்டுவருவதன் காரணமாக இவ்வாறு ஊடகத்துறையை அச்சறுத்தல் செய்கின்றது என்பது ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்தார்.

அபிவிருத்திக் குழு தலைவர் சிவனேசன்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) அவர்கள் இது தொடர்பில் கூறும் பொழுது இல்மனைட் விவகாரம் தொடர்பிலும். மகாவலியின் ஊடாக காணி சுபீகரிப்பு தொடர்பிலும். மயிலந்தமடு காணி விவகாரம் தொடர்பிலும் அவற்றை பேசி அதற்கான முடிவுகள் எட்டப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. இவற்றை பேசித்தீர்க்க முடியும். ஆனால் சாணக்கியனும் வியாழேந்திரனும் தமது வங்குரோத்து அரசியலை நிரூபிப்பதற்காக இவ்வாறு அராஜகம் செய்துகொண்டிருக்கின்றார்கள். தமது பதவிகளில் இருந்து கொண்டு மக்கள் பிதிநிதிகளாக அநாகரிகமான வார்த்தை பிரயோகங்களையும் அத்தனை படித்த அறிவாளிகள் மத்தியிலும் காட்டி சண்டியர்கள் போன்று செயற்பட்ட விதத்தினை மக்களும் பார்த்திருப்பார்கள். மக்கள் பிரதிநிதிகள் என கூறி தமது சுயலாப அரசியலை வளர்ப்பதற்கு அடித்தாபம் இடுகின்றார்கள். அபிவிருத்தி குழு தலைவர் என்ற வகையில் நான் பொறுப்பான பதில்களை கூற வேண்டிய தேவை எனக்கு இருக்கின்றது. மக்கள் ஆர்ப்பாட்டத்திற்கு வந்த காரணத்தினால் கச்கேரி நுழைவாயில் பூட்டப்பட்டது பாராளுமன்ற உறுப்பினர் அனுமதிக்க கூடாது என நான் உத்தவரவிடவில்லை. அது பொய்யான தகவல் அதற்கிடையில் ஊடகவியலாளர்கள் ஒரு சிலரை வைத்து படங்கள் எடுத்து வில்லத்தனமாக கச்சேரி நுழைவாயிலை உடைத்து உள்ளே வந்து அராஜகத்தை காட்டினார்கள். அவரை இருந்து கதைக்குமாறு நான் பல தடவை பணித்தேன் அவர் பின்னர் அமர்ந்திருந்து சில விடயங்களை கூறினார். இதனை சாணக்கியன் முதலே செய்திருக்கலாம். இவர்கள் கூறிய விடயத்தில் இல்மனைட் பிரச்சனை நிறுத்தப்பட்டுள்ளது. சோள பவர் பிரச்சனை தொடர்பில் பேசுகின்றார்கள் அதற்கு எங்கோ ஒரு இடத்தில் காணி வழங்கத்தான் வேண்டும். மின்சாரம் துண்டிக்கப்பட்ட பொழுது மக்கள் குழப்படைந்தார்கள் சோள பவர் வருவதை இவர்கள் தடை செய்வதாகத் தான் நான் அதனை பார்க்கின்றேன்.

குறிப்பாக மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தில் 2017 இல் சோள பவர் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டது. அதில் குறிப்பாக மௌனதீவு வாழைச்சேனை ஆகிய இடங்களாக இருந்தது. இது நல்லாட்சி காலத்தில் தான் இடம் பெற்றது. அப்பொழுது தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர்கட்சியாகவும் அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டிருந்தது. இதனை அவர்கள் மறக்ககூடாது மக்கள் போராட்டம் என கூறிக்கொண்டு அவர்களது கட்சி அங்கத்தவர்களை அணி திரட்டி கூட்டத்தை குழப்புவதற்காகவே அவர்கள் வந்தார்கள். இவர்கள் தமக்கு அபிவிருத்தி குழு கூட்டம் தொடர்பில் அறிவிக்கவில்லை என்பது பொய் 8 நாட்களுக்கு முன்னரே தகவல்கள் கூட்டம் தொடர்பான அறிவித்தல் இவர்களை சென்றடையும். இவர்களுடன் வந்த ஊடகவியலாளர்கள் பணம் பெற்று ஊடக சமூகத்திற்கு அப்பால் செயற்படுவதாக நான் அறிந்தேன் அதனை வெளிப்படையாக கூறினேன். ஒரு விடயத்தை மட்டும் சாணக்கியன் விளங்கிக்கொள்ள வேண்டும் சண்டித்தனமான செயற்பாடுகளை பொதுவெளியில் நிறுத்த வேண்டும் எமக்கும் கட்சி தொண்டர்கள் இருக்கின்றார்கள். ஒரு கட்டத்தை மீறினால் பார்த்துக்கொண்டு இருக்க மாட்டார்கள். பின்னர் இப் பிரச்சனையை வைத்தே நீங்கள் அரசியல் செய்வீர்கள். அவ்வாறான நிலை தொடங்ககூடாது என்பதனை கூறிவைக்கின்றேன். மற்றும் குறித்த ஊடகவியலாளர்கள் நாம் அச்சுறுத்துகின்றோம். என்றும் பொய்யான செய்திகளை வெளியிட்டிருக்கின்றார்கள். நாங்கள் மிரட்டுவதாக கூறி வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் அடைவதற்கே அவ்வாறு கூறுகின்றார்கள். இங்கு இருக்கும் அரசியல்வாதிகளின் நிலை என்னவென்றால் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியை பிளவுபடுத்தி அதில் உள்ள கட்சி தொண்டர்களை தம்வசப்படுத்தி அரசியல் சுயலாபத்திற்காக செயற்பட வேண்டும் என்பதே. போலி தேசியத்தை இவர்கள் செய்து வருகின்றார்கள் என்றும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் இது தொடர்பில் தெரிவிக்கையில் இக் கூட்டம் ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இவர்கள் இக் கூட்டத்தை குழப்பும் நோக்கில் உள்நுழைந்ததாகவே நான் அறிகின்றேன். காணி சுபீகரிப்பு தொடர்பாகவும். மகாவலி விவகாரம் தொடர்பாகவும் கலந்துரையாடுவதற்கே அனைவரும் வந்திருந்திதார்கள். அதனை இவர்கள் நாகரீகமான முறையில் பேசி ஒரு நிலைப்பாட்டை எட்டியிருக்கலாம். காணிகள் தொடர்பில் வியாழேந்திரன் மூலம் எழுப்பப்பட்ட கேள்வியானது அதனை அவர் சரியாக அறிந்து கேட்கவில்லை. காணிகள் தொடர்பில் பிரதேச செயலகம் தான் அதற்கான பதிலை கூற வேண்டும். 2000 இல் இருந்து அபகரிக்கப்பட்ட காணி விபரம் தொடர்பில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அதனை எடுத்ததாக அவர் கூறினார். ஒரு இராஜாங்க அமைச்சர் அவ்வாறு எடுக்க வேண்டியதில்லை அதனை அவர் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இராஜாங்க அமைச்சர் பிரதேச செயலகத்திடம் ஒரு கோரிக்கையை வைக்கும் பொழுது ஆவணத்தை கேட்கும் பொழுது அதனை சாதாரணமாகவே கொடுத்துவிட முடியும். சாணக்கியன் அவர்கள் ஊடகவியலாளர்களையும் தம்வசம் வைத்துக்கொண்டு இந்த கூட்டத்தில் ஏதோ பூதாகரமான பிரச்சனைகள் இருப்பதாக காண்பித்து இந்த மாவட்டத்தில் சரியான இயங்கு நிலையில் அபிவிருத்தி குழு கூட்டம் இடம்பெறவில்லை என இப் பிரதேசத்தையும் இழிவுபடுத்துகின்ற ஒரு செயல்வடிவத்தையே அவர் கொண்டித்திருக்கின்றார். எனது நிலைப்பாட்டை பொறுத்தவரை மக்கள் பிரதிநிதிகளாக இருப்பவர்கள முதலில் நாகரீகமாக நடக்க வேண்டும் இவர்களே கூச்சலிட்டு குழப்பத்தை ஏற்படுத்துவது ஏற்றுக்கெள்ள முடியாது. படித்த அதிகாரிகள் முன்னிலையில் இவர்கள் அராஜகமாக நடந்துகொண்டது அனைத்து உத்தியோகஸ்தர்களும் அருவறுக்கத்தக்கது. எதிர்வரும் காலத்தில் மக்களின் ஆரோக்கியத்திற்கான மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் இது இடம்பெற வேண்டும் என்பது எங்களது வேண்டுகோள்.

தொடரும்...

# தொல்லியல் வடிவில் அரச பயங்கரவாதம்



## மதக்கலவரம் வெடிக்கும் அபாயத்தில் இலங்கை!




## நடந்து கொண்டிருப்பது என்ன?

யுத்தத்திற்கு பின்னரான இலங்கை தேசத்தில் வடகிழக்கு உட்பட அம்பாறை மாவட்டத்தையும் உள்ளடக்கி 344 இடங்கள் தொல்பொருள் ஆராய்ச்சிக்காக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக வடகிழக்கை பொறுத்தவரையில் 98 இடங்களில் அதிலும் குறிப்பாக 35 இடங்கள் வடகிழக்கில் தமிழர்களின் அடையாள சின்னமான கோவில்கள் இதில் கிறிஸ்தவ தேவாலயங்கள் எதுவும் உள்ளடக்கப்படவில்லை. காரணம் கி.மு. கி.பி இடம்பெற்ற வரலாற்று சம்பவங்களாகவே இதனை பிரித்து பார்க்க முடியும். 47 முஸ்லிம் லீக் நாடுகள் ஒன்றாகவும். 14 பௌத்த நாடுகளாகவும். 139 நாடுகள் கிறிஸ்தவ நாடுகளாகவும் இருக்கின்றன. அனைத்து நாடுகளிலுமே மதவாத பிரச்சனை இருக்கத்தான் செய்கின்றது. மதவாத பிரச்சனையை தவிர்த்து எந்த நாட்டையும் கூறிவிட முடியாது. மதவாத தலைவர்களும் ஆட்சி செய்கின்றனர் என்பது யதார்த்தம். குறிப்பாக பௌத்தத்தை எடுத்துக்கொண்டால் கி.மு 487 ஆம் ஆண்டு முதல் பௌத்த சமய மாநாடு இடம்பெற்றிருந்தது. எனவே கி.மு கட்டப்பட்ட ஆலயங்களுக்குள் பௌத்த இந்துக்களும் இருந்ததாக கூறப்படுகின்றது. குறிப்பாக வடகிழக்கில் பிரசித்தி பெற்ற ஆலய வரிசையில் தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளம் காட்டப்பட்ட இடங்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரம் ஆலயம்
மாந்தைகிழக்கு பத்திரகாளி அம்மன் கோவில்
சிறீ சித்திரவேலாயுதம் முருகன் கோவில்
குமுழமுனை ஆஞ்சநேயர் கோவில்
பாண்டியன்குளம் சிவன் கோவில்
வவுனிக்குளம் சிவபுரம் சிறீமலை கோவில்
குமுழமுனை குறிஞ்சிக்குமரன் கோவில்
மன்னார் திருக்கேதீஸ்வரக் கோவில்
மயிலிட்டி போர்த்துக்கேயர் கோவில்
ஒதியமலை வைரவர் கோவில்
முள்ளியவளை குமாரபுரம் முருகன் கோயில்
தென்னமரவடி கந்தசாமிமலை கோயில்
செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயம்
புல்மோட்டை அரிசி ஆலை மலை கோவில்
வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயம்
சூடைக்குடா மலைப்பகுதி முருகன் ஆலயம்
திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயம்
மூன்றுமுறிப்பு கண்ணகி அம்மன்.
சிவபுரம் சிவாலயம்.
மாந்தை கிழக்கு ஆதிசிவன் கோயில்
குஞ்சுமப்ப பெரியசாமி கோவில்
ஸ்ரீ மலை நீலியம்மன் கோயில்
கல்லுமலை பிள்ளையார் கோவில்
மட்டக்களப்பு தாந்தாமலை ஆலயம்
மட்டக்களப்பு கச்சக்கொடி சுவாமிமலை
குருந்தூர் மலை ஆதி ஐயனார் கோவில்
மட்டக்களப்பு. சித்தாண்டி முருகன் ஆலயம்
கன்னியா வெந்நீர் ஊற்று
உருத்திரபுரம் சிவன் கோவில்
குசலமலை சைவ குமரன் ஆலயம்
காங்கேசன்துறை சைவ ஆலயம்
கீரிமலை சிவன் ஆலயம்.
சடையம்மா மடம்.
காங்கேசன்துறை முருகன் ஆலயம்
வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலயம்
நெடுங்கேணி நொச்சியடி ஐயனார் ஆலயம்
சுழிபுரம் பறாளை முருகன் கோவில்

மேற்படி ஆலயங்களில் சில சிதைக்கப்பட்டு இருக்கின்றன . அதே போல சில ஆலய சூழலுக்குள் பௌத்த மத அடையாளங்கள் நிறுவப்பட்டு இருக்கின்றன. இது தவிர. 823/73 ம் இலக்க தொல்லியல் கட்டளைச்சட்டம் (188ம் அத்தியாயம்) 16 ஆம் பிரிவின் கீழ் 2013 ஆம் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் பிரகாரம் வடக்கு கிழக்கில் 98 ற்கு மேற்பட்ட இடங்களில் தொல்லியல் சிதைவுகள் இருப்பதாக உரிமை கோரி இருக்கின்றார்கள்.

அதே போல வடக்கு கிழக்கின் நிலமட்டத்திற்கு உயரமான மட்டக்களப்பு மாவட்ட நிலப்பரப்புக்கு உரிய தொப்பிகல (குடும்பிமலை). காந்தாமலை . குசலானமலைதிருகோணமலையின் ராஜவந்தான் மலை. சூடைக்குடா மலை. அரிசி மலை போன்ற பகுதிகள் எங்கும் பௌத்த மத அடையாளங்கள் இருப்பதாக சொல்லுகின்றார்கள். இது போதாதென்று அம்பாறை மாவட்டத்தில் மட்டும் 246 இடங்களை பௌத்த மதம் சார்ந்த இடங்களாக அடையாளப்படுத்தி இருக்கிறார்கள்.

அந்த வரிசையில் நாட்டில் என்ன தான் இடம்பெறுகின்றது. அரச பயங்கரவாதம் எப்படி கொண்டுவரப்படுகின்றது என்ற சம்பவங்களை உற்று நோக்கும் பொழுது சில விடயங்கள் அவதானிக்கப்பட வேண்டியவையாக உள்ளன. சைவ ஆலயத்தின் வாசல்களில் அரசியல் போராட்டங்கள் உட்பட அனைத்து வகையான நாசகார செயல்கள் செய்வதன் நோக்கம் என்ன? தமிழ் போராட்டம் என்ற போர்வையில் போராட்டத்தை ஒழுங்கு செய்யும் பறங்கிய இனத்தவர்களின் கிறிஸ்தவ மத போதகர்களான கிறிஸ்தவ மிஷனரிகள் போராட்டங்கள் செய்ய வேண்டிய இடங்களான கிறிஸ்தவ தேவாலயங்கள். பள்ளிவாசல் . பௌத்த விகாரைகள் பாராளமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஜனாதிபதி மாளிகை அரசாங்க கட்டிடங்கள் யாழ் முத்தவெளி செல்வநாயகம் அரங்கு வயல்வெளிகள் ஆனையிரவு கடற்கரை ஓரம் பனைமர கூடாரங்கள் மீன்சந்தைகள் இறைச்சி கடைகள் மதவுகள் மதுபானக்கடைகள் தாசிகளின் வீடுகள் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களின் வீட்டு வாசல்களின் முன்பாகவும் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் முன்பாகவும் போராட்டங்கள் செய்யப்படல் வேண்டும். அரசியல் போராட்டங்கள் உட்பட அனைத்துவகையான போராட்டங்களும் செய்யபட வேண்டிய இடங்கள் அனைத்தையும் நிராகரித்து தூய்மையாக வைத்துக் கொண்டு தூய்மையாக இருக்க வேண்டிய சைவ ஆலயவாசலில் அரசியல் போராட்டங்கள் செய்வதும் ஆலயங்களை தாக்குவதும் ஆலயத்தில் குடியிருக்கும் இறைவனையும் தெய்வங்களையும் உடைத்து எறிதல் ஆலயங்களை மூடநம்பிக்கையின் வெளிப்பாடு என்று பிரச்சாரம் செய்வதும் ஆலயங்களை சாத்தான்களின் அடையாளம் என்று பிரச்சாரம் செய்வது போன்ற அனைத்து காட்டு மிராண்டி செயல்கள் செய்வதன் சதிநோக்கம் என்ன?

போர்துக்கேயரின் கத்தோலிக்க மதத்தின் தமிழின அழிப்பு காலம் தொடக்கம் தமிழின அழிப்பின் தொடர்சியாக போர்துக்கேயரின் மரபணுவழி மூலமான பாரம்பரிய கலாச்சார பண்பாட்டு இயல்புகளை கொண்ட தமிழ் பேசுகின்ற வம்சாவழியினராகிய பறங்கிய இனத்தவர்களான கிறிஸ்தவ மதத்தவர்களும் அவர்களது அடிமைகளும் தமிழர்களை அழிக்க வேண்டும் என்பதற்காக சைவ ஆலயங்களை அழித்துக் கொண்டும் சைவ ஆலயவாசலில் அரசியல் போராட்டங்கள் கொலைகள் கொள்ளைகளை செய்து கொண்டு இருக்கின்றார்கள்.

தமிழை அருளிய அகர முதல்வனாகிய இறைவனின் அடையாளம் உயிர்கள் உய்யும் பொருட்டு உயிர்களின் பக்குவ நிலைக்கேற்ப விநாயகர் முருகன் மாயோன் (திருமால் அல்லது பெருமாள்) இந்திரன் வருணன் அம்மன் பஞ்ச பூதங்கள் நவக்கிரகங்கள் என்று பல்வேறு வடிவங்களை எடுக்கின்ற இறை அருளின் பல்வேறு வடிவங்களின் அடையாளம் ஆலயமானது தமிழினதும் தமிழ் பூமியினதும் தமிழினத்தின் அடையாளம்.

ஆலயம் தமிழ் இனத்தின் வழிபாட்டு தலம் மட்டும் அல்ல கோவில்களில் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அதிலே தான் தமிழ் இனத்தின் வரலாற்றுக் குறிப்புகள் இருக்கின்ற காரணத்தினால் அதுவெறும் கோயில் அல்ல தமிழ் இனத்தின் வரலாற்று ஆவணம். அத்துடன் தமிழின் தொண்மை மிக்க கலை கலாச்சார பண்பாட்டின் பிறப்பிடமாகவும் இருப்பிடமாகவும் காணப்படுகின்ற காரணத்தாலும் தமிழ் பூமி என்றும் தமிழினம் என்றும் அடையாளப் படுத்துகின்ற தமிழ் இனத்தின் வரலாற்று ஆவணமாகவும் உயிர்களின் காப்பரனாக இருந்த காரணத்தாலும் தமிழினத்தின் முன்னோர்கள் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என் என்றும் "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் . "ஆன்மா லயப்படும் இடம் ஆலயம்" அத்துடன் கோபுர தரிசனம் கோடி புண்ணியம் அத்துடன் ஆலயங்கள் ஆகமங்கள் நிறைந்த புண்ணிய பூமி என்று எமது முன்னோர்கள் ஆலயத்தை முதன்மை படுத்தியதற்கு பலகாரணங்களை வரலாற்று ஆதாரங்களுடன் நாம் கண்டு கொள்ள முடியும்.

கோயிலை வைத்து ஆன்மீகம் மூலமாக ஒரு தன்னிறைவு பொருளாதாரத்தை கட்டி எழுப்பி உலகிற்கு முன்னோடியாக வாழ்ந்து காட்டிய தமிழனின் ஆலயம் தமிழ் தேசத்தின் நாடி நரம்புகளான ஆலயங்கள் ஆலயகோபுரங்கள் ஆன்மீகத்தையும் பண்டகசாலைகளாகவும் நூற்றிக்கும் மேற்பட்ட பல்வேற வகையான வேலை வாய்புகளையும் சமூகசேவைகளையும் வழாங்கும் அமைப்பாகவும் மக்களுக்கு வழாங்கும் நிலையங்களாகவே தொழில்பட்டன என்பதற்கான பல ஆதாரங்கள் போர்த்துக்கேயரின் கத்தோலிக்க மதத்தின் தமிழின அழிப்பிற்கு முந்திய கோயிலை வைத்து ஆன்மீகம் மூலமாக ஒரு தன்னிறைவு பொருளாதாரத்தை கட்டி எழுப்பி உலகிற்கு முன்னோடியாக வாழ்ந்து காட்டிய தமிழனின் ஆலயம் வரலாற்று ஆவணங்களில் காணப்படுகின்றன.

தமிழர்களின் வாழ்வியல் நெறிகள் பேசுகின்ற திருக்குறள் சங்க இலக்கிய நூல்கள் நீதிநெறி கோவைகள் மேன்மை கொள் சைவ நீதி போன்ற அனைத்து வாழ்வியல் நெறிகளை நிராகரித்து தமிழ் சிதைப்புகள் செய்து உருவாக்கப்பட்டதே கம்யூனீசம் சோசலீசம் இலெனினியம் இமாவோயிசம் போன்ற செத்து போன கோட்பாடுகளை புதிப்பித்து உருவாக்கப்பட்டதே போராட்டங்கள் ஆகும். தமிழரசு கட்சி நிறுவனர் கிறிஸ்தவ சாமுவேல் ஜேம்ஸ் செல்வநாயகம் முன்மொழிந்து உலகத் தமிழாராய்ச்சி மன்ற நிறுவனர் கிறிஸ்தவ மதபோதகர் தனிநாயகம் அடிகள் என்கிற வண. சேவியர் தனிநாயகம் வழிமொழிந்து நிறைவேற்றப்பட்துதான் அல்பிரட் துரையப்பா படுகொலை. சுதந்திராக நடமாடுகின்ற அல்பிரட் துரையப்பாவை சாதரணமாக அவரின் வீட்டு வாசலில் அல்லது யாழ் நகரவீதிகளில் வைத்து படுகொலை செய்து இருக்க முடியும். ஆனால் ஆலயத்தை மாசுபடுத்தும் நோக்குடன் 27 ஜூலை 1975ல் பொன்னாலை வரதராஜப் பெருமாளின் ஆலய வாசலில் அல்பிரட் துரையப்பாவின் படுகொலையுடன் ஆரம்பமானது சைவ அழிப்பு போர். இந்த சைவ அழிப்பு ஈழப்போர். ஆலய சைவ குருமார் கொலைகள் உட்பட ஈழப்போரின் அனைத்து படுகொலைகளும் சைவ ஆலயத்தில் இடம்பெற்றன. அத்துடன் கொள்ளைகளும் ஆலய திருப்பணி உண்டியல்கள் உடைப்பு வரை அனைத்தும் ஆலயவாசல்களின் முன்பு தான் நடைபெற்றது இவைகள் அனைத்தும் ஜனவரி 1. 2008 அன்று கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலுக்குச் சென்றுவழிபாட்டில்கலந்துகொண்ட இலங்கையின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான தியாகராஜா மகேஸ்வரன் சுட்டுக் கொலை செய்யப்பட்டதுடன் மாண்டு கொண்டது. ஆனால் தமிழீழ போரில் எந்தவொரு படுகொலையும் தேவாலய வாசல்களில் நடைபெறா வண்ணம் பாதுகாத்துக் கொண்டார்கள் பாதிரிகள்.

போராட்டங்கள் ஊடாக சைவ ஆலய அழிப்புகள் தோல்வி கண்டதை பொறுக்க முடியாது பொங்கி எழுந்த பறங்கிய இனத்தவர்களின் கத்தோலிக்க மதத்தின் மதப் போதர்களான பாதிரிகள் 2009 ம் ஆண்டு மே மாதத்திற்கு பிற்பாடு இலங்கையின் வடக்கு. கிழக்கு மாகாணத்தில் நாற்பதிற்கும் மேற்பட்ட சிறு சிறு வழிபாட்டு இடங்களை உடைத்து எறிந்தார்கள். இலங்கையின் கிழக்கு மாகாணத்தில்அலிக்கம்பை தமிழ் கிராமத்தின் முழு சைவ ஆலயங்களையும் உடைத்து எறிந்து அதன் மேல் யூத நாட்டு கொலைக் கருவியான சிலுவையை நிறுவி யூத தேசமாக மாற்றி தமிழின படுகொலையை நடாத்தினார்கள். மேலும் கிளிநொச்சி மன்னார் முல்லைத்தீவு போன்ற இடங்கள் சிறுசிறு சைவ ஆலயங்களை உடைத்து எறிந்து அதன் மேல் யூத நாட்டு கொலைக் கருவியான சிலுவையை நிறுவி யூத தேசமாக மாற்றி தமிழின படுகொலையை நடாத்தி தமிழின் வரலாற்று இருப்பை அழித்தார்கள். மேலும் பொங்கி எழுந்த பாதிரிகள் 2019 ஆம் ஆண்டு மகாசிவராத்திரி தினமான அன்று திருகேதீஸ்வர சிவன் ஆலயத்தின் சிவ வளைவை உடைத்து எறிந்தார்கள். தமிழின் கொடியான இடபக் கொடியை காலால் மிதித்து கிழித்து எறிந்து தமிழ் அவமதிப்பு போரை தமிழர்கள் மீது நடாத்தினார்கள்.

11ஆம் பக்கம் பார்க்க...

-துரியோதரன்-

# தமிழினப் படுகொலையில் பங்கேற்ற நாடுகள் தீர்வு என்ன?

இந்தியா தமிழீழத்தை எப்போதும் தனது துருப்பு நாடாகவே பயன்படுத்தி வந்தது. அந்த வகையில் தான் ஆரம்பத்தில் அதாவது இந்திரா காந்தி காலத்தில் தனது நலன் சார்ந்து ஈழத்தமிழர்களுக்கு உதவிகள் செய்தது. ஆனால் இந்தியாவிலுள்ள உயர்சாதிகளின் திட்டத்திற்கு ஈழத்தமிழர்கள் இணங்க மாட்டார்களென்று தெரிந்த பின் நிலைமைகள் வெகுவாக மாறியது. ஈழத்தமிழர்களை கொல்ல இந்திய அமைதிப்படையை (IPKF) அனுப்பியதிலிருந்து நிறைய சொல்லலாம்.

அதேநேரத்தில் தனது நோக்கம் தமிழகத்தில் பலத்த எதிர்ப்பை உண்டாக்கியதை அடுத்து இராஜீவ் காந்தியின் கொலையை காரணமாக காட்டி தமிழீழ மக்களை ஒடுக்கவும் தனது வன்மத்தை மறைக்கவும் அதனை பயன்படுத்தியது. இலங்கை எவ்வளவு தூரம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இருந்ததுவோ. அதே அளவு இந்திய அரசாங்கமும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. ஒரே வித்தியாசம். இலங்கை அரசாங்கத்தை விட. இந்தியா உலக அளவில் தன் ஆளுமையை செலுத்தக் கூடிய நாடாக இருந்தது. ஒரு வேளை இந்தியா விடுதலைப் புலிகளை ஆதரித்திருந்தால். தனித் தமிழீழத் தேசம் மலர்ந்திருக்கும்.

**இந்தியா இரண்டு விடயங்களுக்காக அஞ்சியது:**

தமிழீழம் விடுதலை அடைந்தால். தமிழ்நாடும் விடுதலைக் கோரும். இது இந்தியாவின் புவிசார் அரசியல் நிலையையும். பொருளாதாரத்தையும் பாதிக்கும். தமிழீழம் அங்கீகரிக்கப் படாத நாடாக இருந்த காலத்தில். பிற அங்கீகரிக்கப்படாத நாடுகளைக் காட்டிலும். இராணுவம் மற்றும் தொழில் நுட்பத்தில் முன்னேறி இருந்தது. அமைதி காலகட்டத்தில் (2001-2006) தமிழீழம் அடைந்திருந்த வளர்ச்சி இந்திய உயர்சாதியினர்களுக்கு எரிச்சலை கொடுத்தது. 1991 க்கு பிறகு. இலங்கைக்கு பொருளாதார மற்றும் இராணுவ உதவிகளை இந்தியா தொடர்ச்சியாக அளிக்கத் தொடங்கியது. மூன்றாம் ஈழப் போரின் போது. விடுதலைப் புலிகள் தொடர்ச்சியான பல யுத்தங்களை வென்ற போது. இலங்கை அரசுடன் இராணுவ வர்த்தகத்திலும். நிதியுதவி அளிப்பதிலும் இந்திய அரசாங்கமே முன்னிலையில் இருந்தது.

2018 ஆம் ஆண்டு. முன்னாள் பிரதமர் வாஜ்பாயி இறப்பிற்கு இரங்கல் தெரிவிக்க இந்தியா வந்த முன்னாள் இலங்கை பிரதமர் ரணில் விக்ரமசிங்கே **"நான் இலங்கையின் பிரதமராக இருந்த போது, விடுதலைப் புலிகள் அமைப்பு மிகவும் பலமாக இருந்தது. எங்களின் பொருளாதாரமும் நலிந்திருந்தது. திரு.வாஜ்பாயி அவர்கள் தான் எங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவினார். எங்களுக்கு தேவையான இராணுவ பயிற்சிகளையும் அளித்தார். இந்த உதவிகளாலேயே கடல் புலிகளை எங்களால் கட்டுக்குள் கொண்டு வர முடிந்தது"** என்று கூறினார்.

இலங்கையின் அதிபராக இருந்த கோத்தபாய இராஜபக்சே. **"காங்கிரஸ் அரசாங்கத்துடனும், அதன் அதிகாரிகளுடனும் எங்களுக்கு நல்ல உறவு இருந்தது. விடுதலைப் புலிகளை தோற்கடிப்பத்தில் எங்களுக்கு அவர்களின் முழு ஆதரவு இருந்தது"** என்று கூறியுள்ளார்.

இலங்கையில் கடைசி கட்ட போரின் போது. இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சியே நடைபெற்றது. சோனியா காந்தியின் கட்டுப்பாட்டில் தான் காங்கிரஸின் ஆட்சி இருந்தது.

1. இந்தியாவின் நலன்களை இலங்கையில் பாதுக்காக்கவும். பாக்கிஸ்தான் மற்றும் சீனா இலங்கையில் நிலை பெறுவதை தடுக்கவும். விடுதலைப் புலிகளை அழிப்பதும். பிரபாகரனைக் கொல்வதும் மட்டும் தான் ஒரே வழி என்ற நிலைப்பாட்டை எடுத்த சோனியா காந்தி அதை இந்திய பிரதமர் மன்மோகன் சிங் ஏற்றுக் கொள்ளவும் செய்தார். அமைதி காலத்தின் போது ஈழச் சிக்கலுக்கு இராணுவத் தலையீட்டின் மூலமே முடிவு காண வேண்டும் என்று சோனியா காந்தி விடாப் பிடியாக இருந்தார். இராணுவ உத்திகள். பொதுமக்களை கட்டுப்படுத்துதல். ஊடகங்களை ஒடுக்குதல் ஆகியவற்றுடன் முற்று முழுதான போரிற்கான அறிவுரைகளை அமைதி காலத்திலும் கூட சோனியா காந்தி இலங்கை அரசாங்கத்திற்கு அளித்து வந்தார். கருணா மற்றும் கே.பி ஆகியோர் உட்பட விடுதலைப்புலிகள் தலைமையில் பிளவு ஏற்பட சோனியா காந்தி மற்றும் ரணில் விக்கிரமசிங்கே ஆகியோர் முக்கிய பங்காற்றினர்.

2. "The Statesman" இதழின் பத்திரிக்கையாளர். சாம் ராஜப்பாவின் கூற்றுப் படி : இலங்கையில் நடைபெறும் இன விடுதலைக்கான போராட்டத்தை இராணுவ நடவடிக்கை மூலம் முடிவு கட்டுவதற்கு இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு பச்சைக் கொடி காட்டியது. விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனையும். புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மானையும் கொல்வதற்கு தேவையான அனைத்து இராணுவ உதவிகளையும் அளிக்கத் தயார் என்று சோனியா காந்தி கூறியதாக கொழும்புவில் இருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

இந்திய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த எம். கே.நாராயணன். வெளியுறவுத் துறை செயலாளர் சிவசங்கர் மேனன் ஆகியோர் உட்பட பிரதமர் அலுவலகத்தில் இருந்த பல்வேறு அதிகாரிகள் தேசிய நலனை விட சோனியா காந்தியின் நலனிற்கு முக்கியத்துவம் கொடுத்து. இலங்கையில் நடந்த இனப்படுகொலைக்கு உதவி செய்தனர். உலகமே இலங்கையில் நடந்தவற்றை கண்டு கொந்தளித்துக் கொண்டு இருந்த போது. இந்திய அரசாங்கம் மட்டும் அமைதியாக இருந்தது. இராஜபக்சேவும் அவரது கூட்டாளிகளும் சர்வதேச நீதிமன்றத்தின் முன் இனப்படுகொலை மற்றும் போர் குற்றங்களுக்காக நிறுத்தப்படும் பட்சத்தில். இந்திய அரசாங்கம் மட்டும் தப்பித்து விட முடியாது. தமிழ்நாட்டின் முதல்வராக இருந்த கருணாநிதி அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இந்தியாவிற்கு துணை நின்றார். அவரின் அமைதியும் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு அளித்த ஆதரவும் கேடு விளைவித்தது. பிரபாகரன் கோரிய உதவிகளை புறம் தள்ளிவிட்டு. தமிழ்நாட்டில் இருந்த விடுதலைப் புலிகளின் சொத்துகளை பறிமுதல் செய்து. காங்கிரஸ் கூட்டணிக்கு தன்னுடைய ஆதரவை விலக்கிக் கொள்ள மறுத்தார்.

3. Tamil Nadu Coastal Security Group உதவியுடன். இந்திய உளவுத் துறை அமைப்பான RAW 2007 இல். தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் செயல்பாட்டையும். விடுதலைப் புலிகள் தலைவர்கள் தமிழ்நாட்டிற்கு தப்பி வருவதை தடுக்கவும். ஆயுதங்கள் பெறுவதற்கு தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் வைத்திருந்த தொடர்புகளையும் முடக்கியது.

4. இலங்கை மீது பொருளாதார தடை விதிக்கவும். இனப்படுகொலை மற்றும் போர் குற்றத்திற்கு காரணமானவர்களை விசாரிக்க ஐ.நா.வில் தீர்மானம் கொண்டு வரவும் வற்புறுத்தி. தமிழ்நாட்டு சட்டமன்றத்தில் 2011 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை. மத்திய அரசு செயல்படுத்த போதிய அழுத்தங்களை கருணாநிதி மத்திய அரசிற்கு அளிக்கவில்லை. ஐ.நா மனித உரிமை அவையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்வதில் இந்திய அரசாங்கம் முக்கியப் பங்காற்றியது. அதையும் கருணாநிதி கண்டிக்கவில்லை. தாங்கள் வற்புறுத்தலின் பெயரிலேயே தீர்மானம் நீர்த்துப் போகச் செய்யப்பட்டது என்று மன்மோகன் சிங் கடிதம் வாயிலாக கூறிய பிறகும் கூட கருணாநிதி அமைதி காத்தார்.

5. அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகள் விடுதலைப் புலிகள் அமைப்பை தீவிரவாத அமைப்புப் பட்டியலில் வைப்பது. ஐ.நா மனித உரிமை ஆணையத்தில் இலங்கை அரசாங்கத்தைப் பாதுகாப்பது. கனடாவின் வலதுசாரி கட்சிகளில் உள்ள இந்தியர்களை கொண்டு விடுதலைப் புலித் தலைவர்களை தடை செய்யும் தீர்மானத்தைக் கொண்டு வருவது போன்ற அரசியல் ரீதியான நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் செய்தது.

6. இராணுவ ரீதியில். இலங்கை அரசாங்கத்திற்கு 100 மில்லியன் அமெரிக்க டாலர்களை கடனாகவும். போர் விமானங்கள். தாக்குதலுக்கு தேவையான ஹெலிகாப்டர்கள். ஆயுதங்கள் ஆகியவற்றை இந்தியா அளித்தது. அமைதி காலத்தில் மட்டும் இந்திய அரசாங்கம்: JY11 3D ரேடார் கருவிகளை இலங்கை அரசாங்கத்திற்கு 5 மில்லியன் டாலருக்கு விற்றது இரண்டு Indra IN-PC-2னு ராடார் கருவிகள். இலவசமாக அளித்தது. 13 MG போர் விமானங்கள். நூற்றுக்கணகான போர்வீரர்கள் அணியும் உடுப்புகள். மற்றும் தாக்குதலுக்கு தேவையான ஹெலிகாப்டர்கள் ஆகியவற்றை வழங்கியது.

7. இந்தியாவின் செயற்கைக் கோள்களை பயன்படுத்திக் கொள்ள இலங்கை இராணுவத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது. அதன் மூலமும். தானியங்கி விமானங்கள் (Drone) மூலமும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை இலங்கை இராணுவம் கண்காணித்தது. கடல் புலிகளின் கலன்கள் மீது. ஆயுதம் ஏற்றிச் செல்லும் கப்பல்கள் மீது இந்திய விமானப் படை தொடர் தாக்குதல்களை நடத்தியது. விடுதலைப் புலிகள் ஆயுதங்களை இறக்குமதி செய்வதை. விடுதலைப்



புலிகள் தலைவர்கள் தப்பிச் செல்வதையும் தடுக்க இந்திய கப்பற்படை நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இந்திய கப்பல் படை. விடுதலைப் புலிகளின் கிடங்குகளாக பயன்படுத்திய பத்து கலன்களை (floating warehouses) அழித்தது. இதனால் கடற் புலிகள் அமைப்பு மிகவும் பலவீனம் அடைந்தது. கடற்பகுதிகளை கண்காணித்து. சேகரித்த தகவல்களை இலங்கையின் கடற்படைக்கு அளித்தது. கடற் புலிகளின் கலன்கள் மீது விமானப் படைத் தாக்குதல்களையும் நடத்தியது. இந்தியாவில் இராணுவ பயிற்சி பெறும் முதன்மை நாடாக இலங்கை இருந்தது. 2008 இல். இலங்கை இராணுவத்திற்கு வருடாந்திர பயிற்சிகளை அளிக்கவும் இந்தியா ஏற்பாடுகள் செய்தது. இந்தியாவின் பாதுகாப்புச் செயலாளர். வெளியுறவுத் துறை செயலாளர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோருடன் இராஜபக்சேவின் சகோதரர்கள் மற்றும் அவர்களின் செயலாளர்கள் அதிகாரப்பூர்வமாக அல்லாமல். தனிப்பட்ட முறையில் தகவல்களை பறிமாறிக்கொள்வதற்கான முறைமைகள் ஏற்படுத்தப்பட்டன. 2007-2009 கால கட்டத்தில் இவர்கள் பல முறை சந்தித்துக் கொண்டனர்.

8. இலங்கையின் கடற்படை தளபதியான வசந்தா கரணகோடா **"விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பல்கள் இந்திய கப்பற்படை அளித்த தகவல்களை கொண்டு ஒவ்வொன்றாக அழிக்கப்பட்டன. இதன் காரணமாக விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளுக்கு எல்லா வகையான பொருட்களும் கொண்டு செல்லப்படுவது தடுக்கப்பட்டது. இதனால் எங்களால் வேகமாக முன்னேற முடிந்தது. இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் புலிகள் கட்டியமைத்திருந்த தேசத்தை எங்களால் அழிக்க முடிந்தது."** என்று கூறியுள்ளார்.

இலங்கை அரசு மீதான சர்வதேச போர் குற்றங்களை விசாரிக்க ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் எடுக்கும் முயற்சிகளை இந்திய அரசாங்கம் இன்றளவும் விடாப்பிடியாக தடுத்து வருகிறது.

**சீனா:**

rajabakshe china இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரின் கடைசி கட்டத்தில் தான் இலங்கையின் மிக முக்கியமான நட்பு நாடாக சீனா உருவெடுத்தது. சீனா தன்னுடைய "பட்டுச் சாலை" திட்டத்தை தொடங்கியிருந்தது. அண்டை நாடுகளுக்கு கடன் கொடுத்து அவர்களின் துறைமுகங்களைக் கைப்பற்றும் நடவடிக்கைகளை (Debt Traps) மேற்கொண்டிருந்தது. விடுதலைப் புலிகள் வசம் இருந்த திருகோணமலை துறைமுகமும். இலங்கை அரசாங்கத்தின் வசம் இருந்த ஹம்பாந்தோட்ட துறைமுகத்தின் மீதும் சீனா ஆர்வம் காட்டியது. இதைக் காட்டியே. விடுதலைப் புலிகளை தோற்கடிக்க உதவுமாறு சீனாவை இலங்கை அரசாங்கம் கேட்டுக் கொண்டது.

7 பில்லியன் டாலர் நிதி உதவியை இலங்கை இராணுவத்திற்கு சீனா வழங்கியது. ஆறு F-7 போர் விமானங்களை இலவசமாக இலங்கைக்கு அளித்த சீனா. 37.6 மில்லியன் டாலர் மதிப்பிலான. வெடி குண்டுகள். பீரங்கிகள். குறிபார்த்து அழிக்கும் ஏவுகணைகள்(Guided missiles). ராக்கெட் லான்சர்கள். தரையில் இருந்து வானத்திற்கு சென்று விமானங்களை அழிக்கும் ஏவுகணைகள் (surface-to-air missiles). ஊடுறுவி அழிக்கும் வெடிகுண்டுகள் மற்றும் ராக்கெட்டுகள். பீரங்கி குண்டுகள். இரவு நேரங்களில் பார்வைக்காக பயன்படுத்தப்படும் கண்ணாடிகள். பாதுகாப்பு இயந்திரங்கள். பீரங்கிகள். போர் விமானங்கள். கப்பல்கள். ராடார் மற்றும் தொலை தொடர்பு கருவிகள் ஆகியவற்றையும். இலங்கை வான் படை வீரர்களுக்கான பயிற்சியையும் அளித்தது.

"The Independent UK" பத்திரிக்கை சீனாவின் பங்களிப்பை விவரிக்கிறது : 1 பில்லியன் டாலர் பணத்தை இலங்கை அரசிற்கு சீனா கொடுத்ததுடன் பல மில்லியன் டாலர்கள் மதிப்பிலான நவீன ஆயுதங்கள். இலவசமாக ஆறு F7 போர் விமானங்கள் ஆகியவற்றையும் இலங்கைக்கு அளித்தது. இலங்கைக்கு ஆயுதங்களையும். போர் விமான பயிற்சியும் அளிக்க தனது நட்பு நாடான பாக்கிஸ்தானிடம் சீனா கூறியது. மிக முக்கியமாக. ஐ.நா பாதுகாப்பு அவையில் இலங்கை பற்றிய விவாதம் எழாமல் பார்த்துக் கொண்டது. Norinco என்ற சீன உற்பத்தி நிறுவனம் மட்டும் 200 மில்லியன் டாலர் மதிப்பிலான ஆயுதங்களை இலங்கை அரசிற்கு அளித்துள்ளது. Poly Technologies என்ற சீன ஆயுத உற்பத்தி நிறுவனம். 120 mm மோர்டார் குண்டுகளை இலங்கை அரசிற்கு விற்றது. 70.000 முறை சுடுவதற்கான குண்டுகள் மட்டும் 10.4 மில்லியன் டாலருக்கு விற்கப்பட்டது.

இதுமட்டுமல்லாமல். 20 மில்லியன் டாலர் மதிப்பிலான 152mm பீரங்கி வெடிகுண்டுகள். 3.7 மில்லியன் டாலர் பெருமானமுள்ள வெடி குண்டுகள் ஆகியவற்றை சீனாவில் இருந்து இறக்குமதி செய்தது இலங்கை அரசு. இலங்கை கடற்படைக்கு மட்டும் 2.7 மில்லியன் டாலர் பெருமானமுள்ள ஆயுதங்கள். 14.5mm தோட்டாக்கள். இரண்டாயிரம் RPG-7 ராக்கெட்டுகள். ஐநூறு 81mm மோர்டார் குண்டுகள் ஆகியவற்றை சீனா அளித்தது. இது மட்டுமல்லாமல் போர் கப்பல்களில் பயன்படுத்தப்படும் ஐம்பது14.5mm வகை இரட்டைக் குழல் துப்பாக்கிகள். இருநூறு 12.7mm கனரக இயந்திரத் துப்பாக்கிகள். இருநூறு 7.62mm இயந்திரத் துப்பாக்கிகள். ஆயிரம் 7.62 2mm துணை இயந்திரத் துப்பாக்கிகள். உட்பட ஷியாங்காய் தரத்திலான போர்ப் படகுகள் ஆகியவற்றையும் சீனா வழங்கியது. 2008க்கு பிறகு இலங்கை கப்பல் படையில் நாலில் ஒரு பங்கு சீனா அளித்த படகுகளே இருந்தன.

போர் முடிந்த பிறகு. இலங்கை அரசின் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களை விசாரிக்கக் கூடாது என்றும். இலங்கை அரசு எந்த தப்பும் செய்யவில்லை என்றும் சீன வெளியுறவுத் துறை அதிகாரிகள் ஐ.நா மனித உரிமை ஆணையத்தை வற்புறுத்தினர்.

**தொடரும்...**

**இரணியன்**

# வருமான வரிக்கு எதிரான தொழிற்சங்கங்களின் போராட்டம்

இன்று வரும், நாளை வரும் என்று பல மாதங்களாய் காத்திருந்த சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிணையெடுப்பு உதவி, இலங்கையின் கைக்கெட்டும் நிலைக்கு வந்துள்ளது.

'இதிலிருந்து இனி இலங்கை மீள முடியாது' என்ற நிலையிலிருந்த இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்துக்கொண்ட உறுதியான, அதேவேளை கடினமான, பிரபல்யமற்ற மீட்சிக்கான பல நடவடிக்கைகள் மூலம், இன்று பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்சி எனும் நீண்டகாலப் பயணத்தில், முதலடியை இலங்கை எடுத்து வைக்க எத்தனிக்கிறது.

இந்த நிலையில் தான், இலங்கையின் பல தொழிற்சங்கங்களும் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன. வரலாறு காணாத நாட்டின் மோசமான நிதி நெருக்கடிக்கு மத்தியில், சர்வதேச நாணய நிதியத்தின் பிணை எடுப்புக்கான முன்நிபந்தனையாக விதிக்கப்பட்ட அதிகரித்த வரிகள் உட்பட, உயர் வாழ்க்கைச் செலவுகளுக்கு எதிராக இலங்கை முழுவதும் உள்ள வங்கிகள், மருத்துவமனைகள், பாடசாலைகள், ரயில் சேவை உள்ளிட்ட பல துறைகளிலுமுள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஜனவரி முதல் வருமான வரி கடுமையாக உயர்த்தப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், தொழிற்சங்கங்களுடன் தொழில் வல்லுநர்களும் இணைந்துள்ளனர். தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தத்தின் காலம் புதிய வரிகளைத் திரும்பப் பெறுவதற்கான அரசாங்கத்தின் பதிலைப் பொறுத்தது என்று கூறுகின்றன. அவை, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து $ 2.9 பில்லியன் டொலர் மீட்புப் பொதிக்கு தகுதி பெற எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் அடங்கும்.

மேலும், அதிக வட்டி விகிதத்தை குறைக்கவும், மின் கட்டணத்தை குறைக்கவும், போராட்டக்காரர்கள் அரசாங்கத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த அரசாங்க உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கப் போராட்டத்தின் பிரதான கோரிக்கையாக, வருமான வரி அளவு குறைக்கப்பட வேண்டும் என்பதாகத்தான் இருக்கின்றது.

2022ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி திருத்தச் சட்டம், தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கான வரி முறையில் திருத்தங்களை உறுதிப்படுத்தும் வகையில், பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு, 19 டிசெம்பர் 2022 அன்று சபாநாயகரால் சான்றளிக்கப்பட்டது. தனிநபர் வருமான வரி மீதான வரி விதிகள் தொடர்பான திருத்தங்கள், ஜனவரி முதலாம் திகதி முதல் அமலுக்கு வந்தன.

முதலாம் திகதி ஜனவரி 2023 முதல், தனிநபர் வருமான வரி அரங்கில் அறிமுகப்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றமாக, வருமான வரி வீத அதிகரிப்பையும் வருமான வரி விலக்கு அளவின் குறைவையும் குறிப்பிடலாம்.

வரிவிலக்குப் பெற்ற வருமான அளவாக இருந்த வருடத்துக்கு மூன்று மில்லியன் ரூபாய் (மாதத்துக்கு 2,50,000 ரூபாய்), வருடத்துக்கு 1.2 மில்லியன் ரூபாயாக (மாதத்துக்கு 1,00,000 ரூபாய்) குறைக்கப்பட்டது. இதன் அர்த்தம், முன்பு, மாதத்துக்கு 2,50,000 ரூபாய்க்கு அதிகமாக வருமானம் பெற்றவர்களே வரி செலுத்த வேண்டியதாக இருந்த நிலையில், தற்போது மாதம் 1,00,000 ரூபாய்க்கு அதிகமாக வருமானம் பெறுகின்றவர்கள் வரி செலுத்த வேண்டியதாக உள்ளது.

வருமான வரி விகிதங்கள், ஆரோகண அடிப்படையில் ஒவ்வொரு ரூ. 5,00,000 வருமானக் கட்டங்களுக்கும் அதிகரிப்பதாக அமைந்துள்ளது. ஒவ்வொருவருக்கும் ரூ. 5,00,000 வருமானக் கட்டங்களுக்கும், தனிநபர் வருமான வரி விகிதம் 6%, 12%, 18%, 24%,30%, 36% பொருந்தும்.

உதாரணமாக, வரிக்கு உட்பட்ட வருமானம் ரூ.19,00,000 இருக்கும் ஒரு நபரை எடுத்துக்



கொண்டால், ஆண்டுக்கு ரூ. 19,00,000 வருமானத்துக்கு வருமான வரி விலக்குள்ள வருமானம் 1,200,000 ஆகும். ஆகவே, வருமான வரி கட்ட வேண்டிய வருமானம் ரூ. 7,00,000 ஆகும். அதன்படி, வருமான வரி விகிதம் முதல் ரூ. 5,00,000 க்கு 6%, மற்றும் மிகுதி ரூ. 200,000 க்கு 12%. ஆகவே செலுத்த வேண்டிய மொத்த வரி ரூ. 54,000 ஆகும்.

2023 ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர், கோட்டாபய ராஜபக்ஷவின் நாட்டை வங்குரோத்தாக்கிய வரிக்கொள்கையின் கீழ், வருடத்துக்கு மூன்று மில்லியன் ரூபாய் வரை வருமான வரி கட்டத் தேவையில்லை. ஆகவே, மேற்சொன்ன நபர் முன்னர் எந்தவொரு வருமான வரியையும் கட்டியிருக்க மாட்டார். ஆனால் தற்போது, வருடத்துக்கு ரூ. 54,000 (மாதத்துக்கு ரூ.4,500) வருமான வரியாக செலுத்த வேண்டியதாக உள்ளது.

ஆரோகண அடிப்படையில் வருமான வரி வீதங்கள் அமைந்திருப்பதால், வருமானம் அதிகரிக்க அதிகரிக்க, வரி வீதமும் அதிகரிக்கும். மாதம் ரூ. 1,00,000 அல்லது அதற்கு குறைவாக வருமானம் பெறுபவர் வருமான வரி செலுத்தத் தேவையில்லை. மாதம் ரூ.1,50,000 வருமானம் பெறுபவர் மாதம் ரூ 3,500 தான் வரியாக செலுத்த வேண்டும். மாதம் ரூ. 200,000 வருமானம் பெறுபவர் மாதம் ரூ.10,000 மும், மாதம் ரூ. 2,50,000 வருமானம் பெறுபவர் மாதம் ரூ.21,000 மும் வருமான வரி செலுத்த வேண்டும். மாதம் ரூ. 4,00,000 வருமானம் பெறுபவர் மாதம் ரூ.70,500 உம், மாதம் ரூ.10,00,000 வருமானம் பெறுபவர் மாதம் ரூ.2,86,500 உம் வருமான வரியாகச் செலுத்த வேண்டும். வருமான அளவு கூடக் கூட, ஒவ்வொரு 5,00,000 இற்கும் வரி வீதம் அதிகரிக்கும் ஆரோகண வரிவிதிப்பு முறை இதுவாகும்.

இந்த வரி முறையின் கீழ், மிக அதிகமாக வருமானம் பெறுபவர்களுக்கு அதிக வருமான வரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதில் பாதிப்பு என்று பார்த்தால் கூட, அது அதிக வருமானம் பெறுபவர்களுக்குத்தான். இதற்காக ஏன் அரசாங்க தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டம் செய்கிறார்கள்? ஆசிரியர்களில் எத்தனை பேர் ரூ 1,00,000 இற்கு மேல் சம்பளம் பெறுகிறார்கள்? அரசாங்க உத்தியோகத்தர்கள் எத்தனை பேர் ரூ 1,00,000 இற்கு மேல் சம்பளம் பெறுகிறார்கள்?

ரூ 1,00,000 இற்கு குறைவாக சம்பளம் பெறுபவர்களுக்கு வருமான வரியே கிடையாது. ஆகவே இவர்கள் எதற்காக வருமான வரி விதிப்புக்கு எதிராகப் போராடுகிறார்கள் என்பது ஊன்றிக் கவனிக்க வேண்டிய கேள்வியாகவே இருக்கிறது.

ஏறத்தாழ ரூ 5,00,000 அல்லது அதற்கு மேல் மாதச்சம்பளம் பெறுகிறவர்களைத்தான் இந்த வரிகள் அதிகமாகப் 'பாதிக்கின்றன' எனலாம். மாதச்சம்பளம் ரூ 5,00,000 இற்கு மாதந்தோறும் ரூ 1,06,500 வரியாகச் செலுத்த வேண்டும். அப்படிச் செலுத்திய பின்னரும், அவர்களிடம் ரூ 3,93,500 வரிக்குப் பின்னரான வருமானம் இருக்கும்.

இலங்கை சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரவியல் துறையால் வெளியிடப்பட்ட குடும்ப வருமானம் மற்றும் செலவுக் கணக்கெடுப்பு 2019 தரவுகளின் படி, இலங்கையின் நகர்ப்புற குடும்பம் ஒன்றின் சராசரி மாத வருமானம் ரூ.1,16,670 ஆகும். கிராமப்புற குடும்பம் ஒன்றின் சராசரி மாத வருமானம் ரூ.69,517 ஆகும். பெருந்தோட்டத்துறை குடும்பம் ஒன்றின் சராசரி மாத வருமானம் ரூ.46,865 ஆகும். இது குடும்ப வருமானம் தனிநபர் வருமானம் அல்ல!

ஆகவே, பெரும்பாலான இலங்கையர்கள், (சில தரவுகளின் படி, 85%-90%- ஆன இலங்கையர்கள்) வருமான வரி செலுத்த வேண்டியதே இல்லை. உண்மை நிலைவரம் இப்படியாக இருக்கையில், தொழிற்சங்கங்கள் வருமான வரி அதிகரிப்பை எதிர்த்துப் போராடுவது அர்த்தமற்றதாக இருக்கிறது. "அதிக வருமானம் பெறுபவர்களிடம், அதிக வரி அறவிடுங்கள்" என்று உலகமெல்லாம் தொழிற்சங்கங்கள் போராடும் போது, இலங்கையில் அதற்கு நேரெதிராக வருமான வரியைக் குறையுங்கள் என்று தொழிற்சங்கங்கள் போராடுவது நகைமுரண். நிற்க!



இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி நிலை பரந்துபட்டளவில் விலை உயர்வுகளை ஏற்படுத்தி இருக்கிறது. இதனால் பாதிக்கப்பட்ட, மிக அடித்தட்டு மக்களுக்கு அரசாங்கத்தின் உதவி அவசியம். அப்படி அரசாங்கம் உதவி செய்ய, அரசாங்கத்துக்கு வருமானம் அவசியம். வரியும் விதிக்கக்கூடாது உதவியும் செய்ய வேண்டும் என்றால், அரசாங்கம் அதை எப்படிச் செய்வது? கோட்டா செய்தது போல, பணத்தை அச்சிட்டு அச்சிட்டு செலவு செய்தால், இலங்கையில் பணவீக்கம் சிம்பாப்வேயைப் போலத்தான் இருக்கும். பிறகு, 100 மில்லியன் ரூபாய் கொடுத்து ஒரு பாணை வாங்க வேண்டிய நிலை தான் ஏற்படும்.

பொருளியல் சற்றே கடினமான விடயம் சாதாரண மக்களுக்கு புரிவது கடினம் என்பதைப் புரிந்துகொண்ட சுயநல எண்ணம் கொண்ட தொழிற்சங்கத் தலைவர்கள், தமது அரசியலுக்காகவும், தமது அரசியல் முதலாளிகளுக்காகவும், நடத்தும் நாடகம் தான் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கைகள் என்ற உண்மையை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**நெற்றிப்பொறியன்**

# பிராந்திய செய்திகள்

## கல்வி முறையில் மாற்றம்?



கல்வித்துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஏனைய நாடுகள் தமது கல்வி முறையை எதிர்கால தொழில்களுக்கு ஏற்றவாறு மாற்றியமைத்துள்ள போதிலும், இலங்கை இன்னும் அவ்வாறு செய்யவில்லை என அமைச்சர் குறிப்பிட்டார்


## பால்மா விலைக் குறைப்பு!

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை அன்று (01) முதல் அமுலுக்கு வரும் வகையில் குறைக்கப்படுவதாக பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இறக்குமதி செய்யப்படும் 1 கிலோ பால்மா பொதியின் விலை 200 ரூபாவினால் குறைக்கப்படுகிறது.

இதேவேளை 400 கிராம் பால்மா பொதியின் விலை 80. ரூபாவால் குறைக்கப்படுகிறது. எவ்வாறாயினும், வார இறுதி விடுமுறையைத் தொடர்ந்து புதிய விலையுடன் கூடிய பால்மா பொதிகள் திங்கட்கிழமை சந்தைக்கு வெளியிடப்படும் என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.



## சீனி, பருப்பு மற்றும் கோதுமையின் விலை குறைப்பு !



மூன்று அத்தியாவசிய இறக்குமதிப் பொருட்களின் விலைகள் குறைந்துள்ளன.

இதன்படி, வெள்ளை சீனி, பருப்பு மற்றும் கோதுமை மாவின் விலைகள் குறைந்துள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஒரு கிலோ வெள்ளை சீனி 20 ரூபா விலை குறைக்கப்பட்டு 200 ரூபாவுக்கும், ஒரு கிலோ பருப்பு 30 ரூபா விலை குறைக்கப்பட்டு 310 ரூபாவுக்கும், அத்துடன், 230 ரூபாவாக இருந்த இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மாவின் விலை 210 ரூபாவாக குறைந்துள்ளதாக சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

## சிறுதொழில் முயற்சியாளர்களுக்காக மகிழ்ச்சிகர அறிவிப்பு

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் சிறிய அளவிலும் பொருட்களை தயாரிக்கும் தொழில் முயற்சியாளர்கள் எவ்வித கட்டணமும் இன்றி அன்று (01) முதல் வீதியோரங்களில் இருந்து பொருட்களை விற்பனை செய்ய அனுமதிக்கப்படுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது.

பண்டிகை காலத்தை முன்னிட்டு தற்காலிகமாக இந்த அனுமதி வழங்கப்படும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, உற்பத்தியாளர்கள் அன்று முதல் ஏப்ரல் 12ம் திகதி வரை வீதியோரங்களில் ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட பகுதிகளில் அந்தந்த பகுதியின் பிரதேச செயலாளரின் ஒப்புதலுடனும் மேற்பார்வையுடனும் தங்கள் பொருட்களை விற்பனை செய்ய வாய்ப்பு உள்ளது.

மஹரகம நகரம் உட்பட பல இடங்களில் இவ்வாறான விசேட இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இதே போன்று நாடளாவிய ரீதியில் ஏனைய அனைத்துப் பகுதிகளிலும் பண்டிகைக் காலம் முடியும் வரை உற்பத்தியாளர்கள் தமது பொருட்களை நேரடியாக நுகர்வோருக்கு தற்காலிகமாக விற்பனை செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## மலையக மாணவர்களுக்கான இந்திய அரசின் உதவித்தொகை நீடிப்பு

இந்திய அரசு தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளது படிப்பிற்கான உதவித்தொகையை நீடித்து வருகின்றது. இலங்கையில் உள்ள அரச தொழில்நுட்பக் கல்லூரிகளில் உயர்தரம், இளங்கலை பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்நுட்பக் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இந்த புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

6 திறமைச் சித்திகளுடன் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தில் சித்தியெய்தியவர்கள் அல்லது உயர்தரப் பரீட்சையில் சித்தி எய்திய 25 வயதுக்கு குறைவானவர்கள் இந்த உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உதவித்தொகையை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களை இந்திய உயர் ஸ்தானிகராலயம் தற்போது கோரியுள்ளது. விண்ணப்பப் படிவங்களை **www.hcicolombo.gov.in** என்ற இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் அல்லது இந்திய உயர்ஸ்தானிகரகம், அஞ்சல் பெட்டி எண். 36-38, காலி வீதி, கொழும்பு-03 மற்றும் 47, மஹாமாயா மாவத்தை கண்டியில் அமைந்துள்ள இந்திய உதவி உயர்ஸ்தானிகரகத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பதாரர்கள் தமது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ்கள் மற்றும் பெற்றோரின் சமீபத்திய வேதனச் சீட்டு மற்றும் பெற்றோரின் தொழில் தொடர்பான தோட்டக் முகாமையாளரின் சான்றிதழ் ஆகியவற்றுடன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் கௌரவ செயலாளர், இந்திய உயர்ஸ்தானிகரகம், இல.882, கொழும்பு-03 என்ற முகவரிக்கு 2023, ஏப்ரல் 29 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

## ஆற்றில் மூழ்கிய சிறுவனை காணவில்லை

ஹசலக்க, வெரகந்தோட்டையிலுள்ள மகாவலி ஆற்றில் மூழ்கி எட்டு வயது சிறுவர் காணாமல் போயுள்ளது. சிறுவர் தனது மூத்த சகோதரருடன் ஆற்றில் குளிக்கச் சென்ற போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காணாமல் போன சிறுவர் வெரகந்தோட்டை பகுதியைச் சேர்ந்தவர். சிறுவனை தேடும் பணி நடந்து வருகிறது. சம்பவம் தொடர்பில் ஹசலக்க பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





## மீன் விலை 25 வீதம் அளவில் குறைவடையக்கூடும் !


மீன் விலை 25 வீதம் அளவில் குறைவடையக்கூடும் என பேலியகொடை மத்திய கடலுணவு வர்த்தகர்கள் சங்கத்தின் செயலாளர் ஜயந்த குரே கூறியுள்ளார்.

எரிபொருள் விலை குறைக்கப்பட்டமையால், முன்னர் கடற்றொழிலுக்கு செல்லாதிருந்தவர்கள், தற்போது தங்களது தொழிலை மீள ஆரம்பித்துள்ளனர். இதனால், கடலுணவுகள் அதிகளவில் கிடைப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மாபிள்களின் விலைகள் குறைவடைந்துள்ளன!

சந்தையில், மாபிள்களின் விலை, 12.5 முதல் 15 வீதத்திற்கு இடைப்பட்ட அளவில் குறைவடைந்துள்ளதாக, லங்கா டைல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மஹேந்ர ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ரூபாவின் பெறுமதி அதிகரித்ததை அடுத்து, உள்ளூர் சந்தையில், அனைத்து மூலப்பொருட்களின் விலைகளும் குறைவடைந்து வருகின்றன. அதேநேரம், மாபிள்களுக்கான கேள்வியும் சந்தையில் தற்போது வீழ்ச்சியடைந்து வருகின்றது. இந்த நிலையில், கட்டாயமாக மாபிள்களின் விலைகளைக் குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக லங்கா டைல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மஹேந்ர ஜயசேகர தெரிவித்துள்ளார்.




## தெஹிவளை மேம்பாலத்தில் விபத்து


தெஹிவளை மேம்பாலத்தில் அன்றிரவு(31) காரும் முச்சக்கரவண்டியும் மோதியதில் தீ பரவியுள்ளது.

முச்சக்கரவண்டியின் சாரதி தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தீயினால் காரும் முச்சக்கரவண்டியும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# சினி துளிகள்




## சிம்புவின் பத்து தல எவ்வளவு வசூல்



கன்னட மொழியில் வெளியான ஆரகவை என்ற படத்தின் ரீமேக்காக தமிழில் தயாரான படம் தான் பத்து தல. சிம்பு மற்றும் கௌதம் கார்த்திக் இருவரும் இணைந்து நடித்துள்ள இப்படம் அன்று(30) வெளியாகி இருந்தது.

அங்கு செம ஹிட்டடித்த படம் என்றாலும் தமிழில் சிலர் புதியதாக பார்க்கும் படம் தான். இப்படத்தில் சிம்பு இருப்பதாலேயே செம ஸ்பெஷல்.

பெரிய எதிர்ப்பார்ப்பில் இருந்த பத்து தல திரைப்படம் வெளியாகி முதல் நாளில் தமிழகத்தில் மட்டும் ரூ. 7 கோடிக்கு மேல் வசூலித்துள்ளதாக கூறப்படுகிறது.

வரும் நாட்களிலும் படத்திற்கான வசூல் பெரிய அளவில் இருக்கும் என்கின்றனர்.

## பாடகர் விஜய் யேசுதாஸ் வீட்டில் நகை கொள்ளை..



பிரபல பின்னணி பாடகர் யேசுதாஸின் மகன் விஜய் யேசுதாஸ் வீடு சென்னை அபிராமிபுரத்தில் உள்ளது.

இந்த வீட்டில் இருந்து கிட்டத்தட்ட 60 சவரன் தங்கம் மற்றும் வைர நகைகள் காணாமல் போனதாக அவரது மனைவி தர்ஷனா பாலா அபிராமிபுரத்தில் உள்ள காவல் நிலையத்தில் புகாரளித்துள்ளார். கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 2-ஆம் திகதி இந்த தங்க நகைகளை பார்த்ததாகவும் அதன் பின்னர் பெப்ரவரி மாதம் வீட்டில் நகைகளை பார்த்த போது காணவில்லை எனவும் வீட்டில் வேலை செய்யும் மேனகா மற்றும் பெருமாள் ஆகியோர் மீது சந்தேகம் இருப்பதாக புகாரளித்துள்ளார்.

இது தொடர்பாக அபிராமிபுரம் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். வீட்டில் அருகில் இருக்கும் சிசிடிவி காட்சிகள் மற்றும் -வீட்டில் வேலை செய்யும் பணியாளர்கள் ஆகியோரை நேரில் வரவழைத்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## ஷங்கர் படத்தில் நடிக்க இத்தனை கோடி சம்பளம் வாங்கினாரா கியாரா அத்வானி?

தமிழ் சினிமாவின் பிரமாண்ட இயக்குனராக திகழ்பவர் தான் ஷங்கர். தற்போது இவர் ராம் சரணின் 15 -வது படமான கேம் சேஞ்சர் படத்தை இயக்கி வருகிறார்.

இதில் கியாரா அத்வானி. எஸ்.ஜே.சூர்யா, அஞ்சலி. சமுத்திரக்கனி. சுனில். ஸ்ரீகாந்த் போன்ற பல பிரபலங்கள் நடித்து வருகின்றனர்.

சமீபத்தில் ராம் சரண் பிறந்த நாள் முன்னிட்டு இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியாகி சோசியல் மீடியா பக்கத்தில் வேகமாக பரவியது.

இந்நிலையில் இப்படத்தில் ஹீரோயினாக நடிக்கும் பாலிவுட் பிரபலம் கியாரா அத்வானிக்கு ரூபாய் 4 கோடி சம்பளம் பேசப்பட்டுள்ளதாக சினிமா வட்டாரங்களில் கூறப்படுகிறது.



## தங்கலான் படப்பிடிப்பில் இணைந்த விக்ரம்

இயக்குனர் பா.இரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடிக்கும் திரைப்படம் "தங்கலான்".இந்தப் படத்தை ஞானவேல் ராஜா தயாரிக்க ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைக்கிறார்.

இப்படம் கர்நாடக மாநிலத்தில் உள்ள கே.ஜி.எஃப். குறித்த கதை என்று இயக்குனர் பா.இரஞ்சித் தெரிவித்திருந்தார். இதனால் இந்த படம் மீது ரசிகர்களிடையே மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. விக்ரம் இப்படத்தில் பார்வதி. மாளவிகா மோகனன். பசுபதி. ஹரி. பிரிட்டிஷ் நடிகர் டேனியல் கால்டகிரோன் நடிக்கின்றனர்.

இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கிறார். "தங்கலான்" படத்தின் படப்பிடிப்பு கடந்த ஆண்டு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில். விக்ரம் இப்படப்பிடிப்பில் மீண்டும் இணைந்துள்ளார். இதனை தனது சமூக வலைதளத்தில் புகைப்படம் ஒன்றை பகிர்ந்து தெரிவித்துள்ளார்.



## கவின் இடத்தை பிடித்த குக் வித் கோமாளி அஸ்வின்

டாடா படத்தின் வெற்றிக்கு பின் கவின் திரையுலகில் தனக்கென்று தனி இடத்தை பிடித்துள்ளார். விமர்சன ரீதியாகவும். வசூல் ரீதியாகவும் இப்படம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இப்படத்திற்கு பின் கவின் நடிக்கவிருக்கும் படம் குறித்து தகவல் வெளியாகி கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டே விக்னேஷ் சிவன் தயாரிப்பாளர் கவின் ஊர்க்குருவி எனும் படத்தில் நடிக்கவுள்ளார் என தகவல் வெளியானது. கவினுக்கு பதில் இவர் தான்
ஆனால். தற்போது அப்படத்தில் கவின் நடிக்கவில்லை என தெரியவந்துள்ளது.

கவின் ஹீரோவாக நடிக்கவிருந்த இப்படத்தில் கவினுக்கு பதிலாக குக் வித் கோமாளி பிரபலம் அஸ்வின் ஹீரோவாக நடிக்கவுள்ளாராம். அதே போல் விக்னேஷ் சிவன் தயாரிப்பு நிறுவனம் தயாரிப்பதாக இருந்த இப்படம் Hamsisi entertainment நிறுவனத்தின் கைக்கு மாறியுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது. விரைவில் இப்படத்தின் அறிவிப்பு வெளியாகும் என கூறப்படுகிறது.



## நானி, கீர்த்தி சுரேஷ் நடித்துள்ள தசாரா படத்தின் முதல் நாள் வசூல்

அறிமுக இயக்குனர் ஸ்ரீகாந்த் என்பவர் இயக்க நானி மற்றும் கீர்த்தி சுரேஷ் ஜோடி சேர்ந்து நடித்துள்ள திரைப்படம் தசரா. இப்படத்திற்காக படக்குழு ஏகப்பட்ட புரொமோஷன் நிகழ்ச்சிகளை நடத்தினார். அன்று மார்ச் 30 வெளியான இப்படம் ரூ. 65 கோடி பட்ஜெட்டில் தயாராகி இருக்கிறது. நல்ல விமர்சனத்தையும் பெற்று வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் இப்படம் முதல் நாளில் உலகம் முழுவதும் ரூ. 33 கோடி வரை வசூலித்துள்ளதாக கூறப்படுகிறது.



# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



சுழியோடி

14



காட்டினை சுற்றி இராணுவ முற்றுகை இறுக்கத்தினால் உணவு பிரச்சனை வெடிபொருள் பற்றாக்குறை என்பன போராளிகளுக்கு நெருக்கடியை கொடுத்துக்கொண்டு இருந்தன. அத்துடன் காயமடைந்த போராளிகள் போதிய மருத்துவ வசதியின்றியும் இருந்தார்கள். ஒரு போராட்டத்தில் இருக்கும் இந்த சாதாரண பிரச்சனைகளுக்கு கூட முகம்கொடுக்க முடியாமல் இந்த நெருக்கடிகளை எதிர்கொள்ள முடியாமல் தங்கள் வீடுகளுக்கு செல்ல போவதாக புதிதாக இணைந்திருந்த போராளிகள் சிலர் கூற தொடங்கினார்கள்.

இது போராளிகளுக்கு இடையில் முரணை அதிகரிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியிருந்தது. எனினும் இந்த பிரச்சனை தளபதி ராம் அவர்களுக்கு எடுத்து சொல்லப்பட்ட போது அப்போராளிகளுக்கு போராட்டத்தின் அவசியமும் தேவையும் எடுத்து சொல்லப்பட்டது. இறுதியில் போராளிகள் போராட்டத்தின் தேவையை உணர்ந்து தங்கள் எண்ணங்களை மாற்றிகொள்கிறார்கள்.

எனினும் அம்பாறையில் படையினரின் நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டு அதன் பின்னரான காலத்திலும் அம்பாறை காட்டினுள்ளும் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் முடக்கப்படுகின்றன. இத்துடன் கிழக்கில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கை முழுமையாக முடிவிற்கு வருகிறது. கிழக்கு மாகாணம் முழுமையாக சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் செல்கிறது. கிழக்கு மீட்கப்பட்டுவிட்டதாக சிறிலங்கா வெற்றி கொண்டாட்டங்களை கொண்டாடி மகிழ்ந்தது. கிழக்கின் அபிவிருத்தி என்ற பெயரில் பிள்ளையான் போன்றவர்களை வைத்துகொண்டு சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்ளவும் பௌத்த மதசின்னங்களை நிறுவுவதற்கு வழிகளை சிறிலங்கா அரசு ஏற்படுத்தி கொண்டது. இப்போதும் தொடர்ந்து அதனையே செய்து கொண்டு உள்ளது அத்துடன் மாவீரர்களின் துயிலுமில்லங்கள் அளிக்கப்பட்டு விட்டன. தமிழர்களின் வீர வரலாற்று சின்னங்கள் அனைத்தும் அளிக்கப்பட்டுவிட்டன. இவை எல்லாவற்றையும் தமிழ் ஒட்டுக்குழுக்களான பிள்ளையான் கருணா குழுக்களை தமது பிரதிநிதிகளாக வைத்துக்கொண்டே சிறிலங்கா அரசு நடத்தி முடித்தது. கலையும் விழாக்களும் என களைகட்டியிருந்த கிழக்கு இன்று இருள் சூழ்ந்துபோய் கிடக்கிறது நாளை விடியும் என்ற நம்பிக்கையுடன்.

கிழக்கு மண் முழுவதும் இலக்கப்பட்ட போது வன்னியில் விடுதலைப்புலிகளின் அரசியல் பணிகள் தொடர்ந்து செயற்பட்டுக்கொண்டு இருந்தன. அதாவது போர்நிறுத்த கண்காணிப்பு குழுவினருடனான சந்திப்பு போன்ற செயற்பாடுகளில் விடுதலைப்புலிகள் தொடர்ச்சியாக ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அதே வேளை கிழக்கினை இழப்பதற்கு முன்பாகவே (26.03.2007) அன்று வான் புலிகள் கட்டுநாயக்க விமானப்படைத்தளம் மீதான தாக்குதல் மூலம் அறிமுகப்படுத்தியிருந்த விடுதலைப்புலிகள் தங்கள் வான் தாக்குதலை மேலும் அதிகரித்து இருந்தார்கள். ஆனால் சமாதான காலத்தை பயன்படுத்தி விடுதலைப்புலிகள் தங்கள் வான்படையை உருவாக்கி விட்டார்கள் என்று கூச்சல் இட்டது சிறிலங்கா. சமாதான காலத்தில் விடுதலைப்புலிகளின் பகுதிகளுக்கு சமாதான தூதர்களையும் பேச்சுவார்த்தைக்கு சென்ற தளபதிகளையும் ஏற்றி சென்று வந்த சிறிலங்கா படையின் உலங்குவானூர்த்திகள் அந்த சந்தர்ப்பத்தை தமது புலனாய்வுக்கு பயன்படுத்திகொண்டன. விடுதலைப்புலிகளின் தாக்குதல் இடம்பெறமாட்டாது என்ற துணிவால் வன்னிக்கு பறப்புகளை மேற்கொண்ட சிறிலங்கா

வான்படையின் உலங்குவானூர்திகள் அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தாழ்வாக பறந்து இரணைமடு பகுதியில் உள்ள விடுதலைப்புலிகளின் விமான தளத்தினை கண்காணித்து ஒளிப்படங்களையும் எடுத்திருந்தனர். விடுதலைப்புலிகள் விமானத்தளம் விமானங்களை வைத்திருப்பது உறுதிப்படுத்திய பின் சமாதான காலத்தை பயன்படுத்தி விடுதலைப்புலிகள் தங்கள் விமானப்படையை கட்டியமைத்துவிட்டது போன்று அதனை பெரும் பிரச்சனைக்குரிய போர்நிறுத்த மீறலாக மாற்றி சர்வதேச ரீதியாக பிரச்சாரத்தை மேற்கொண்டிருந்தது மஹிந்த அரசு.

ஆனால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாத போதும் (1998)ம் ஆண்டு மாவீரர் தினத்தன்று முல்லைத்தீவு முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம் மீது மலர்தூவியதன் ஊடாக தங்களிடம் விமான படையினர் இருப்பதை விடுதலைப்புலிகள் உறுதிப்படுத்தி கொண்டிருந்தார்கள் அப்போது விடுதலைப்புலிகளின் விமான படைக்கு கேணல் சங்கர் அவர்கள் பொறுப்பாக இருந்தார். முல்லைத்தீவு வற்றாப்பளை நந்திக்கடல் வெளிப்பகுதியில் விமானத்தை வைத்து வான் புலிகள் பயிற்ச்சியில் ஈடுபட்டார்கள். பின்பு வேறுசில இடங்களிலும் விமானத்தளங்கள் விடுதலைப்புலிகளால் அமைக்கபட்டன.

சமாதான காலத்திற்கு முன்னரே விடுதலைபுலிகளின் படைகட்டுமான வளர்ச்சி உயர்வடைந்தே இருந்தது. சமாதான காலத்தை பயன்படுத்திதான் புலிகள் படைவலுவை அதிகரித்தார்கள் என்பது சிறிலங்கா அரசின் பொய் பிரச்சாரமே. (1998,1999 ) ஆண்டு காலப்பகுதியிலே முல்லைத்தீவு நந்திக்கடல் வெளியில் கிளைடர் ரக விமானம் மூலம் பயிற்சி பெற்ற வான்புலிகள் பின்பு தாக்குதல் விமானங்களை கொள்வனவு செய்தும் பயிற்சியில் ஈடுபட்டு இருந்தார்கள். இதற்கமைவாகவே விமானதளத்திற்கு இசைவான மத்திய நிலையமாக இரணைமடு பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. அதாவது இரணைமடு குளத்தின் மேற் பகுதியை எல்லையாக கொண்டு விமான தளம் அமைக்கப்பட்டு இருந்தது. விமான தளத்திற்கு பாதுகாப்பாக வடக்கு பக்கமாக இருந்த இரணைமடு குளக்கட்டு பகுதிக்கருகில் விடுதலைப்புலிகளின் பயிற்சி தளங்கள் அமைக்கப்பட்டு இருந்தன.

இதனை விட இப்பிரதேசங்களின் பாதுகாப்பிற்காக விமானதளத்திற்கு அருகிலிருந்த கிராம பகுதிகளில் விடுதலைப்புலிகளால் தேர்வு செய்யப்பட்ட மாவீரர்போராளிகுடும்பங்கள்குடியமர்த்தப்பட்டு அவர்களுக்கு அப்பிராந்தியமும் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் அதன் பாதுகாப்பு தொடர்பாக வலியுறுத்தப்பட்டிருந்தது. புதிதாக நடமாடுபவர்கள் தொடர்பாக விழிப்புணர்வுடன் செயல்படுமாறு மக்களுக்கு வலியுறுத்தப்பட்டு உடனுக்குடன் தகவல் அறிவிக்கும் ஏற்பாடுகளும் அவர்களுக்கு செய்துகொடுக்கப்பட்டிருந்தன.

சிறகு பொறுக்க காடுமரம் வெட்ட என இப்பகுதி காடுகளுக்குள் யாரும் நுழைய வேண்டாம் என்று விடுதலைப்புலிகளால் மக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் காட்டினும் சில இடங்களில் வட்ட தகரத்தில் எழுதப்பட்ட எச்சரிக்கைகள் மரங்களில் அடிக்கப்பட்டிருந்தது. இதனை கருத்தில் கொண்டு வேறுபகுதி மக்களும் குறிப்பிட்ட பகுதி காடுகளுக்குள் நுழைவதில்லை. விமான தளத்தின் கிழக்கு பக்கமாக பெரும் காடு காணப்படுகிறது. அதாவது கொய்யகுளம் முத்தையன் கட்டு பெரும் தொடர் காட்டினை மையமாக கொண்டு விமானதளத்தின் பாதுகாப்புக்காக முகாம்கள் பயிற்ச்சி தளங்கள் நிறுவப்பட்டு அதன் பாதுகாப்பு ஊடாக சுற்று ரோந்து பணிகள் மேற்கொள்ளபட்டு நாள்தோறும் பாதுகாப்பு மணிக்கொரு தடவை உறுதிப்படுத்தப்பட்டுக்கொண்டு இருந்தது. இதே போன்று தான் தென்பகுதியில் அம்பகாமம் கரிப்பட்ட முறிப்பு தொடர் காட்டினை மையமாக கொண்டு ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியின் பாதுகாப்பு உறுதிப்படுத்தல் ஊடாகவும் அம்பகாமம் காட்டில் பாரிய பயிற்சி தளங்கள் அமைக்கப்பட்டு முகாம்கள் ஊடாகவும் பாதுகாப்பு பலப்படுத்தப்படுகிறது. மேற்காக ஏ இனையின் வீதியை மையமாக கொண்டு இரணைமடு முருகண்டி கொக்காவில் (18)ம் போர்குற்றம் போன்ற இடங்களில் காட்டு பகுதிக்குள் முகாம்கள் அமைத்து பாதுகாப்புடன் நடவடிக்கை செயற்பாடுகளும் நடைபெறுகின்றது.

இதற்கிடையில் இரணைமடு குளத்தில் படகில் சென்று அடிக்கடி கண்காணிப்பும் நடைபெறும். இவ்வாறு தான் இரணைமடு விமான தளத்தின் பாதுகாப்பு விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்டது. அம்பகாமம் முத்தையன் கட்டு வனப்பகுதி விசுவமடு வனப்பகுதி கல்மடு வனப்பகுதி இவைகள் எல்லாம் அன்று விடுதலைப்புலிகளின் பயிற்சி தளங்கள் நிறைய பெற்ற இடமாகவும் படையணிகளின் முகாம்கள் அமையபெற்ற இடமாகவும் ஆயுத களஞ்சியங்கள் இருப்பிடமாகவும் அதாவது, வெடிபொருள் பகுதி இரவை பகுதி, துப்பாக்கி பகுதி, கனரக ஆயுத பகுதி என்று பல பகுதிகளாக செயற்பட்ட இடங்கள் இங்கு உண்டு.

அதே போல விடுதலைப்புலிகளின் சில வெடிபொருள் உற்பத்தி செய்யும் பட்டறைகள் கூட இங்கு காணப்பட்டன. அதாவது கைக்குண்டு உற்பத்தி எறிகணை உற்பத்தி, படகு உற்பத்தி என பல்வேறு பகுதிகள் பல்வேறு இடங்களில் காணப்பட்டன. இவ்வாறு குறிப்பிட்ட வனப்பகுதிகள் விடுதலைப்புலிகளின் இராணுவ மயமாக்கப்பட்ட பகுதியாகவே காணப்பட்டது. இவற்றுள் காடுகளை குடைந்து புதிய புதிய வீதிகள் அமைக்கபட்டன நடைபாதை வாகன பாதை என பல்வேறுபட்ட வீதிகள் அமைக்கப்பட்டு போக்குவரத்துக்கள் நடைபெற்றது. அதாவது சாதாரணமாக சொல்லுவதனால் விசுவமடு வனத்துக்குள் நுழைந்தால் முத்தையன்கட்டு அம்பகாமம் செல்லகூடிய அளவில் பாதைகள் அமைக்கப்பட்டு இருந்தன. இவற்றின் ஊடாகத்தான் இரணைமடு விமானதளத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இந்த இரணைமடு தளத்தை விடுதலைப்புலிகள் நீண்ட விமானத்தளமாக மாற்றி (2006) ஆண்டு காலப்பகுதியில் பயிற்சியில் ஈடுபட தொடங்கியிருந்த போதுதான் விடுதலைப்புலிகளின் விமானங்கள் வானில் பறப்பதை மக்கள் அறிந்துகொள்ள தொடங்குகிறார்கள். வான் புலிகள் அணி பிறந்துவிட்ட நம்பிக்கை மக்களிடையே பரவலாக காணப்பட தொடங்கியிருந்தது.



தொடரும்...

# சித்த மருத்துவமும் முறிவு நெறிவு சிறப்பு சிகிச்சையும்



**டாக்டர். வெற்றிவேல் சக்திவேல்**
B.S.M.S,P. G. Dip Pub Adm.,M.Sc.

*அரச பதிவு இலக்கம் - 10,294*
*மூலிகை சுக வாழ்வு நிறுவனம் கிளவ் வீதி, தெல்லிப்பளை.*

சித்த மருத்துவர்கள் உடலில் காணப்படும் வன்மப்புள்ளிகளை சிறு ஊசிகளால் குற்றி மயக்கமடையச் செய்து அல்லது விறைக்கச் செய்து சித்தர் அறுவை மருத்துவம் நடைபெற்றதை அறியும் போது வியப்பூட்டும் வகையில் காணப்படுகின்றது. முறிவு நெறிவு பிரிவு சித்தமருத்துவத்தில் நிபுணத்துவ சிறப்பு மருத்துவ சிகிச்சை பிரிவாகக் காணப்படுகின்றது.

எலும்பொட்டி எனும் மூலிகையைப் பசுப்பாலில் கொதிக்க வைத்து ஆறிய பின்னர் குடிக்கலாம். இது எலும்புப் பலத்தை அதிகரிப்பதோடு உடைந்த எலும்பு சேருவதற்கு உதவும். பிரண்டை எனும் தாவரம் எலும்பு போன்ற தோற்றத்தைக் கொண்டது. பிரண்டை எனும் மூலிகை எலும்புப் பலத்தை அதிகரிப்பதால் "வச்சிர வல்லி" என்ற பெயரும் அதற்கு வழங்கப்பட்டுள்ளது. "சதை பிரண்டாலும், சரி செய்திடும் பிரண்டை" என்பது பழ மொழி. எலும்பு அடர்த்தி (Bone Density) குறைந்த நிலை. என்பு முறிவு (Fracture) போன்ற நிலைகளில் பிரண்டைத் துவையல் எடுத்தல் நன்று.

அடிபட்ட கண்டலுக்கு விராலித் தைலத்தைப் பூசும் போது குணமாகும். அடிபட்ட கண்டலில் காயம் இல்லாத நிலையில் கருங்கல்லை தூளாக்கி நன்றாக அரைத்த உள்ளிச் சாறுடன் பூசிக் கட்டலாம். உள்ளி திஷ்ணத் தன்மை கொண்டதனால் கண்டலை அகற்ற உதவும்.

**புக்கை கட்டும் முறை I**

மஞ்சள் மா, நச்சீரகம், பெருஞ்சீரகம், வெந்தயம், வேர்க்கொம்பு, இலுப்பை அரப்பு, மிளகு வகைக்கு 250 கிராம் உழுந்து, பச்சை அரிசி வகைக்கு 500 கிராம். இவற்றைத் தூளாக இடித்து, தூத்துமக்கொத்தான், பிள்ளைக் கற்றாழைச் சாறுவிட்டு காய்ச்சி சிறிதளவு நல்லெண்ணை சேர்த்து புக்கையாக எடுத்தல் வேண்டும். இதில் சேர்க்கப்படும் நல்லெண்ணை, புக்கை பழுதடையாமல் இருக்க உதவும். நோவு எண்ணெய்போட்டு சுடச் சுட புக்கையால் பொட்டணி கட்டி ஒத்தடமிட்டுப் பின் அந்தப் புக்கையைப் பரவிக் கட்டுதல் வேண்டும். இவ்வாறு ஒன்று விட்ட ஒரு நாள் கட்டுதல் வேண்டும். இவ்வாறு 3-4 நாட்களுக்கு கட்ட எந்த நோவும் மாறிவிடும்.

**புக்கை தயாரிக்கும் முறை II**

தூத்துமக் கொத்தான் கொடிச்சாறு, அரிசிமா, உழுத்தம்மா, குரக்கன்மா காய்ச்சி மஞ்சள்மா, கறிமுருங்கைப் பட்டை சேர்த்து கோழிமுட்டை, சாரா யம் விட்டு கட்டுதல். இதில் குரக்கன்மா நீரை எடுக்கும், கறி முருங்கைப்பட்டை வாதத்திற்கு நன்று. சுக்குத்தூளைஅதிக மாகச் சேர்க்கும் போது தோலில் புண்க ளை ஏற்படுத்தலாம் என்பதால் சுக்குத் தூளை குறைவாகச் சேர்க்க வேண்டும்.

**புக்கை தயாரிக்கும் முறை III**

பிள்ளைக்கற்றாழை இடித்து முழுமையாகப் போடுதல். கருகு கற்றாழைச் சாறு சேர்த்து தூத்துமக்கொத்தான், முடக் கற்றான், ஊமத்தை ஆகி யவற்றைச் சேர்த்துப் போட்டு இடிக்க களியாக வரும் நீர்விட்டு எரிந்து வருவது 3 கிலோக்கிராம் எனில் வெள்ளைப்பச்சை அரிசி 750 கிராம், உழுந்து 2 கிலோக்கிராம் சேர்த்து காயவிட்டு இடித்துத் தூளாக்கி எடுத்துத் தகரத்தில் அடைத்து வைத்து தேவையான போது புக்கையாகக் கிண்டிக் கட்டலாம்.

**புக்கைக்கட்டும் முறை iv**

நாவல்பட்டை, ஒதியம்பட்டையைத் தூளாக்கி தூத்துமக் கொத்தான் சாறு விட்டு சிவப்புப் பச்சையரிசிமா, குரக்கன்மா, உளுத்தம்மா சேர்த்து நீர் விட்டு கிண்டி அடுப்பில் சுட வைத்து புக்கை யாகக் கட்டலாம்.


நொச்சி, பருத்தி, ஆமணக்கு, மாவிலங்கம் பட்டை, வாதமடக்கி ஆகியவற்றை இரவு நீர்விட்டு ஊற வைத்து அவிழ்த்த பின்னர் காலையில் திரும்பவும் சூடாக்கி புக்கையை அவிழ்த்து பின்னர் கழுவுவதற்கு பயன்படுத்தலாம்.

**வைரப் பத்து**

நாவல், ஒதியம், கண்டல், பாலை ஆகியவற்றின் பட்டைகளை இடித்து நீர்விட்டு அவித்து பிழிந்து பின்னர் பனங்கட்டி, கரிய பவளம் தேன் சேர்த்து வைரப்பத்தாக முறிவுக்கும் பயன்படுத்தலாம்.

முறிவு ஏற்பட்ட நிலையில் அதனைப் பொருத்திய பின்பு மஞ்சள்மா, தயிர், முட்டை வெள்ளைக்கரு, தூளாக்கிய சவர்க்காரம், சுண்ணாம்பு சேர்த்து வைத்துக் கட்டும் முறையானது ஆடு மாடு முறிவுகளிலும், மனிதனுக்கு ஏற்படும் என்பு முறிவுகளிலும் பயன்படுத்தலாம் என்புகள் அசையாமல் இருப்பதற்கு (Immobilization) மட்டைகள் வைத்துக்கட்டுவர். கொசுத்தேன் பூவரசம் மரப்பொந்தில் இருக்கும். மெடுகு முறிவு நெறிவுக்குக்

கட்டும் மட்டையில் பூசி கட்டலாம். கரிய பவளம் விடத்தல் பிசின், கருஞ் சீரகம், மிளகு, வேர்க்கொம்பு, வசம்பு, பெருங்காயம், செந் சந்தனக்கட்டை சிறிதளவு சாராயத்தில் ஊற விட்டு அரைத்து பின்னர் இரண்டு முட்டை, தேன் இரண்டு அவுன்ஸ், சாராயம் இரண்டு அவுன்ஸ், சேர்த்து முறிவுக் குக் கட்டலாம். சுண்ணாம்பு சிறிதளவு சேர்க்கலாம். அதிகளவில் சேர்த்தால் தோல் புண்களை ஏற்படுத்தும்.



**நோவு எண்ணெய்**

கரிய போளம், வெளுத்தல் பிசின், சாளியா, பெருங்காயம், வேம் பாடல், மஞ்சள், கொறுக்காய்ப் புளி வகைக்கு எட்டு களஞ்சு எடுத்துத் தூள் செய்ய வேண்டியதை தூள் செய்து நல்லெண்ணை, இலுப்பெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகிய ஒவ்வொரு எண்ணெயிலும் இரண்டு போத்தல்கள் வீதம் எடுத்துக் காய்ச்சி பயன்படுத்தலாம்.

புராதன மருத்துவ முறைகளின் அறிவையும் (Knowedge of age old practices), புராதன விஞ்ஞானத்தின் முறையியலையும் அறிவையும் (Methods and knowledge of ancient science), புராதன மருத்துவமுறைகளையும் (Ancient Medical systems), பாரம் பரிய அறிவையும் (Traditional knowledge) பேணிப் பாதுகாப்பதும், (Conservation), ஆவணப்படுத்துவதும் (Documentation), அவை தொடர்பான ஆய்வுகளை (Res erch) செய்வதும், சித்த மருத்துவ அறிவு மக்களிடம் சென்றடைவதும் (Disseminat on of knowledge) அவசரமான, அவசியமான செயற்பாடாக முன்னெடுத்து தமிழர் அறிவுப் புதையல்களை அடுத்த தலை முறைக்கு கையளிப்பது காலத்தின் கட்டாயமாகும்.

05ஆம் பக்க தொடர்ச்சி...

27-03-2023 திகதியன்று வவுனியா, ஒலுமடு, வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தின் சிவலிங்கம் உடைத்து வீசப்பட்டு அழிக்கப்பட்டது.

மேலும் சைவ ஆலயங்களை மாசுபடுத்தி அழிக்க வேண்டும் என்பதற்காக தங்களின் கிறிஸ்தவ அடையாளங்களையும் மறைத்துக் கொண்டும் கிறிஸ்தவ பெயர்களையும் மறைத்துக் கொண்டும் தங்களை தமிழன் என்று அடையாளப்படுத்தியும் தமிழன் என்று கூறிக் கொண்டு தமிழ் பெயரில் தமிழ் அமைப்புகளையும் கட்சிகளையும் உருவாக்கி அதன் தலைவர்களாகவும் செயல்பாட்டளராகவும் தமிழினத்தின் கலாச்சார பண்பாட்டு அடையாளங்களை அழித்து தமிழின அழிப்புகள் செய்வதற்காக சைவ ஆலயத்தின் வாசல்களில் அரசியல் போராட்டங்களை நடாத்திக் கொண்டு இருக்கின்றார்கள்.

பறங்கிய இனத்தவர்களின் கத்தோலிக்க மதத்தின் மதப் போதர்களான பாதிரிகள் தாங்கள் உருவாக்கி வழி நடாத்துகின்ற அமைப்புகளின் மூலமாக நாத்தீக வாதிகள் கம்யூனீஸ்டுகள் சோசலீஸ்டுகள் இலெனிலீஸ்டுகள் மாவோயிஸ்டுகள் கிறிஸ்தவ இஸ்லாமிய அன்னிய அடிமைவாத சிந்தனைவாதிகளான மூடர்களையும், போதை அடிமைகள் மற்றும் சமூக விரோதிகள் என அனைவரையும் அழைத்து வந்து ஆலயச்சூழலில் அணிதிரள வைத்து அரசியல் போராட்டத்தினுடாக அரசியல் ரீதியான குழப்பங்களை உருவாக்கியும் அதனை சாதீய வன்செயலாக மாற்றி அவர்களை கொண்டு ஆலயங்களை தாக்கி அழித்து சிதைக்கும் நோக்குடன் போராட்டங்களை நடாத்தி வருகின்றார்கள்.

இத்தகைய போராட்டங்கள் நல்லூர் கந்தசுவாமி கோயில், கிளிநொச்சி கந்தசுவாமி கோயில், கல்முனை தரவை பிள்ளையார் கோயில், மட்டக்களப்பு மாமாங்ப் பிள்ளையார் கோயில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரர் கோயில் போன்ற ஆன்மீக மேன்மை மிக்க பல சைவ ஆலயங்கள் முன்பாக போராட்டங்களை நடாத்தி இருக்கின்றார்கள்.

ஆலயங்களை மாசுபடுத்தியும் ஆலயங்களுக்கு வருகின்ற அடியவர்களுக்கு பல இடையூறுகளையும் ஏற்படுத்தி தாக்குதல்களை நடாத்தி அவர்களை ஆலயங்களுக்கு வருவதை தடுத்து நிறுத்துவதும் மேலும் ஆலய சூழலை யுத்த பிரதேசமாக மாற்றியமைத்து அதன் மூலமாக நாத்தீக வாதிகள் கம்யூனீஸ்டுகள் சோசலீஸ்டுகள் இலெனிலீஸ்டுகள் இமாவோயிஸ்டுகள் போன்றவர்களை கொண்டு சைவ ஆலயங்களை உடைத்து எறிந்து தமிழர்கள் உடைத்து எறிந்தார்கள் என்று அடையாளப்படுத்துவதற்கே ஆகும்.

ஆலய வாசல்களில் போராட்டங்களை செய்யும் கத்தோலிக்க பாதிரிகளான விஷமிகள் தேவாலயங்கள் மாசுபடக் கூடாது என்பதற்காக தேவாலயங்களின் வாசல்களில் போராட்டங்கள் செய்விப்பது இல்லை. முஸ்லீம்கள் கொலை செய்து போடுவார்கள் என்ற உயிர் பயம் காரணமாக முஸ்லீம்களின் பள்ளிவாசல் முன்பாகவோ போராட்டங்கள் செய்விப்பது இல்லை. ஆனால் சைவக் குடிகள் வெட்கம் மாணம் சூடு சுரனை அற்றவர்கள் என்பதற்காகவே சைவ ஆலயவாசலில் அரசியல் போராட்டங்களையும் சைவ ஆலய அழிப்புகளையும் செய்விக்கின்றார்கள்.

மரணத்தை வென்று சைவத்தையும் தமிழையும் சைவசித்தாந்த நூல்களையும் வாழ்வியல் நெறிகளையும் எமக்கு தந்த முற்போக்கு சிந்தனை திறன் அதிகமுள்ள எம் மூதாதையர்களை விட சிறந்தவர்களை உலகில் எங்கும் காண இயலாது.

ஆனால் மதவாத அரசியல் என்பது ஒழிக்கப்பட வேண்டும் என்று பலர் கூறினாலும் ஜாதிகளை எப்படி ஒழிக்க முடியாதோ அதே போன்றதொரு நிலைப்பாடாகவே உலகம் எங்கிலும் இவ் நிலைமை காணப்படுகின்றது. குறிப்பாக மதவாத அரசியல் என்பது மிகவும் ஆபத்தானது ஒன்று.

**வீட்டு வேலைக்கு ஆட்கள் தேவை**

**வவுனியா - கோயில் குளம் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றிற்கு பணிப்பெண் ஒருவர் உடன் தேவை.**

**தொ.பே :- 077 3142763**

**பணிப்பெண் தேவை**

**வவுனியா நகரில் தாயை இழந்த 23வயதான பெண்ணுடன் சொந்தக்கடையை நடத்துவதற்கு உதவிபுரிய பணிப்பெண் ஒருவர் உடன் தேவை**

**தொ.பே :- 0704845366**

## வாழ்க்கை தத்துவங்கள்

கடன்களும் நினைவுகளும் தேவைக்கு ஏற்ப அளவோடு இருக்க வேண்டும். கடன்களும் நினைவுகளும் அளவுக்கு மீறினால் இரண்டுமே தூக்கத்தை பறித்து விடும்.

வாழ்வில் வரும் வலிகளை சிரித்துக் கொண்டே கடந்து போக பழகிக் கொள்ளுங்கள். அப்படியே சிரித்துக் கொண்டே கடந்து போக பழகிக் கொண்டால் உன்னை விட வலிமையானவர்கள் யாரும் இல்லை இந்த உலகில்.

ஒரு தவறை செய்தால் ஒத்துக் கொள்ள எந்த சூழ்நிலையிலும் தயங்காதீர்கள் அவற்றை சரி செய்து கொள்ள முடியும். ஆனால் செய்த தவறை இல்லை என்று சாதிக்காதீர்கள் பிறகு அவற்றை வாழ்நாளில் சரி செய்ய முடியாது.

உன் பாதையை நீயே உருவாக்கிக் கொள்ளும் தண்ணிராக இரு. வாழ்வில் எதையும் சாதிக்கலாம். அடுத்தவர் பாதையை தடுக்கும் பாறையாக இருந்து விடாதே.

# மகளிர் பக்கம்



## கோடை வெயில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை



***ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மற்றும் மே ஆகிய இரண்டு மாதங்கள் கோடை வெயில் கொளுத்தும் என்பதால் இந்த நேரத்தில் சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. குறிப்பாக நண்பர்கள் 12 மணியிலிருந்து மாலை 3 மணி வரை வெளியே செல்வதை தவிர்க்க வேண்டும், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் கண்டிப்பாக வெளியே செல்லக்கூடாது.***

***மேலும் தினமும் நான்கு முதல் ஐந்து லிட்டர் சுத்தமான தண்ணீரை குடிக்க வேண்டும், நீர்ச்சத்து அதிகமாக உள்ள கம்பங்கூழ் நுங்கு ஆகியவைகளை அருந்தலாம். வெயில் காலம் முடியும் வரை சாம்பார் சாதம் சப்பாத்தி கேழ்வரகு ஆகியவற்றை அதிகம் எடுத்துக் கொள்ள வேண்டும்***

***அதேபோல் இளநீர் மோர் தயிர் தர்பூசணி நுங்கு ஆகியோவற்றையும் அதிகம் எடுத்துக் கொள்ள வேண்டும். பிரிட்ஜில் வைத்த குளிர்ந்த நீரை அருந்துவதை தவிர்த்து மண் பானையில் நீரை ஊற்றி பருகுவது சாலச்சிறந்தது. மேலும் இறுக்கமான உள்ளாடைகளை அணிய வேண்டாம் வெயிலில் செல்பவர்கள் முகம் கழுத்து ஆகிய பகுதிகளில் கிரீம் தடவி விட்டு செல்வது நல்லது.***



## இயற்கையான முறையில் முகத்தை பளபளக்க செய்யும் அழகு குறிப்புகள்

விட்டமின் E மாத்திரைகளை வாங்கி, அதனுள் இருக்கும் எண்ணெயை எடுத்து முகச்சுருக்கங்களில் தடவி மாசாஜ் செய்து வந்தால், சுருக்கங்கள் மறைந்து முகம் அழகாக இருக்கும்.

சோப்புக் குளியல் தான் முழுமையான குளியல் என்றில்லை. கடலைமாவை எலுமிச்சம் பழச்சாறில் குழைத்து, சோப்புக்குப் பதில் உபயோகிக்கலாம். இதேபோன்று, கோதுமைத் தவிட்டையும் உபயோகிக்கலாம். இதனால், சருமத்தில் உள்ள இறந்த செல்கள் எளிதாக உதிர்ந்து தேகம் புத்துணர்வு பெறும்.

நெல்லிக்காய்களின் கொட்டைகளை எடுத்து விட்டு, எலுமிச்சம் பழச்சாறு விட்டு அம்மியில் வைத்து அரைத்து, மாதம் ஒரு தடவை தலையில் தேய்த்துக் குளித்து வந்தால், முடி உதிர்வது நின்று விடும். இளநரை இருந்தாலும், சில நாட்களில் மறைய ஆரம்பிக்கும்.

நான்கு நாட்களுக்கு ஒரு முறை நீராவியில் முகத்தைக் காட்டினால், முகத்தின் நுண்ணிய வியர்வைத் துவாரங்களில் உள்ள அழுக்குகள் வெளியேறும். பருக்கள் வராது.

சிலருக்கு முன் மற்றும் பின் கழுத்து கருமையாகக் காணப்படும். இதைப் போக்க நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும் பீர்க்கங்காய் கூடு வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். குளிக்கும் போது கழுத்தில் நன்கு சோப்பு தடவி பீர்க்கங்காய் கூடால் நன்கு தேய்த்து வந்தால் நாளடைவில் கறுப்பு நிறம் மாறி இயற்கையான நிறம் வந்து விடும்.

வேப்பிலையை தண்ணீருடன் சேர்த்துக் கொதிக்க வைத்து அந்த நீரில் முகம் கழுவி வந்தால் முகம் பளபளப்பு அடையும். முக அழகைக் கொடுக்கும் தேமலை அகற்ற எலுமிச்சம் பழச்சாறுடன் துளசி இலைச்சாறைச் சேர்த்துத் தடவி வரவேண்டும்.

முகத்துக்கு மேக்கப் போடுவதற்குமுன் லேசாக முகம் முழுவதும் பன்னீரைத் தடவினால், சருமம் மென்மையாக இருக்கும். நீண்ட நேரம் மேக்கப் கலையாமலும் இருக்கும்.

உப்பு கலந்த எலுமிச்சம்பழச் சாறை பற்களில் தேய்த்தால், பற்களில் உள்ள கறை மறையும், ஈறுகளில் உள்ள கறை மறையும். ஈறுகள் பலம் பெறும்.



## முகத்தில் உள்ள எண்ணெய் சுரப்பிகளை கட்டுப்படுத்தி முகப்பருக்கள் வராமல் தடுக்கும் வேப்பிலை

வேப்பிலை முகத்தில் உள்ள எண்ணெய் சுரப்பிகள் முகத்தை வறட்சியில் இருந்து பாதுகாக்க உதவுகின்றன. இந்த சுரப்பிகள் தூசு, அழுக்கு போன்றவற்றால் அடைபடும் போது கிருமி தொற்று ஏற்பட்டு முகப்பருக்கள் ஏற்படுகின்றன.

முகத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். முகத்தில் எண்ணெய் வழியாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதிக எண்ணெய் பசை உள்ள சருமம் கொண்டவர்கள் அவ்வப்போது முகத்தை சோப்பு மற்றும் நீரால் கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

முகப்பருக்களை அடிக்கடி கையால் தொட்டுப் பார்க்க கூடாது. நகத்தால் கிள்ளவும் கூடாது. இதனால் கிருமித்தொற்று பரவி அடுத்தடுத்து புதிய முகப்பருக்கள் ஏற்படும். வேப்பிலை சிறந்த கிருமி நாசினியாக செயல்படுகிறது.

வேப்பம் கொழுந்தை அரைத்து முகப்பருக்களில் பூசி 15 நிமிடங்கள் ஊறவிட்டு வெதுவெதுப்பான நீரில் கழுவவும். இது போல் கடலைமாவு, கஸ்தூரி மஞ்சள் தூள், சோற்றுக்கற்றாழை இவற்றையும் பயன்படுத்தலாம். படிகாரம் கலந்த நீரில் முகத்தை கழுவலாம்.


ஆன்டிபயாட்டிக் லோஷன் பயன்படுத்தினால் கிருமித்தொற்றை கட்டுப்படுத்தி முகப்பருக்கள் வருவதை தவிர்க்க முடியும். எந்த மருந்து பயன்படுத்தினாலும் பயன்தர ஒரு மாதத்திற்கு மேல் ஆகலாம். எனவே பொறுமையாக பயன்படுத்த வேண்டும்.

பச்சை காய்கறிகள், பழங்கள் அதிகம் உணவில் சேர்க்க வேண்டும். எண்ணெய் அதிகம் உள்ள உணவுகளை தவிர்க்க வேண்டும். மலச்சிக்கலை கட்டுப்படுத்த வேண்டும். தலையணை உறை, சோப்பு, டவல் போன்றவற்றை ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக வைத்து பயன்படுத்தவும். தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

இதனால் வியர்வை மூலம் தோலின் நுண்துளைகளில் உள்ள அடைப்புகள் நீங்கி சருமம் சுத்தமாகும். பவுடர், அழகுசாதன பொருட்கள் போன்றவற்றை பயன்படுத்துவதை தவிர்ப்பது நல்லது. இவற்றால் எண்ணெய் சுரப்பிகள் அடைபடும் நிலை ஏற்படும்.

## வெயில் காலத்தில் சன் கிரீம் அவசியமா?

சன் ஸ்கிரீனில் உள்ள பிரதானப் பொருளானது, சூரியனின் புறஊதாக் கதிர்களை உறிஞ்சிக் கொண்டு, அது சருமத்தின் ஆழத்தில் உள்ள லேயர்கள் வரை ஊடுருவுவதைத் தடுக்கிறது. காலை 9 மணிக்கே வெளியில் தலைகாட்ட முடியாத அளவுக்கு வெயிலின் உக்கிரம் அதிகமாக இருக்கிறது. 5 நிமிடங்கள் வெயிலில் சென்றாலே தலை முதல் பாதம் வரை கருத்து விடுகிறது. வீட்டை விட்டு வெயிலில் வெளியே சென்றால் மட்டுமல்ல... வெயில் காலங்களில் வீட்டுக்குள் இருக்கும் போதுகூட சன் ஸ்கிரீன் உபயோகிக்க வேண்டியது அவசியம்". சன் ஸ்கிரீன், சன் பிளாக், சன் டான் லோஷன், சன்பர்ன் கிரீம், சன் கிரீம், பிளாக் அவுட்... எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம். எல்லாமே ஒன்று தான். இவை எல்லாமே சூரியனின் கடுமையான பாதிப்புகளில் இருந்து சருமத்தைக் காப்பவை. சூரிய வெளிச்சம் பட்டு சருமம் கருத்துப் போவது, வயதுக்கு முந்தைய முதுமை, சருமச் சுருக்கங்கள் போன்றவை வராமல் தடுக்கக்கூடியவை. சன் ஸ்கிரீனில் உள்ள பிரதானப் பொருளானது, சூரியனின் புறஊதாக் கதிர்களை உறிஞ்சிக் கொண்டு, அது சருமத்தின் ஆழத்தில் உள்ள லேயர்கள் வரை ஊடுருவுவதைத் தடுக்கிறது அல்லது அந்தக் கதிர்களின் தாக்கம் சருமத்தை பாதிக்காமல் காக்கிறது. சன் ஸ்கிரீன் உபயோகிக்கிற காரணத்தினால், எந்தக் கவலையும் இல்லாமல் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் வெயிலில் நிற்கலாம் என அர்த்தமில்லை. சன் ஸ்கிரீன் என்பது சூரியனின் எல்லா கதிர்களில் இருந்தும் சருமத்துக்குப் பாதுகாப்பு அளிக்காது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். கிரீம், லோஷன், ஜெல், ஸ்டிக், ஸ்பிரே என பல வடிவங்களில் சன் ஸ்கிரீன் கிடைக்கிறது.





**அதென்ன எஸ்.பி.எஃப்?**

எல்லா சன் ஸ்கிரீன்களிலும் எஸ்.பி.எஃப் (SPF - Sun Protection Factor) என ஒரு எண் குறிப்பிடப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். குறிப்பிட்ட அந்த சன் ஸ்கிரீனுக்கு எந்தளவுக்கு சூரியனின் பாதிப்புள்ள கதிர்களின் வீரியத்தில் இருந்து பாதுகாப்பு அளிக்க முடியும் என்பதற்கான குறியீடுதான் அது. வெயிலில் சென்ற பத்தாவது நிமிடத்தில் உங்களால் தாக்குப்பிடிக்க முடியாது என்றால், எஸ்.பி.எஃப். 15 உள்ள சன் ஸ்கிரீன் உங்களுக்கு 150 நிமிடங்களுக்கு பாதுகாப்பு தரும்.
அதாவது, 10X15. இது தோராயமான ஒரு கணக்குதான். நீங்கள் வெயிலில் செலவிடப் போகிற நேரத்தைப் பொறுத்து அதிக அளவு எஸ்.பி.எஃப். உள்ள சன் கிரீமை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். தவிர, இது ஒருவரது சருமத்தின் தன்மை, வெயிலின் கடுமை, உபயோகிக்கிற சன் கிரீமின் அளவு என பல விஷயங்களைப் பொறுத்து மாறும்.

எஸ்.பி.எஃப். 75, 100 என்றெல்லாம் கிடைக்கிற சன் கிரீம் சருமத்துக்கு அதிகபட்ச பாதுகாப்பைக் கொடுக்கும் என்பது சிலரது நம்பிக்கை. அதிக அளவு எஸ்.பி.எஃப். கொண்ட சன் கிரீம், UVB கதிர்களிடம் இருந்து தான் அதிகமாகப் பாதுகாக்கும். UVA கதிர்களிடமிருந்தும் சருமம் பாதுகாக்கப்பட வேண்டும். எஸ்.பி.எஃப். 15 உள்ள சன் கிரீம் எல்லாருக்கும் ஏற்றது. அதை வெயில் நேரடியாகப்படுகிற எல்லா பகுதிகளிலும் தடவிக் கொள்வதுடன், ஒவ்வொரு 2 மணி நேரத்துக்கு ஒரு முறையும் மறுபடி தடவ வேண்டும் என்பதே பொதுவான அறிவுரை.

PABA (para-aminobenzoic acid) ஃப்ரீ என குறிப்பிடப்பட்டிருக்கிற சன் கிரீம் சிறந்தது. ஆயில் ஃப்ரீயாகவும் வாசனைகள் அற்றதாகவும், ஹைப்போ அலர்ஜெனிக் என குறிப்பிடப்பட்டதாகவும், கெமிக்கல் கலக்காததாகவும் இருக்க வேண்டும்.

ஆயில் ஃப்ரீ சன் கிரீம் லோஷன் என்றால் சருமத் துவாரங்களை அடைக்காமலும் பருக்களை அதிகப்படுத்தாமலும் இருக்கும்.

Non-comedogenic என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அப்படிஎன்றால் சரும துவாரங்களை அடைக்காது என அர்த்தம்.

எண்ணெய் பசை சருமத்துக்கு... வாட்டர் அல்லது ஜெல் based சன் கிரீம்களே சிறந்தவை. ஆயில் ஃப்ரீ என குறிப்பிடப்பட்டிருக்கிறதா என கவனிக்க வேண்டும்.

வறண்ட சருமத்துக்கு... கிளிசரின் மற்றும் கற்றாழை கலந்தவற்றை உபயோகிக்கலாம். ஆல்கஹால் கலந்த ஸ்பிரே மற்றும் ஜெல் வகைகளைத் தவிர்க்கவும்.

**எப்படி உபயோகிப்பது?**

***முகத்துக்கு உபயோகிக்கிற அதே சன் ஸ்கிரீனை உடலுக்கும் உபயோகிக்கக் கூடாது.***

***பருக்களுக்கு பிரத்தியோக கிரீம் உபயோகிக்கிறவர் என்றால் அதை முதலில் தடவிக் கொண்டு, 20 நிமிடங்கள் கழித்தே சன் கிரீம் உபயோகிக்க வேண்டும்.***





***தூங்கச் செல்வதற்கு முன் முகத்திலுள்ள சன் கிரீமை அகற்றி சுத்தப்படுத்த வேண்டியது அவசியம்.***

***சன் கிரீம் கவரில் உள்ள குறிப்புகளைப் படித்து அதன்படி உபயோகிக்கவும்.***

***வெயிலில் செல்வதற்கு 30 நிமிடங்களுக்கு முன்பாகவே சன் கிரீம் தடவப்பட வேண்டும்.***

***ஸ்பிரே வடிவிலான சன் கிரீம் உபயோகிக்கும் போது கவனம் தேவை. அருகில் புகையோ, நெருப்போ இருக்கக்கூடாது.***

***சன் கிரீமை கண்களில் படாமல் உபயோகிக்க வேண்டும்.***

***குழந்தைகளுக்கு சன் கிரீம் உபயோகிப்பதைத் தவிர்க்க வேண்டும்.***

***எஸ்.பி.எ:ப். 15 உள்ள சன் கிரீம் எல்லாருக்கும் ஏற்றது. அதை வெயில் நேரடியாக படுகிற எல்லா பகுதிகளிலும் தடவிக் கொள்வதுடன், ஒவ்வொரு 2 மணி நேரத்துக்கு ஒரு முறையும் மறுபடி தடவ வேண்டும் என்பதே பொதுவான அறிவுரை. சன் கிரீமை கண்களில் படாமல் உபயோகிக்க வேண்டும். குழந்தைகளுக்கு சன் கிரீம் உபயோகிப்பதைத் தவிர்க்கவேண்டும்.***

# IMF இடமிருந்து இலங்கைக்கு 3 பில்லியன் அமெரிக்க டொலர் கடன்

# முதற் கட்டமாக 333 மில்லியனை பெற்றுக்கொண்ட ரணில்

**கடந்தவார தொடர்ச்சி...**

கௌரவ சபாநாயகர் அவர்களே.

நாம் ஒரு புதிய பயணத்தைத் தொடங்குகிறோம். மேலும் பல பொருளாதார சீர்திருத்தங்களை மேற் கொள்ள வேண்டியுள்ளது. இங்கு தான் நமது வெற்றிக்கான அடிப்படை இருக்கிறது. இவற்றில் சில மறுசீரமைப்புகளை. 2022 இடைக்கால வரவுசெலவுத்திட்டம் மற்றும் 2023 வரவுசெலவுத்திட்டங்களில் முன்மொழிந்து ஏற்கனவே செயல்படுத்தி வருகிறோம். நாங்கள் இன்னும் பல மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்துவோம். அவற்றுள். சில முக்கியமான விடயங்களை நான் வலியுறுத்த விரும்புகிறேன். மேலும். நாம் தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றதும். எதிர்காலத்தில் அமுல்படுத்த எதிர்பார்த்துள்ள மறுசீரமைப்பு செயற்பாடுகள் குறித்தும் இந்த கௌரவ சபைக்கு தெரிவிக்க எதிர்பார்க்கின்றேன்.

**அரச வருமானத்தை அதிகரிக்கும் திட்டம்**

2025 ஆம் ஆண்டுக்குள் முதன்மை பற்றாக்குறையை மொத்தத் தேசிய உற்பத்தியில் 2.3% ஆக மாற்றுவதே எமது இலக்காகும். இலங்கை அரசாங்கத்தின் வருமானம் தற்போது மொத்தத் தேசிய உற்பத்தியில் 8.3% ஆகும். உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில். நமது அரசின் வருமானம் மிகக் குறைந்த அளவில் உள்ளது. இதனால் தான் 2026 ஆம் ஆண்டுக்குள் அரச வருமானத்தை மொத்தத் தேசிய உற்பத்தியில் 15% ஆக உயர்த்த திட்டமிட்டுள்ளோம். துறைவாரி வரிச் சலுகைகள் இல்லாமல் கூட்டிணைக்கப்பட்ட வருமான வரி விகிதம் இப்போது 30% ஆக உயர்த்தப்பட்டுள்ளது.வட் வரியை 8% சதவீதத்தில் இருந்து 15% சதவீதமாக உயர்த்த நாம் நடவடிக்கை எடுத்தோம். வட் வரிக்கு அளிக்கப்பட்டுள்ள விலக்குகளை படிப்படியாக குறைக்கவும். வட் வரி திரும்ப செலுத்துவதை துரிதப்படுத்தவும். எஸ்-வட் முறையை இரத்து செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2025 இல். குறைந்தபட்ச வரி விலக்குடன். சொத்து வரி முறைக்குப் பதிலாக செல்வ வரியொன்றை விதிக்கவும். பரிசு மற்றும் பரம்பரை சொத்து வரியொன்றை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**அரச செலவு முகாமைத்துவம்**

முறையான செலவு முகாமைத்துவம் மூலம் அரச செலவினங்களுக்கான ஒதுக்கீட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். பணவீக்கத்திற்கு ஏற்ப. ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்களை சமநிலை செய்யும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் முதன்மை வரவு செலவுத்திட்டக் கையிருப்பு வரம்பிற்குள் இந்த மாற்றங்கள் செய்யப்படும். அரச நிறுவனங்கள் மற்றும் வலுசக்தி விலை நிர்ணயம்

எரிபொருளின் விலை நிர்ணயம் செய்வதை. அரசியல் அதிகார மட்டத்தில் இருந்து முற்றாக நீக்கப்படும். 2018 விலை சூத்திரத்தின் படியே எரிபொருள் விலை தீர்மானிக்கப்படுகிறது. எதிர்கால செலவு மதிப்பீட்டை கணக்கில் கொண்டு. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மின்சார விலையை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். பாரியளவில் நஷ்டத்தை சந்தித்து வரும் வீதி அபிவிருத்தி அதிகார சபை. ஸ்ரீலங்கா விமான சேவை. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம். இலங்கை மின்சார சபை போன்ற நிறுவனங்களின் இருப்பு நிலைகள் மறுசீரமைக்கப்படும். காலாவதியான இறையாண்மை பிணைகளின் பேரில் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன் தொகையை இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டிய கடன் தொகையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**விலை நிலைத் தன்மை மற்றும் நிதிக் கொள்கை**

பணவீக்க விகிதத்தை மீண்டும் 4% மற்றும் 6%க்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும். இதுவரை பணவீக்கத்தை கணிசமான அளவில் குறைக்க முடிந்துள்ளது. மேலும். 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில். பணவீக்க விகிதத்தை ஒற்றை இலக்க மதிப்பிற்குக் குறைப்பது எங்கள் இலக்கு. இந்த திட்டங்களை செயல்படுத்தும் போது. பணம் அச்சிடுவது படிப்படியாக குறைந்து விடும். இதனால் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை ஈடுசெய்ய. கடன் பெற்றுக்கொள்ளாமல் வருமானத்தை ஈட்டிக்கொள்ள திறைசேரிக்கு நேரிடும். தற்போதுள்ள அந்நியச் செலாவணி. கட்டுப்பாடுகள் மற்றும் விதிமுறைகள் படிப்படியாக நீக்கப்பட்டு. அந்நியச் செலாவணி சந்தையின் செயல்பாடுகள், சந்தை அளவுகோல்களின் அடிப்படையில் தீர்மானிக்க அனுமதிக்கப்படும். தீர்மானிக்கப்பட்ட இலக்குகளின் படி. மத்திய வங்கி வெளிநாட்டு கையிருப்புகளை அதிகரிக்க வெளிநாட்டு நாணயம் கொள்வனவு செய்யப்படும்.

**நல்லாட்சி**

உள்ளூர் நிபுணர்களின் கருத்துக்களை உள்வாங்கி. அரசாங்கத்தின் பலவீனங்கள் குறித்த IMF அறிக்கை ஒன்றைத் தயாரிக்கிறது. ஊழலைத் தடுப்பது தொடர்பாக அரசு மற்றும் நிறுவன கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிய இதனால் வாய்ப்பு ஏற்படும். ஐ.நா சாசனத்தின் பிரகாரம் ஊழல் எதிர்ப்பு சட்டம் தயாரிக்கப்படும். இழந்த சொத்துக்களை மீட்பதற்கான ஏற்பாடுகள் 2024 ஆண்டு மார்ச் மாத்ததிற்குள் சட்டக் கட்டமைப்பில் சேர்க்க எதிர்பார்க்கிறோம். வலுவான நிதிக் கொள்கைகளின் அடிப்படையில் புதிய அரச நிதி முகாமைத்துவச் சட்டம் உருவாக்கப்படும். சலுகை வரி அடிப்படையில் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி பெற்ற நபர்கள். வரிச்சலுகை. வரித் தீர்வைப் பெறும் நிறுவனங்களின் பட்டியல் பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் பகிரங்கப்படுத்தப்படும். பாரியளவிலான பொது கொள்முதல் ஒப்பந்தங்களின் விவரங்களும் பகிரங்கப்படுத்தப்படும்.

**வளர்ச்சி**

சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்புடைய திட்டங்களிலுள்ள சீர்திருத்தங்கள் மூலம் நடுத்தர மற்றும் நீண்ட கால பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் திட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் வர்த்தக சீர்திருத்தங்கள் தொடர்பான செயற்பாடுகள். பெண்களின் தொழிலாளர் பங்கேற்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள். திறன் மேம்பாடு. எரிசக்தி துறை மறுசீரமைப்பு ஊடாக செயல்திறனின்மையையும் செலவினங்களையும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பிலும் இங்கு கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

**எதிர்கால நடவடிக்கை**

IMF திட்டத்தைத்திற்கு அப்பால் சென்ற. பல் பொருளாதார சீர்திருத்தங்களை எதிர்காலத்தில் அறிமுகப்படுத்த எதிர்பார்க்கிறோம். பொருளாதாரத்தைத் திறப்பதன் மூலமும். டிஜிட்டல் மயமாக்குவதன் மூலமும் நிலையான மறுமலர்ச்சியை அடைவதும். நடுத்தர மற்றும் நீண்ட கால உயர் பொருளாதார வளர்ச்சியை அடைவதும் இதன் நோக்கமாகும். அதே நேரத்தில். இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும். நாங்கள் இதுவரை கடைப்பிடித்து வந்த அதே நடைமுறைகளைப் பின்பற்றி அவர்களுடன் திறந்த மற்றும் வெளிப்படைத் தன்மையுடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம். கடனைத் திருப்பிச் செலுத்துதல் தொடர்பில் ஏற்படுத்திக்கொண்ட விதிமுறைகள் குறித்து இறுதி முடிவுகளை எடுப்பதற்கு முன்னர். அனைத்து இருதரப்புக் கடன் வழங்குநர்கள் அதைப் பற்றி தெரிந்து கொள்ளக் கூடிய வகையில் திறந்த முறையொன்றை பின்பற்றுகிறோம். ஏனைய வெளிநாட்டு கடன் வழங்குநர்களின் விடயத்திலும் இதே நடைமுறை பின்பற்றப்படும். அனைத்து கடன் வழங்குநர்களுக்கும் நியாயமான முறையில் மறுசீரமைப்பை மேற்கொள்வது எமது எதிர்பார்ப்பாகும். எமது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுக்கு ஒரு பகிரங்க கடிதத்தை அனுப்பியதன் மூலம் நான் தெரிவித்தது போல். எந்தவொரு வழங்குநர்களுக்கும் கூடுதல் கரிசனை செலுத்துவதில்லை. அவர்கள் அனைவரையும் சமமாக நடத்துகின்றோம். நாங்கள் இதுவரை அவர்கள் அனைவருடனும் வெளிப்படையாகவும் நட்பாகவும் பணியாற்றுவோம். எதிர்காலத்திலும் அவ்வாறே தொடர்ந்து பணியாற்றுவோம். எங்கள் கடன் நிலை குறித்து தொடர்ந்து அறிக்கைகள் வெளியிடப்படும். நாட்டின் கடன் பற்றி எந்த தகவலும் மறைக்கப்பட மாட்டாது.

கௌரவசபாநாயகர் அவர்களே. நாங்கள் கடினமான காலத்தைக் கடந்து வருகிறோம். வரிச்சுமையால் சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் கடுமையான அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்பதை நாம் அறிகின்றோம். பணவீக்கத்தால் ஒட்டுமொத்த சமூகமும் பாதிக்கப்பட்டுள்ளதையும் நாம் அறிவோம். ஆனால் இந்த நேரத்தில் நாம் தற்போது செயல்படுத்தி வரும் கொள்கைகளில் இருந்து விலகிச் செல்ல முடியாது. நாம் எதிர்கொள்ளும் கசப்பான உண்மை இதுவாகும். ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை எங்கள் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய நாங்களும் சர்வதேச நாணய நிதியமும் நடவடிக்கை எடுப்போம். முதல் பரிசீலனை வரும் ஜூன் மாதம் நடைபெறும். தற்போதைய வரி முறையை திருத்துவது குறித்து ஏற்கனவே கவனம் செலுத்தப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட முன்மொழிவுகளை திறைசேரி தயாரித்து வருகிறது. மேலும். பல்வேறு கல்வியாளர்கள் மற்றும் பொருளாதார நிபுணர்கள் இது தொடர்பான முன்மொழிவுகளை முன்வைத்துள்ளனர். அவர்கள் அனைவருடனும் கலந்துரையாட நாம் எதிர்பார்க்கின்றோம். அதன் பின்னரே பொதுவான உடன்பாட்டை நாம் எட்ட முடியும். ஜூன் மாத மதிப்பாய்வின் போது இந்த வரி திருத்தங்களை எங்கள் திட்டத்தில் சேர்க்க IMF உடன் பேச்சுவார்த்தை நடத்துவோம். அதுமட்டுமல்லாமல். காலத்திற்கேற்ப ஏனைய கொள்கை ரீதியிலான திருத்தங்கள் குறித்தும் நாம் ஆலோசிப்போம். இவை உணர்ச்சிகளாலும் போராட்டங்களாலும் தீர்க்கப்படக்கூடியவை அல்ல. இப்பிரச்சினைகள் விழிப்புணர்வோடு. அக்கறையோடும். புத்திசாலித்தனத்துடன் தீர்க்கப்பட வேண்டும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே. நாம் கடினமான காலங்களை கடந்து வருகிறோம். ஆனால் எங்களின் சிரமங்களும். துன்பங்களும் தற்காலிகமானவை. தற்போதைய முயற்சி மற்றும் அர்ப்பணிப்பின் பலனை விரைவில் நாம் பெறுவோம். நாளை நாட்டைக் கையேற்கும் இளைஞர்களுக்காக. நமது எதிர்கால சந்ததியினருக்காக இந்த அர்ப்பணிப்பை நாம் செய்ய வேண்டும். இந்த ஒப்பந்தத்தின்படி அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு முறையான நிதி ஒழுக்கத்துடன் பொருளாதார சீர்திருத்தங்களை அமுல்படுத்தினால். நாட்டின் எதிர்காலத்துக்கு வலுவான பொருளாதார அடித்தளம் உருவாகும். நாம் இந்தப் பாதையை விட்டு விலகினால். கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்ததைவிட மோசமான நிலைக்கு நாடு தள்ளப்படும். சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் மீதான பாராளுமன்ற விவாதத்திற்கான திகதியை மார்ச் மூன்றாவது வாரத்தில் நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன்போது உங்கள் கருத்துக்களையும் உங்கள் அனைவரின் ஆதரவு தருமாறு கௌரவ சபையில் கேட்டுக்கொள்கிறோம். மற்றுமொரு முக்கியமான விடயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். IMF உடன்படிக்கையில் மாத்திரம் நாங்கள் திருப்தி அடைய முடியாது. இது பயணத்தின் முடிவு அல்ல. இது மற்றொரு நீண்ட பயணத்தின் ஆரம்பம் ஆகும். இப்போது நாம் நமது முயற்சியுடன் அந்த வழியில் செல்ல வேண்டும். நாங்கள் நமது கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி கடனை மறுசீரமைக்க வேண்டும். அத்துடன் நாட்டின் வருமானத்தையும் அதிகரிக்க வேண்டும். உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிக்க வேண்டும். வெளிநாட்டு வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் வழிகளை உருவாக்க வேண்டும். உலக சந்தையில் மட்டுமின்றி நமது பிராந்திய சந்தையிலும் நமது பங்கை விஸ்தரிக்க வேண்டும். பாரிய பொருளாதார சீர்திருத்த செயல்முறையை அச்சமின்றி. தொடர்ந்து செயல்படுத்த வேண்டும். இவை அனைத்தும் எளிதான இலக்குகள் அல்ல. ஆனால் நாட்டிற்காக அர்ப்பணிப்புடன் இந்தப் பயணத்தைத் தொடர வேண்டும். இது கடினமானதொரு பயணம். அந்த கடினமான பயணத்தில் நாம் கவனமாக பயணிக்க வேண்டும். நாட்டைக் கட்டியெழுப்புவதே எமது முதன்மையான குறிக்கோளாக இருக்க வேண்டும். முதலாவதாக. இரண்டாவது. மூன்றாவதாக. நாட்டைக் கட்டியெழுப்புவது மட்டுமே எங்களின் இலக்கு. அப்படிச் சிந்தித்தால் இந்தப் பாதையில் வேகமாகவும் வெற்றிகரமாகவும் பயணிக்கலாம்.

கௌரவ சபாநாயகர் அவர்களே. IMF உடன் நாங்கள் செய்த திட்டத்தை நான்கு ஆண்டுகளில் செயல்படுத்தி முடிக்க வேண்டும். ஆனால் நமது பலம் மற்றும் உறுதியைப் பொறுத்து மூன்றிலிருந்து மூன்றரை வருடங்களில் அதனை செய்து முடிக்கலாம். நாம் அதற்கு முயற்சிக்கலாம். இதற்காக கடினமாக உழைப்போம். இங்கே நாம் குறிப்பிட்ட சில விடயங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். முதலாவதாக. சமூகத்தின் கீழ்மட்டத்தில் உள்ள மக்களுக்கு வலுவான சமூகப் பாதுகாப்பு செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். இரண்டாவதாக. ரூபாயை வலுப்படுத்துவதற்கான உத்திகள் மற்றும் முறையான திட்டத்தை செயல்படுத்த வேண்டும். மூன்றாவதாக. ஊழலுக்கு எதிரான சட்டங்களை உடனடியாக இயற்றி செயல்படுத்த வேண்டும். நீதியமைச்சர் இதற்கான சட்டமூலத்தை விரைவில் சமர்ப்பிப்பார். நான்காவதாக. சமூகத்தில் ஏற்படுத்த வேண்டிய ஏனைய கட்டமைப்பு சீர்திருத்தங்களில் கவனம் செலுத்த வேண்டும். அவற்றைக் கண்டறிந்து சீர்திருத்தங்களை ஆரம்பிக்க வேண்டும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே. டி.எஸ். சேனநாயக்க பிரதமராக இருந்த காலத்தில் எமது நாடு வெளிநாட்டு கடன்கள் எதுவும் பெறவில்லை. பிற்காலத்தில் நம் நாட்டின் வருமானத்தில் செலவுகளை செய்யாமல். வெளிநாடுகளில் இருந்து கடன் வாங்கி நாட்டின் செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஒரு பாரம்பரியம் உருவானது. அந்த பாரம்பரியம். புற்றுநோயாக மாறியதால் இன்று நாம் அனைவரும் அவதிப்பட்டு வருகிறோம். நாம் எல்லா நேரத்திலும் கடன் வாங்க முடியாது. கடன் பெறாத தேசமாக மாற நாம் பாடுபட வேண்டும். அதற்காகவே. இந்த இக்கட்டான காலத்திலிருந்து மீள்வதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அடுத்த 10 ஆண்டுகளில் இதுவரை நாம் எடுத்துள்ள அனைத்து கடன்களையும் நாம் செலுத்தி முடிக்க வேண்டும். இந்தப் பாதையில் நாம் சரியாகத் தொடர்ந்தால். அந்த நிலையை அடைய முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அந்தக் கடனைச் செலுத்திய பின்னர். நாட்டின் செலவினங்களைச் சமாளிக்கும் வருமானத்தை உருவாக்கும் வலிமையைப் பெற வேண்டும். முயன்றால் அதனை நம்மால் செய்ய முடியும். அந்த வழியை நாம் பின்பற்றினால். சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகள் நிறைவடையும் 2048 இல் நம் நாட்டை உலகில் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்ற முடியும். இங்கு இன்னுமொரு விடயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தேரவாத பௌத்த நாடுகள் எப்போதும் பொருளாதாரத்தில் ஏழ்மை நிலையில் உள்ளதாக சமீபத்தில். ஒரு கருத்து வெளியிடப்பட்டது. இப்போது தாய்லாந்து இந்த கருத்தை உடைக்க போராடுகிறது. உலகின் தேரவாத மையமாகக் கருதப்படும் நாமும் அந்தக் கருத்தை தகர்த்தெறிய பாடுபட வேண்டும். ஒரு தாயின் பிள்ளைகளாகிய நாம் ஒருமனதாக முயற்சி செய்தால் அந்தக் கருத்தை உடைக்க முடியும். உலகின் பொருளாதார மையமாக இலங்கையை மீண்டும் பிரபலமாக்க முடியும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே. நான் முதலில். பிரதமராக பதவியேற்ற போது. நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் எதிர்க்கட்சிகளின் ஆதரவைக் கோரினேன். ஆனால் எனக்கு அந்த ஆதரவு கிடைக்கவில்லை. அதன் பின்னர் நான் ஜனாதிபதியாக பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதும். எதிர்க்கட்சிகளின் ஆதரவை கோரினேன். ஆனால் கிடைக்கவில்லை. வரவுசெலவுத்திட்ட விவாதத்தின் போது எதிர்க்கட்சிகளின் ஆதரவையும் கேட்டேன். எந்த ஆதரவும் கிடைக்கவில்லை. தற்போதைய பாராளுமன்ற அமர்வின் தொடக்கத்தில் எதிர்க்கட்சிகளின் ஆதரவைக் கேட்டேன். ஆனால் எந்த ஆதரவும் கிடைக்கவில்லை. அந்த சந்தர்ப்பங்களில். அவர்கள் பல்வேறு காரணங்களைக் கூறி ஆதரவளிக்க மறுத்து விட்டனர். எனது நியமனம் அரசியலமைப்புக்கு எதிரானது என்றார்கள். தேசிய பட்டியலிலிருந்து பிரதமரை நியமிக்க முடியாது எனக் கூறினார்கள். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்றுவதல்ல. ராஜபக்ஷாக்களைக் காப்பாற்றுவதே எனது நோக்கம் என்றார்கள். கடினமான தடையை கடக்கப்போவது இலங்கை அன்னை அல்ல நாமல் ராஜபக்ஷ தான் என்றார்கள்.

ஆனால். இலங்கை அன்னையை பொருளாதார தொங்கு பாலத்தைக் கடக்கச் செய்ய நான் பாடுபட்டுள்ளதை சர்வதேச சமூகம் தற்போது ஏற்றுக்கொண்டுள்ளது. எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளில் உண்மையில்லை என்பது தற்போது உறுதியாகியுள்ளது. எதிர் தரப்பு குற்றச்சாட்டுகளுக்கு நான் பதில் சொல்லப் போவதில்லை. கடந்த காலத்தை விமர்சிப்பது என் வேலையல்ல. எதிர்காலத்தை உருவாக்குவதே எனது பணி. கடந்த கால தவறுகள் மீண்டும் நிகழாத வகையில் சட்டங்களையும் விதிகளையும் மற்றும் பின்னணியையும் ஏற்படுத்தி. எதிர்காலத்தை உருவாக்கவே முயற்சிக்கின்றேன். இதற்காக அர்ப்பணிப்பேன். செயற்படுவேன்.

இந்தநாட்டைகட்டியெழுப்பும்பணிகளில்இணைந்து கொள்ளுமாறு இன்றும் எதிர்க்கட்சிகளிடம் கேட்டுக்கொள்கிறேன். உங்களுடன் நான் வாதிடவில்லை. என்னை விமர்சித்த போது அதற்கு பதிலளிக்க முயற்சிக்கவில்லை. எதிர்க்கட்சிகளின் ஆதரவு தேவை என்பதால் அப்படிச் செய்யவில்லை. உங்கள் அரசியல் கருத்துக்களை ஒதுக்கி வைக்கவும். உங்கள் அதிகாரம் குறித்து சிந்திக்கும் முன். நாட்டைப் பலப்படுத்துவது பற்றி சிந்தியுங்கள். ஏனைய அரசியல் கருத்துக்களில் சம்பிரதாயமான முறையில் செயற்படுங்கள். ஆனால் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் முயற்சியில். நிலையான அரசியல் கட்டமைப்பிலிருந்து வெளியே வாருங்கள். பொருளாதாரத்தை உயர்த்த இந்த முயற்சிக்கு ஆதரவு தாருங்கள். ஏனைய விடயங்களின் போது நாம் எதிரணியில் நிற்கலாம். ஆனால் இந்தப் பணிகளின் போது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். மீண்டும் அந்தக் கோரிக்கையை வைக்கிறேன். நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப IMF உடன்படிக்கையை செயல்படுத்த தற்போதேனும் உங்கள் ஆதரவை வழங்கவும். இந்தப் பணியில் அனைவரும் கைகோர்ப்போம்.

# யாழ் நெடுந்தீவு புராதன வெடியரசன் கோட்டை தமிழர்களிடமிருந்து பறிபோகிறது





முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன்

காலத்திற்கு காலம் தமிழ் மக்களுக்கு ஏதோ ஒரு மன உளைச்சலை இந்த பெரும்பான்மை சமூகம் முக்கியமாக கொடுத்துக்கொண்டே இருக்கின்றது. கிட்டத்தட்ட அதை ஒரு சித்திரவதை என்றே சொல்லலாம். இன்று நான் வெடியரசன் கோட்டை சம்பந்தமாக பல விடயங்கள் கேள்விப்படுகின்றோம் அதை திரிபுபடுத்துகின்றார்கள். இவற்றை நேரில் பார்ப்பதற்காக நான் நெடுந்தீவிற்கு சென்றிருந்தேன். அங்கே நெடுந்தீவில் வடதாரகையில் இருந்து நான் இறங்கியதுமே சில அடிகள் முன்னுக்கு செல்லும் பொழுது ஒரு பதாகை வைக்கப்பட்டிருக்கின்றது. அதில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டும் தான் எழுதப்பட்டிருக்கின்றது எழுதப்பட்டவையை வாசிக்கின்ற பொழுது மிகத் தெளிவாக தெரிகின்றது அவர்கள் இந்த நெடுந்தீவும் முற்றுமுழுதாக ஒரு காலத்தில் சிங்கள மயமாக இருந்தது. தற்பொழுது அதை நிரூபிப்பதற்கான முயற்சிகளை எடுக்கின்றார்கள். இங்கே இதுவரைக்கும் அரசாங்கம் களத்தில் இறங்கவில்லை கடற்படையை கொண்டு இதை செய்திருக்கின்றது. அதாவது கடற்படையினர் தான் அந்த பதாதையை அங்கே வைத்திருக்கின்றார்கள்.

இந்த பதாதை கொடுக்கும் விளக்கங்கள் நிச்சயமாக உல்லாசப் பயணியோ அல்லது வரப்போகின்ற இந்தியர்களோ அல்லது தெற்கில் இருந்து வரும் பெரும்பான்மை இனத்தவர் கூட பார்த்து விட்டு அதில் தங்களது அடையாளங்கள் பல இருக்கின்றன என்று தான் சிந்திப்பார்கள். அவர்கள் எங்களது தொல்பொருள் பேராசிரியர் அவர்கள் மிகத் தெளிவாக சொல்லியிருக்கின்றார்.

இங்கு தமிழ் பௌத்தம் இருந்தது தமிழ் பௌத்தத்தின் எச்சங்கள் தான் இன்று பல இடங்களில் இருக்கின்றது. நான் சென்ற நெடுந்தீவில் உண்டு. சுண்ணாகத்தில் உண்டு. பூநகரியில் உண்டு இவ்வாறு பல இடங்களிலும் உள்ளது. தமிழ் பௌத்தத்தின் எச்சங்கள். இவற்றை அவர்கள் மூடி மறைத்து இந்த நாட்டை முழுவதுமாக இதுவொரு பௌத்த நாடு என்றும் பௌத்த நாடு என்று சொல்லும் பொழுது அது சிங்களவர்களுக்கு தான் உரியது போன்று சித்தரிக்க முயலுகின்றார்கள். உண்மையில் பௌத்தம் ஒரு மதம் அதை யாரும் பின்பற்றலாம். எத்தனையோ நாடுகளிலும் இருக்கின்றது.

ஆனால் இலங்கையில் மட்டும் 100 வீதம் இது முற்றுமுழுதாக சிங்களவர்களுக்கு மட்டும் தான் உரியது என்ற நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டு போகின்றார்கள். இதன் மூலம் இங்கு காலம் காலமாக எங்களால் ஆளப்பட்ட நிலம் இவ்வாறான முயற்சிகள் மூலம் இதை எல்லாவிதமான தமிழன் என்ற அடையாளங்கள் இருக்கும் இடங்களையெல்லாம் இல்லாமல் செய்வதை மிக துல்லியமாக அதை கணித்து செய்துகொண்டிருக்கின்றார்கள். விகாரை கட்டப்பட்டதாக சொல்லப்படுகின்ற இடங்களில் சில எழுத்துக்கள் இருக்கின்றன. ஆனால் அது மிகத் தெளிவாக சொல்லப்பட்டது அது தமிழுக்குரியது. அந்த எழுத்துக்கள் எங்களது பேராசிரியர்கள் ஆராய்ச்சி செய்து அதை மிகத் தெளிவாக போட்டிருக்கின்றார்கள். இதன் நிமித்தம் 2007 ஆம் ஆண்டு இந்த இடம் வெடியரசன் கோட்டை என்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. அதன் பின்னர் அவர்களது எண்ணங்கள் எவ்வாறு மாறியதோ தெரியவில்லை 2011 இல் மீண்டும் இது சிங்கள பௌத்தத்திற்கு உரியது என்ற மாதிரியான செயற்பாடுகளை உருவாக்கிக்கொண்டு செல்லுகின்றார்கள். இந்த விடயம் மட்டுமல்ல பல பல விடயங்கள் இங்கிருக்கும் எதையும் எடுத்துவிட்டு தொல்பொருள் திணைக்களம் இங்கு காண்பவை எல்லாம் ஒரு காலத்தில் இங்கு பௌத்தம் இருந்தது விகாரைகள் இருந்தது இடிபட்டு போனது என சொல்லி மீண்டும் அதை கொண்டு வருவதற்கு முயற்சிக்கின்றார்கள்.

அதில்ஒன்றுதான்மிகஅண்மையில்நிலாவரையில் நடந்தது. நிலாவரையில் ஆழம் தெரியாத கிணறு அதற்கு அருகாமையில் உள்ள அரச மரத்திலே ஒரு புத்தர் சிலையை வைத்தார்கள். பின்னர் மக்களின் எதிர்ப்பால் அது எடுக்கப்பட்டது. ஆனால் அவர்கள் எப்படியும் அதை நிறைவேற்றுவார்கள். இவற்றை நிறைவேற்றுவதற்காக தான் ராஜபக்சவும் சரி தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் சரி கடற்படை, இராணுவம், ஆகாயப்படை, காவற்துறை எல்லாவற்றிலும் முழுமையாக இந்த நாட்டில் எமது மண்ணில் வடக்கு கிழக்கில் சிங்களவரைக் கொண்ட அராஜகம் புரியும் ஆயுதம் தூக்கியவர்கள் இவர்களை வைத்துக்கொண்டு எங்களை அடிமைப்படுத்தி ஆக்கிரமித்து தாங்கள் செய்ய வேண்டியவற்றை செய்து கொண்டே



போகின்றார்கள். இன்று நாங்கள் நாவற்குழிக்கு திரும்பும் பொழுது அங்கே புத்த மதம் தான் இங்கு முன்னுரிமையில் இருக்கின்றது என்றவாறு பெரிய ஒரு கோபுரத்தை காட்டியிருக்கின்றார்கள். மிக மிக பெரும்பான்மையினம் பொருளாதாரத்தில் இவ்வளவு தூரம் வீழ்ச்சியடைந்தும் அதை கட்டியெழுப்புவதற்கு முயற்சிகள் செய்யப்பட வேண்டும் முயற்சியாக இங்கிருக்கின்ற தமிழினத்தையும் சேர்த்துக்கொண்டு அவர்களிடம் இருக்கும் வளங்களை எவ்வாறு பெருக்கலாம் என சிந்திக்காமல் இன்னமும் அவர்கள் தமிழனுக்கு எதுவும் கிடைத்துவிடக்கூடாது என்ற மனப்பான்மையில் தான் அவர்கள் வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலைமை தொடரும். இன்று ஜனாதிபதி சொல்லுகின்றார் தாங்கள் வங்குரோத்து நிலைமையில் இருந்து மீண்டுவிட்டோம். வங்குரோத்து நிலையில் தாங்கள் இருக்கின்றோம் என்பதனை கூட முன்னர் சரியாக சொல்லவில்லை. இப்பொழுது சொல்லுகின்றார் மீண்டு விட்டோம் என்று. மீண்டு விட்டோம் என்றால் அதன் அர்த்தம் முழுமையாக இவர்களால் உற்பத்திகளை பெருக்கி வருமானங்களை தேடி செய்ய முடியுமா? அது கேள்விக்குறி. அங்கே IMF பணம் கொடுத்ததாக ஏதோ பெரிய காரியத்தை சாதித்தது போன்று ஜனாதிபதி அறிக்கைவிடுத்தார்.

ஆனால் IMF கொடுக்கின்ற மிக சொற்பமான அளவானது இங்கு இருக்கும் சிறிய காலத்திற்கு இந்த நாடு பட்ட கடனை அடைப்பதற்கு தான் போதுமானதாக இருக்கும். அதை மிகத் தெளிவாக அவர்களுடைய ஆராய்ச்சியாளர்கள் என்ஜியோக்கள் எல்லாரும் மிக விளக்கமாக எழுதியிருக்கின்றார்கள். ஆனால் அவை எல்லாம் மக்களை சென்றடைவதில்லை. அது ஓரளவு படித்த மக்களிடமே தங்கிவிடுகின்றது. உண்மை நிலையை ஜனாதிபதியோ அல்லது அவரை சார்ந்தவர்களோ அல்லது மந்திரிமார்களோ சொல்வதில்லை இது தான் இன்றைய நிலைமை. இப்படித் தான் இந்த கோட்டையில் தமிழ் மக்களுடன் திரும்ப மீண்டும் ஒரு சர்ச்சையை உருவாக்குவதற்கு இந்த வெடியரசன் கோட்டையை சுற்றி அதை எவ்வாறு சிங்கள மயமாக்கலாம் முழு நெடுந்தீவையே எவ்வாறு சிங்கள மயமாக்கலாம் என்பதற்காகத் தான் பதாதை வைக்கப்பட்டிருக்கின்றது. வைத்தவர்கள் நேவி இந்த நேவி நிச்சயமாக தெரியும் இதனால் பெரும் பிரச்சனை எழும் என்பது. அங்கே படம் எடுப்பதற்கு கூட விடுகின்றார்கள் இல்லை தெரியும் பிரச்சனை வரும் என்று ஏனென்றால் அவர்கள் தான் வைத்தார்கள். அங்கு முன்னுக்கு இருப்பவை எவற்றையும் படம் எடுக்க வேண்டாம் என்று சொன்னார்கள். படம் எடுக்கவில்லை.

எனவே எவ்வாறு சுதந்திரமாக இங்கே வாழ்வது. அங்கே பதாகை எழுதப்பட்டது அதை நாங்கள் வாசிக்கலாம் பரப்பலாம் ஏன் பயப்பட வேண்டும் கள்ளம் இருப்பதனால் தானே. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கு இந்த இடத்தில் சொல்லக்கூடியது உங்களது கடற்படையும் இராணுவமும் இங்கிருக்கும் வரை தமிழ் மக்கள் நிம்மதியாக இருக்கமாட்டார்கள். மேலும் மேலும் பிரச்சனைகளை உருவாக்குவார்கள் பிரச்சனைகளை உருவாக்குவது மட்டுமல்ல இந்த இனத்தை பிரித்து தான் ஆள்வார்கள். நீங்கள் எவ்வளது தூரம் நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என முயற்சி எடுத்தாலும் நடக்கப்போவதில்லை. முதலில் இராணுவத்தையும் கடற்படையையும் உடனடியாக விலக்க வேண்டும். அங்கே ஆகாயப்படை முழு பலாலியையும் பிடித்து வைத்திருக்கின்றார்கள். அது மக்களுடைய விமான நிலையம் படையினுடைய விமான நிலையமல்ல. ஆனால் மக்களுக்காக ஒரு சிறிய விமான நிலையத்தை போட்டுவிட்டு அதைக்கூட முழுமையாக நீங்கள் நடத்துகின்றீர்கள் இல்லை. இவ்வாறு போகும் நிலையில் தமிழ் மக்களின் மனதில் இந்த பெரும்பான்மையின ஜனாதிபதியோ பெரும்பான்மையின அரசியல்வாதிகளோ இரண்டாந்தரமாகத் தான் தமிழ் மக்களை கொண்டு செல்கின்றார்கள் என்று தான் எல்லோரது மனதிலும் பதிகின்றது. இதற்காகத் தான் நாங்கள் எங்களது வழியில் செல்கின்றோம் செல்வோம் விட்டு விடுங்கள் என கேட்டுப்பார்த்தோம். இறுதியில் நீங்கள் தோற்றுப்போகும் தருணத்தில் எல்லாம் தருவதாக கூறினீர்கள் ஜனாதிபதியும் கூறினார். இறுதியில் நீங்கள் எங்களை எல்லாம் சேர்த்துக்கொண்டு போனீர்கள் நல்லிணக்கம் என்று. ஐந்து வருடங்கள் கிடைத்தும் எந்த நல்லிணக்கத்தையும் காணவில்லை. ஏற்கனவே எங்களுக்கு தெரியும் எல்லா அரசியல்வாதிகளும் தமிழ் மக்களை ஏமாற்றி தான் பிழைத்தார்கள் என்று நீங்களும் அதில் விதிவிலக்கல்ல.

ஆனால் உங்களை நம்பி உங்களுடன் சேர்ந்தோம் தொடர்ச்சியாக தற்பொழுது நீங்கள் உங்களது நிலையை முற்றாக மாற்றிவிட்டீர்கள். முன்பிருந்த தமிழர்களது பிரச்சனைகளுக்கு ஒரு கரிசணையாக செயற்பட்டு வந்த நீங்கள் தற்பொழுது அப்படியல்ல. எல்லோரது மனதிலும் நீங்கள் இனி தமிழர்களுக்கு ஒரு விமர்சனத்தை கொடுப்பது மிக மிகக் கடினம் ஏனெனில் உங்களது மனதில் அந்த எண்ணம் இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். பத்திரிகை வாயிலாக படிக்கின்றோம் உங்களது செயற்பாட்டை பார்க்கின்றோம் நீங்கள் விடும் ஒவ்வொரு அறிக்கைகளையும் பார்க்கின்றோம் இப்படியான நிலையில் புலம் பெயர்ந்த மக்களும் சரி உள்ளூர் மக்களும் சரி உங்களுக்கு எங்களது ஆதரவு கிடைக்காமல் இருக்கும் பொழுது நிச்சயமாக கிடைக்கும் வாய்ப்பும் இல்லை. அப்படி இருக்கும் பொழுது எப்படி நீங்கள் முழுமையாக பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும். அதை நோக்கி நீங்கள் செல்வீர்களாக இருந்தால் இந்த இனத்தை அங்கீகரியுங்கள் அவர்களுக்கு உரிய உரிமைகளை கொடுங்கள் அவர்களே தங்களது நிலையில் இருந்து இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கேற்ற சுதந்திரத்தை கொடுங்கள் அதை விடுத்துவிட்டு இன்னமும் இனப்பிரச்சனை இனப்பிரச்சனை அதை தீர்க்கின்றோம் அதற்கொரு கூட்டம் போடுகின்றோம். அங்கே அனைத்து கட்சிகளுடனும் பேசுகின்றோம் என ஒவ்வொரு சாட்டையும் சொல்லிக்கொண்டு இந்த நாட்டை நீங்கள் பாழாக்குகின்றீர்கள்.

உண்மையில் இந்த பொருளாதார பின்னடைவிற்கு தற்பொழுது சொல்லக்கூடியது மகிந்த ராஜபக்ச குடும்பம் மட்டுமல்ல இதற்கு பொறுப்பு கூற வேண்டியவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்தவர்களும் சிங்கள அரசியல்வாதிகள் அனைவரும் சேர்ந்து தான் இதற்கு பொறுப்பு கூற வேண்டும்.

# உலக வலம்

## மோடியின் பட்டப்படிப்பு விபரம் அவசியம் இல்லை!

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் பட்டப்படிப்பு விபரங்களை வெளியிட குஜராத் பல்கலைக்கழகத்திற்கு விடுக்கப்பட்ட உத்தரவை அந்த மாநில மேல் நீதிமன்றம் (31) அன்று ரத்து செய்துள்ளது. அத்துடன் இந்த விபரங்களை கேட்டதற்காக டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு குஜராத் உயர்நீதிமன்றம் 25ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.



இந்த அபராத பணத்தை கெஜ்ரிவால் குஜராத் மாநில சட்ட சேவைகள் ஆணையத்தில் வைப்புச் செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. முன்னதாக 2016ஆம் ஆண்டு பிரதமர் மோடியின் முதுகலை பட்டம் குறித்த தகவல்களை அளிக்குமாறு குஜராத் பல்கலைக்கழகத்துக்கு மத்திய தகவல் ஆணையம் உத்தரவிட்டிருந்தது. இதனை ஆட்சேபித்தே குஜராத் மேல் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## சிறுமி வரைந்த ஓவியத்தால் தந்தைக்கு 2 ஆண்டு சிறை!

உக்ரைன் மீது ரஷ்யா தொடங்கிய போர் ஒரு ஆண்டுக்கு மேலாக நீடித்து வருகிறது. இப்போருக்கு எதிராக ரஷ்யாவிலும் போராட்டங்கள் நடந்தன. இதையடுத்து போருக்கு எதிராக கருத்து தெரிவிப்பவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு அலெக்சி மொஸ்கலியோவ் என்பவரின் மகள் மரியா, தனது பள்ளியில் ஒரு ஓவியத்தை வரைந்தாள். அதில் உக்ரேனிய கொடியுடன் நிற்கும் ஒரு பெண்ணையும், குழந்தையையும் நோக்கி ரஷ்ய கொடி அருகே ஏவுகணைகள் செல்லும் ஓவியத்தை வரைந்தாள். இது தொடர்பாக அப்பள்ளி தலைமை ஆசிரியர், பொலிஸ் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார்.

இதை அடுத்து சிறுமியின் தந்தை குறித்து பொலிஸார் விசாரணை நடத்தினர். இதில் அவர் சமூக வலைதளங்களில் ரஷ்யாவின் போர் தாக்குதலை விமர்சிக்கும் கருத்துகளை தெரிவித்து இருந்தது தெரிய வந்தது. இதை அடுத்து அவர் மீது ரஷ்ய ராணுவத்தை இழிவுபடுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டது.

மேலும் அவரிடம் இருந்து 13 வயது மகள் பிரிக்கப்பட்டு சிறுவர்கள் காப்பகத்தில் வைக்கப்பட்டாள். அலெக்சி மொஸ்கலியோவை வீட்டு காவலில் வைத்தனர். அவர் மீதான வழக்கு, மாஸ்கோவின் தெற்கே யெப்ரேமோவ் நகரில் உள்ள கோர்ட்டில் நடந்து வந்தது. இந்த நிலையில் இவ்வழக்கில் கோர்ட்டு தீர்ப்பு வழங்கியது.

அதில், உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலை விமர்சித்து சமூக ஊடகங்களில் கருத்து தெரிவித்த அலெக்சிக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இதற்கிடையே வீட்டு காவலில் இருந்த அலெக்சி அங்கிருந்து தப்பி சென்று விட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அவரை பொலிஸார் தேடி வருகிறார்கள்.

## இலவச பொருட்களுக்கு முந்தியடித்த 12 பேர் பலி!

அண்டை நாடான பாகிஸ்தானில் கடந்த சில மாதங்களாக கடுமையான பொருளாதார நெருக்கடி நிலவி வருகிறது. பொருளாதார நெருக்கடியால் உணவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மக்களுக்குத் தேவையான அரிசி, கோதுமை உள்ளிட்ட உணவு பொருட்கள் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், அந்நாட்டின் கராச்சி மாகாணம் சிந்து தொழிற்பேட்டை பகுதியில் தொண்டு நிறுவனம் சார்பில் இலவச ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டது.

அந்தப் பொருட்களை வாங்க ஒரே சமயத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் குவிந்தனர். அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசல் காரணமாக குழந்தைகள் உட்பட பலர் மயக்கமடைந்து சுருண்டு விழுந்தனர். மயங்கி விழுந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

இந்நிலையில், கூட்ட நெரிசலில் சிக்கி மூச்சுத்திணறி குழந்தைகள், பெண்கள் உட்பட 12 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இச்சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த பொலிஸார் முறையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யாமல் இலவச ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்த தொண்டு நிறுவன நிர்வாகிகளை கைது செய்தனர்.

## நேட்டோவில் புதிய அங்கத்தவராகிறது பின்லாந்து

நேட்டோ அமைப்பில் பின்லாந்து இணைவதற்கு துருக்கியின் பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன் மூலம் நேட்டோவின் 31 ஆவது அங்கத்தவராக பின்லாந்து விரைவில் இணையவுள்ளது.

ரஷ்யாவின் எல்லையில் பின்லாந்து அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நேட்டோவில் புதிய அங்கத்தவர்கள் இணைவதற்கு அதன் 30 அங்கத்துவ நாடுகளும் இணக்கம் தெரிவிக்க வேண்டும். பின்லாந்தும் அதன் அயல் நாடான சுவீடனும் கடந்த மே மாதம் நேட்டோவில் இணைவதற்கு விண்ணப்பித்தன. அணிசேரா கொள்கையை கடைபிடித்த இந்நாடுகள், உக்ரேன் மீதான ரஷ்ய படையெடுப்பின் பின்னர் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு நேட்டோவில் இணைவதற்கு தீர்மானித்தன.

நேட்டோவின் 29 நாடுகள் சுவீடன், பின்லாந்தின் விண்ணப்பத்தை அங்கீகரித்திருந்த நிலையில், துருக்கியும் ஹங்கேரியும் தயக்கம் காட்டி வந்தன. ஹங்கேரி கடந்த திங்கட்கிழமை பின்லாந்தின் இணைவுக்கு அங்கீகாரம் வழங்கியது. இந்நிலையில் துருக்கியின் பாராளுமன்றம் அன்று(30) வியாழக்கிழமை அங்கீகாரம் வழங்கியது. துருக்கியின் ஜனாதிபதி தையீப் அர்துகான் ஏற்கெனவே இதற்கு சம்மதம் தெரிவித்திருந்தார்.

இதன்படி, பின்லாந்து நேட்டோவில் இணைவதற்கான கடைசி தடங்கல் நீக்கியுள்ளது. “நேட்டோவின் 30 நாடுகளும் பின்லாந்தின் அங்கத்துவத்தை அங்கீகரித்துள்ளன. அவர்களின் நம்பிக்கைக்கும் ஆதரவுக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்” என பின்லாந்து பிரதமர் சவ்லி நீனிஸ்டோ தெரிவித்துள்ளார். இதேவேளை, நேட்டோவில் சுவீடன் அங்கத்துவம் பெறுவதற்கு ஹங்கேரியும் துருக்கியும் தொடர்ந்து அங்கீகாரம் வழங்க மறுத்து வருகின்றன.

## 5 இலட்சம் கோழிகளை அழிக்கும் ஜப்பான்

ஜப்பானின் பல்வேறு மாகாணங்களில் கடந்தாண்டு இறுதியில் இருந்து பறவை காய்ச்சல் பரவி வருகிறது. நாட்டிலுள்ள 47 மாகாணங்களில் 26 மாகாணங்களில் பறவை காய்ச்சல் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஹொக்கைடோ மாகாணத்தில் உள்ள ஒரு கோழி பண்ணையில் அன்று(28) டசன் கணக்கான கோழிகள் இறந்தன. அதை தொடர்ந்து நடத்தப்பட்ட பரிசோதனையில் கோழிகள் பறவை காய்ச்சலால் உயிரிழந்தது தெரியவந்தது.

இதையடுத்து பண்ணையில் இருந்து மாகாணத்தின் பிற பகுதிகளுக்கு பறவை காய்ச்சல் பரவுவதை தடுக்க பண்ணையிலுள்ள 5 இலட்சத்து 58 ஆயிரம் கோழிகளை அழிக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

கடந்தாண்டு ஒக்டோபர் மாதம் முதல் ஜப்பானில் பறவை காய்ச்சல் காரணமாக 1 கோடியே 65 இலட்சத்துக்கும் அதிகமான கோழிகள் அழிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு

## சிக்சரை தடுக்கும் முயற்சியில் காயமடைந்த வீரர்!

ஐபிஎல் கிரிக்கெட் தொடரின் முதல் லீக் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் குஜராத் டைட்டன்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 178 ஓட்டங்கள் குவித்தது. இப்போட்டியின் குஜராத் அணியின் நட்சத்திர வீரர் கேன் வில்லியம்சன். சிக்சருக்கு சென்ற பந்தை கேட்ச் பிடிக்க முயன்றபோது பலத்த காயமடைந்தார். பவுண்டரி எல்லையில் துள்ளிக்குதித்து பந்தை பிடித்து உள்ளே வீசிய அவர் கீழே விழுந்தபோது முழங்காலில் பலத்த அடிபட்டது. அவரால் எழுந்திருக்க முடியவில்லை. வலியால் துடித்த அவருக்கு மருத்துவக் குழுவினர் வந்து உதவி செய்தனர். பின்னர் அவர் மைதானத்தில் இருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டார்.

## IPL - இம்முறை 5 புதிய விதிகள் அறிமுகம்!

ஐபிஎல் தொடரில் இம்முறை 5 புதிய விதிமுறைகள் அறிமுகமாகின்றன. போட்டிகளை சுவாரஸ்யமாக்கும் வகையில் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய விதிகளின் விவரம்..

**'இம்பேக்ட் பிளேயர்':** ஐபிஎல் தொடரில் முறை 'இம்பேக்ட் பிளேயர்' என்ற புதிய விதியும் அறிமுகம் செய்யப்படுகிறது. இதன்படி டாஸ் வென்ற பின் வழங்கப்படும் 11 வீரர்கள் அடங்கிய பட்டியலுடன் மாற்று வீரர்கள் 5 பேரின் பெயர்களையும் வழங்க வேண்டும். இதில் இருந்து ஒரு வீரரை ஆட்டத்தின் நடுவே பந்து வீச்சிலோ, அல்லது பேட்டிங்கிலோ மாற்று வீரராக பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த வகையில் ஏற்கெனவே 4 வெளிநாட்டு வீரர்கள் களத்தில் இருந்தால் இம்பேக்ட் பிளேயர் விதிமுறையின் கீழ் வெளிநாட்டு வீரரை களமிறக்க முடியாது. இதனால் இந்திய வீரரரைதான் களமிறக்க முடியும். அதேவேளையில் களத்தில் 3 வெளிநாட்டு வீரர்கள் இருந்தால் புதிய விதிமுறையின்படி மற்றொரு வெளிநாட்டு வீரரை களமிறக்கலாம். மாற்று வீரராக வெளியே செல்பவர் மீண்டும் தனது பங்களிப்பை வழங்க முடியாது. 'இம்பேக்ட் பிளேயர்' விதியை களநடுவரிடம் தகவல் தெரிவித்துவிட்டு விக்கெட் விழும்போதோ அல்லது பேட்ஸ்மேன் காயம் அடையும் போது பயன்படுத்தலாம். முக்கியமான இந்த விதியை 14வது ஓவருக்கு முன்பாக பயன்படுத்த வேண்டும். மாற்று வீரராக வெளியே செல்பவர் 4 ஓவர்களை வீசியிருந்தாலும் 'இம்பேக்ட் பிளேயர்' விதிமுறையின் கீழ் உள்ளே வரும் வீரர் முழுமையாக 4 ஓவர்கள் பந்து வீச முடியும். பேட்டிங் செய்ய முடியும்.குறிப்பாக சென்னை அணியில் அஜிங்க்ய ரஹானே விரைவாக ஆட்டமிழந்து விட்டால் அவருக்கு பதிலாக 'இம்பேக்ட் பிளேயர்' விதிமுறையின் கீழ் ஷிவம் துபே களமிறக்கப்பட்டால் அவர். பேட்டிங் செய்யவும் முடியும். பந்து வீச்சிலும் பங்களிப்பு செய்ய முடியும்.

**'வீரர்கள் பட்டியல்':** வழக்கமாக டாஸ் வீசுவதற்கு முன்பாக விளையாடும் 11 வீரர்களை தேர்வு செய்து நடுவரிடம் பட்டியலை கொடுக்க வேண்டும். ஆனால் ஐபிஎல் தொடரில் இம்முறை டாஸ் வென்ற பிறகு அதற்கு தகுந்தபடி விளையாடும் 11 வீரர்களை தேர்வு செய்து கொள்ளும் புதிய விதிமுறை அறிமுகம் ஆகிறது. மற்றொரு திருப்பமாக நடுவரிடம் விளையாடும் 11 வீரர்களின் பட்டியலை வழங்கிய பின்னரும் மாற்றம் செய்யலாம். ஆனால் இதற்கு எதிரணியின் கேப்டன் சம்மதம் தெரிவிக்க வேண்டும்.

**'வைடு, நோபாலுக்கும் வந்தாச்சு':** கள நடுவர் வழங்கும் வைடு. நோ-பால் ஆகியவற்றை எதிர்த்து மேல்முறையீடு செய்யலாம். இந்த விதிமுறை சமீபத்தில் முடிவடைந்த மகளிருக்கான பிரிமீயர் லீக்கில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. தற்போது இது ஐபிஎல் தொடரிலும் அறிமுகம் ஆகிறது.
**'நகர்ந்தால் 5 ரன் போச்சு':** பேட்ஸ்மேன்கள் பந்தை அடிப்பதற்கு முன்னரே அவர்களது நகர்வுகளை கணித்து அதற்கு தகுந்தவாறு விக்கெட் கீப்பர் இடது புறமோ அல்லது வலது புறமோ சற்று நகர்வார். இதற்கு தற்போது அபராதம் விதிக்கும் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. விக்கெட் கீப்பரின் நகர்வுகள் விதிமுறைக்கு மாறாக இருப்பதை களநடுவர் கண்டறிந்தால்பந்தை டெட்பால் என அறிவிக்கலாம். அல்லது வைடு என்றோ. நோபால் என்றோ அறிவித்து ஒரு ரன்னை அபராதமாக விதிக்கலாம். இல்லையென்றால் பேட்டிங் செய்யும் அணிக்கு 5 ரன்களை கொடுக்கலாம்.
**'நேரத்தை வீண் செய்தால் அவ்வளவுதான்':** நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களையும் 90 நிமிடங்களுக்குள் வீசி முடிக்க வேண்டும். ஒவ்வொரு ஓவரையும் நிர்ணயிக்கப்பட்ட நேரத்துக்குள் வீசி முடிக்க வேண்டும். இல்லையென்றால் வெளிவட்டத்துக்குள் 5 பீல்டர்களுக்கு பதிலாக 4 பீல்டர்கள் மட்டுமே பயன்படுத்த அனுமதிக்கப்படும். இது இறுதிக்கட்ட ஓவர்களில் பந்து வீச்சாளர்களுக்கு பாதகமாக இருக்கக்கூடும்.











இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 02.04.2023 அன்று வெளியிடப்பட்டது.